கல்கி

KALKI 3.11.91 ரூ. 3.00
பொன்விழா ஆண்டு
தீபாவளிச் சிறப்பிதழ்



உள்ளே....

- மீனாட்சி சேஷாத்ரி சிறப்புப் பேட்டி
- வாழ்க்கையில் முன்னேற என்னென்ன தேவை?
- மனசுக்குள் சிலுசிலுக்கும் 'புன்னகை மன்னன்' அருவி
- ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாத மகிமை...
- பிரபலமானவர்களின் வித்தியாசமான பேட்டிகள்


எழில் ஓவியமாக தீட்டப்பட்ட குமரன் சில்க்ஸ்
வியப்பூட்டும் விழா கால வண்ணங்களில் குமரன் சில்க்ஸ்
குமரன் சில்க்ஸ்
புதுப்புது அனுபவங்களின் பிறப்பிடம்
12, நாகேஸ்வரன் சாலை (பனகல் பார்க்) எதிரில் தி.நகர்
சென்னை-600 017 போன்: 443544, 447777.
எமக்கு வேறெங்கும் கிளைகள் கிடையாது
UIPC:KS:3:91

வாழ்க்கையில் வெற்றி பெற...



கடுமையான உழைப்பே முன்னேற்றத்தின் வாசற்படி!

- டாக்டர். எம். எஸ். உதயமூர்த்தி கூறுகிறார் :

ஓர் ஆராய்ச்சி செய்தார்கள். பல விஞ்ஞானிகளின் - கலைஞர்களின் வாழ்வைப் பற்றிச் செய்தார்கள். முன்னுக்கு வந்த அவர்கள் அனைவரிடமும் ஒரு பொதுக் குணம் இருந்தது. கடுமையாக உழைக்கத் தயங்காதவர்களாக - சளைக்காமல் உழைக்கத் தயங்காதவர்களாக அவர்கள் இருந்தார்கள். வேலை செய்யும் போது அவர்கள் வேலைச் சுமையைப் பற்றி நினைப்பதில்லை. லட்சியத்தைப் பற்றிய எண்ணம்தான் அடி மனத்தில் ஓடுகிறது. ஆனால் கவனம் பூராவும் செய்கின்ற வேலையில் - அது வீட்டுத் தோட்டத்தைக் கொத்துவதாக இருந்தாலும் சரி; காரை ரிப்பேர் செய்வதாக இருந்தாலும் சரி. உழைப்போடு லட்சியமும் இருந்ததால் தான் அவர்கள் உலகளாவிய புகழ்பெற முடிந்தது. கடும் உழைப்போடு லட்சியமும் இருந்தால் குப்பை அள்ளுகிற தொழிலில் கூட முன்னேற முடியும் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன்.

ஹூஸ்டன் மாநகரின் ஒரு பகுதி. 'நகரத் தந்தைகள்' எனப்படும் நிர்வாகிகள் அமர்ந்திருந்தனர். வாரம் இருமுறை தெருக் குப்பைகளை ஒவ்வொரு வீட்டிலுமிருந்தும் எடுக்கத் தொழிலாளர்கள் அதிகமாகப் பணம் கேட்டார்கள். ''இதென்ன அநியாயம்! நாமே ஒரு லாரியை வாங்கிக் குப்பையை வாரி விடலாமே. லாபத்திற்கு லாபமும் வரும்!'' என்றார் டாம் பேட்ஜோ.

''அப்படி என்றால் நீயே செய்யேன்! இந்த காண்டிராக்டை உனக்கே கொடுக்

றோம்!'' என்று எல்லோரும் ஏகமனதாகச் சொன்னார்கள்.

டாம்பேட்ஜோ ஒரு சார்ட்டர்டு அக்கவுண்டண்ட். கணக்குத் தணிக்கை வேலை செய்து சொந்தமாகச் சம்பாதிப்பவர். பல்கலைக்கழகப் பட்டதாரியான அவர் தயக்கம் காட்டவில்லை. உடனே குப்பை எடுக்கும் லாரி ஒன்றை வாங்கினார். காலை மூன்று மணிக்கு எழுந்திருந்து, வீடுகளுக்கு முன்னால் தகர டின்களில் இருக்கும் குப்பையை லாரியில் அள்ள ஆரம்பித்தார். ஏழு மணிக்கு வேலை முடியும். குளித்து முடித்துச் சாப்பிட்டு விட்டு எட்டு மணிக்கு அலுவலகம். எவ்வளவோ கஷ்டங்கள்; வண்டி ரிப்பேராகி விடும்; டிரைவர் வர மாட்டார்; வேலை செய்யும் மற்றொரு ஆள் வர மாட்டார் - இப்படி. ஆயினும் அவர் தமது முயற்சியைக் கைவிட்டு விடவில்லை. மாறாக அந்தத் தொழிலிலும் எப்படி முன்னேறலாம் என்று யோசித்தார்.

இரண்டு மூன்று ஆண்டுகளில் தொழிலின் நெளிவு சுளிவுகளைப் புரிந்து கொண்டார் பேட்ஜோ. ''இதில் நல்ல வருமானம் வருகிறது.'' இப்படி ஊருக்கு ஊர், அமெரிக்கா பூராவும் இவரைப் போல் தனியார் பலர் குப்பை அள்ளுவதும் அவருக்குத் தெரியும். ''இந்த நிலையில் அமெரிக்கா முழுமையுமுள்ள இந்தத் தொழிலை இணைத்துப் பெரிய நிறுவனமாக ஆக்கி, இப்போதைய சொந்தக்காரர்களை எல்லாம் அந் நிறுவனத்தின் பங்குதாரர்களாக ஆக்கினால் என்ன?'' என்று யோசித்தார். செயலிலும் காட்டினார்.

முதன் மு த ல ா க அமெரிக்காவில் மாபெரும் குப்பை அள்ளும் நிறுவனம் பிறந்தது. இரண்டாண்டுகளில் கோடிக் கணக்கில் லாபம்!



"பக்தியே வெற்றியின் சக்தி!"

-சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் கூறுகிறார்

வெற்றிக்கு அடிப்படையாக பக்தி அவசியம் தேவை. பக்தி இருந்தால் மட்டுமே கடவுளின் அநுக்கிரகம் கிடைக்கும். அது கிடைத்து விட்டால் எல்லா வெற்றிகளும் வீடு தேடி வரும்.

உலகத்தில், பன்னிரண்டே நாளில் பகவானைத் தரிசித்தவர் கண்ணப்ப நாயனார் ஒருவர் மட்டும்தான். அவருக்குப் பக்தியைத் தவிர வேறெதுவும் தெரியாது. 'ஈராறு நாளில் கண்ணப்ப வல்லேன் அல்லேன்' என்று ஒரு தோத்திரமே உண்டு.

ஆக, பக்திதான் வெற்றிக்கு முதற்படி.

அதிர்ஷ்டம் என்பது ஒருவனது முற்பிறவிப் பயன். 'கொடுத்து வைத்தவன்' என்கிறோமே அதன் பொருள், பூர்வஜன்ம புண்ணியம் என்பதுதான். 'பதவி பூர்வ புண்யானாம்' என்று குறிப்பிடுவதும் இது தான்.

ஆனால் இது கலியுகம். நல்லது

செய்தால் நன்மையும், கெட்டது செய்தால் தீமையும் அந்தந்தப் பிறவியிலேயே கிடைத்து விடுகிறது. 'அடுத்த பிறவியில் தானே பலன்?' என்று அலட்சியமாயிருந்து விடாமல், இந்தப் பிறவியிலேயே நல்லது செய்து, பக்தியை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்த வேண்டும். பக்த கோரா கும்பர், தியாகராஜ சுவாமிகள் முதலியோரின் வாழ்க்கைச் சரிதங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். ஜலத்தினால் விளக்கு எரிய வைத்த ராமலிங்க சுவாமிகளுக்குப் பக்தியைத் தவிர வேறு என்ன தெரியும்? அந்த பக்திதான் அவரது சக்தி.

அறிவுத் திறன் இருக்கலாம். உழைப்பு இருக்கலாம். சாமர்த்தியம் இருக்கலாம். ஆனால் அந்த வெற்றி நிலைத்து நின்று ஒருவன் புகழோடு பேசப்படுவதற்கு ஒருவனுக்குப் பக்தியும் கடவுளின் அநுக்கிரகமும் அவசியம். இல்லையெனில் லோகாதய வெற்றிகளெல்லாம் கானல் நீரைப் போல் ஆகிவிடும்.

மனிதனை உயர்த்துவது தன்னம்பிக்கை

- சிவசங்கரி கூறுகிறார்

நாளைக் காலையில் பொழுது விடியப் போகிறது... பூக்கள் மலரப் போகின்றன என்பது நம்பிக்கை. இது பொதுவான அஸ்திவாரம் மாதிரி. மேலே எழுப்பப்படுகிற கட்டடம்தான் மனிதனின் தன்னம்பிக்கை.

எஸ். ஐ. இ. டி. யில் நான் பி.எஸ்ஸி., விலங்கியல் படித்த காலம். பேராசிரியை இக்தியாஸ் பேகம் இரண்டு கனமான புத்தகங்களை என் கரங்களில் திணித்து ''சிவசங்கரி! இவற்றை வைத்துக் கொள் உன் ரெஃபரன்ஸு"க்காக. நீ முதல் வகுப்பில் தேர்ச்சி பெற வேண்டும்'' என்று சொன்ன போது திணறிப் போனேன்.

கல்லூரியிலிருந்து வீடு திரும்பிய போது வழக்கம் போல் அப்பா விசாரித்தார், ''என்னம்மா? எப்படி?'' என்கிற மாதிரி. சொன்னேன். ''என்னால் எப்படியப்பா முடியும்?'' என்று கேட்டேன்.

''உன்னால் நிச்சயமாக முடியும். உன்னுடைய லெக்ச்சரருக்கு உன் மீதுள்ள நம்பிக்கையை விட உன் மீது உனக்கு அதிகம் நம்பிக்கை வேண்டாமா?'' என்று கேட்டு விட்டு ஆங்கிலத்தில், "If I want to do a thing, it shall be done.. it will be done" என்கிற தன்னம்பிக்கையும் உறுதியும் வேண்டும்'' என்றார்.

உடனே மாடிக்குப் போய் இந்த வரிகளைப் பென்சிலால் எழுதி என் பார்வையில் படுகிற மாதிரி படிப்பறையில் வைத்துக் கொண்டேன். தேர்வுக்குப் பதினைந்தே நாட்கள் இருந்த நேரம். தினமும் எனக்கு அப்பா தந்த நம்பிக்கையின் விதை ஊக்கப்படுத்தியது. தேர்வில் முதல் வகுப்பு மட்டுமில்லை; பல்கலைக்கழக 'ராங்க்' கூடக் கிடைத்தது.

பிரச்னைகள் வரத்தான் செய்யும். துணிவுடன் அவற்றை எதிர்கொள்ள வேண்டும். என் கணவர் சொல்வார். ''ஒரு பிரச்னை ஏற்பட்டால் அதற்குத் தீர்வு காண முயற்சி செய். அது சரிப்பட்டு வராமல் போனால்



வேறொரு தீர்வைக் கண்டுபிடி. அதுவும் கைகொடுக்கவில்லையானால் தைரியமாக உண்மையை - யதார்த்தத்தை ஏற்றுக் கொள். அதில் ஒன்றும் தப்பே இல்லை.''

இன்று நான் ஏதாவது சாதித்திருக் கிறேன் என்றால் அதற்கு அடிப்படை தன்னம்பிக்கை.

மரத்துக்கு வேர் மாதிரி, மனிதனுக்குத் தன்னம்பிக்கை. கூடவே ஓர் எச்சரிக்கை! தன்னம்பிக்கை - ஒரு சின்னதான - மெலிதான கோட்டில் அகங்காரம், மமதை, திமிர், கர்வம் என்றெல்லாம் விபரீதமாக உருமாறி விடக்கூடும். அதற்கு ஒருபோதும் இடம் தரக் கூடாது.

"சாதனையின் அடிப்படை விடாமுயற்சி"

- என்கிறார் டாக்டர் சாலமன் விக்டர்



ஆங்கிலத்தில் ஒரு வாக்கியம் உண்டு: 99 சதம் பெர்ஸ்பிரேஷன்; ஒரு சதம் இன்ஸ்பிரேஷன் என்று. இதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. சோர்ந்து போய் விடாமல், முயற்சியைத் தொடர வேண்டும் என்பதை வலியுறுத்தத்தான் 'விடாமுயற்சி' தேவை என்கிறோம்.

விடாமுயற்சி மட்டும் இருந்து விட்டால் போதுமா? அதற்கு உரிய பலன் கிடைக்காவிடில் என்ன முயற்சி எடுத்தும் வீண்தானே? - என்று கேட்கலாம். பலன் கிடைக்கக்கூடிய சூழ்நிலையும் உருவாக வேண்டும் என்பதே என் அழுத்தமான கருத்து. மேலை நாடுகளில் உழைப்புக்கும், விடாமுயற்சிக்கும் அங்கீகாரமும், பாராட்டும் கிடைக்கிற சூழ்நிலை இருப்பது போல், நம் நாட்டிலும் உருவாக வேண்டும். அங்கே, ஒரு தனி மனிதனின் விடா முயற்சியால் சாதனை படைக்கும் சமுதாய அமைப்பு அமைந்திருக்கிறது. ஊக்கத்துக்கும், விடாமுயற்சிக்கும் அங்கே அளிக்கப்பட்டு வரும் பரிசுகளும், வாய்ப்புகளும் தூண்டுகோல்களாகவே இருக்கின்றன. நம் நாட்டிலும் இந்தப் பக்குவம் வர வேண்டும். சீனியாரிடி ஒன்றுக்கே முன்னுரிமை வழங்கிடாமல் தகுதிகளுக்கும் முயற்சிகளுக்கும் ஊக்கமும், ஆக்கமும் தரும் முறை வழக்கத்தில் வரும் போது தான், இளைஞர்களிடையே மனப் புழுக்கம் மறைந்து, எந்தச் செயலிலும் விடாமுயற்சியோடு ஈடுபாடு கொள்ளும் நிலை உருவாகும்.

தங்கப் பதக்கம் வாங்கியவன் அடுத்த கட்ட கோர்ஸுக்குத் தேர்வு செய்யப் படாமல் புறக்கணிக்கப்படுகிறான். சமூகம் அவனது முயற்சிக்குப் பரிவு காட்டும் போதுதான் பலன் கிடைக்கும். இந்த நியாயமான சீர்தூக்கிப் பார்க்கும் நிலை, தனிமனிதனின் விடாமுயற்சியோடு கை கோத்துக் கொண்டு விடும் போது, நாடு எத்தனை வேகமாக முன்னேறும் என்று நினைத்துப் பார்ப்பது பொருத்தமானது.

'விடா முயற்சி' என்று நான் குறிப்பிடுவது, எதைச் செய்தாலும் முழு மனத்தோடு, 'இது சிறப்பானதாக இருக்க வேண்டும்' என்ற ஈடுபாட்டோடு, செய்ய வேண்டும். அந்த விடாமுயற்சி அத்தோடு நின்று விடாமல், அடுத்த முறை அதே பணியைச் செய்யும் போது, முன்பு காண்பித்த திறமையை விட இன்னும் அதிகமாகப் பயன்படுத்தி, அதைச் சாதனையாக்க முயல வேண்டும்.

அமெரிக்கர்கள் முன்பு நிலவில் விண்வெளிக் கப்பலில் போய் இறங்கினார்கள். 'அப்பாடா, சாதனை பண்ணி விட்டோம்!' என்று உட்கார்ந்து விடவில்லை. இப்போது வீனஸுக்கு விண்வெளிக்கலம் செலுத்தப் போகிறார்கள். இதுதான் விடாமுயற்சி.

எது சரி, எது தவறு என்று பகுத்து அறியும் ஆற்றல்;

எதை மாற்றலாம், எதை மாற்ற இயலாது என்று அறியும் திறன்;

மாற்ற இயலாததை மாற்ற முயலும் பணியில் ஈடுபட்டு நேரத்தை வீணாக் காதிருக்கும் அறிவுக் கூர்மை;

இவை இல்லை என்றால் வாழ்க் கையில் வெற்றிகளைக் காண இயலாது!



"அறிவுக்கூர்மை -சக்தி மிக்க ஆயுதம்"

- திருமதி ஒய்.ஜி. பார்த்தசாரதி

சரியானதை, சரியான நேரத்தில், சரியான இடத்தில் செய்யும் திறமையை அளிப்பதே அறிவுக் கூர்மைதான்.

1958-ல் நான் பள்ளியை ஆரம்பித்த போது வெறும் பட்டதாரிதான். நான் பி.எட். செய்யவில்லை என்றால் என்னை விட அதிகம் படித்த, என் கீழ்ப் பணியாற்றும் ஆசிரியைகளை எப்படி மேற்பார்வையிட முடியும் என்று தோன்றிற்று. 47ல் பட்டதாரியான நான், 69ல், அதாவது 22 வருடம் கழித்து மைசூரில் சம்மர் கோர்ஸும், கரஸ்பான்டென்ஸ் கோர்ஸுமாகச் செய்து பி.எட். பட்டம் பெற்றேன். தெற்கு மண்டலத்தில் தங்கப் பதக்கம் வாங்கினேன். ஆண்கள் பள்ளிக்கு ஒரு பெண்மணி பிரின்ஸிபல் ஆக இருக்க முடியாது என்று சென்னைப் பல்கலைக் கழகம் வாதிட்டது. அகில இந்தியப் பெண்கள் மாநாட்டுக்கு, காஷ்மீர் போயிருந்த போது, அங்கே வந்திருந்த இந்திரா காந்தி அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். பெண்கள் பள்ளிக்கு ஆண்கள் ஆசிரியர்களாகவும், தலைமை ஆசிரியர்களாகவும் இருக்கும் போது, ஆண்கள் பள்ளிக்கு ஒரு பெண்மணி தலைமை ஆசிரியையாக இருப்பதில் என்ன தவறு? ஏன் இந்தப் பாரபட்சம் என்று எடுத்துக் கூறினேன். வலிமையோடு வாதிட்டதைக் கேட்ட இந்திரா காந்தி, இப்படி பாரபட்சம் காட்டக் கூடாது என்று சென்னைப் பல்கலைக் கழகத்துக்குத் தீர்மானம் அனுப்பி வைத்தார். அப்போதைய துணைவேந்தர் வேறு வழியில்லாமல் அதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டியிருந்தது.

சரியான இடத்தில், சரியான நேரத்தில் சரியானதை எடுத்துரைக்கும் அறிவுத்திறன் என்பதற்கு இதை உதாரணமாகக் கூடச் சொல்லுவேன்.

எதிராளியை மடக்கிப் போட்டு விடும் சாமர்த்தியம் இல்லை என்றால் முன்னேறுவது கடினம். மைசூரில் ரீஜனல் காலேஜ் அஃப் எஜுகேஷனில் நான் பெற்ற பி.எட். பட்டத்துக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் அங்கீகாரம் தர முடியாது என்று சொன்ன போது, அதே பல்கலைக் கழகத்தில் எம். எட். பண்ணினேன்!

அறிவுத்திறன் சவால்களை ஏற்று வாழ்க்கையில் உயரவும், சமயோசிதமாகச் செயலாற்றவும், சக்திவாய்ந்த ஓர் ஆயுதம்.



படம் : ராஜன்

"பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல் –வள்ளுவரே சொன்னவழி!"

– சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தர் சாதிக்

ஒவ்வொரு தனிமனிதன் வெற்றியிலும் மற்றவர்களுக்கும் பங்கு இருக்கிறது. 'யாரையும் நம்ப முடியாது; எல்லா வேலையையும் நானே செய்வேன்' என்று எல்லாப் பொறுப்புகளையும் தோளில் சுமந்து கொள்கிறவன் வேகமாக முன்னேற முடியாது. பாதிப் பயணத்தில் தளர்ந்து போவான். அவன் செய்கிற பணிகளும் ஒழுங்கின்றிப் போக வாய்ப்புண்டு.

எனவே, ''இதனை இவன் முடிப்பான் என்று ஆராய்ந்து...'' என்று வள்ளுவர் சொன்னது போல் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இது ஒரு give and take policy தான்.

நான் அண்ணாமலையில் விரிவுரையாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்த போது, பேராசிரியர் ராஜாராம், முதல்வர் கர்னல்பால், ஆகியோர் எனக்குப் பல பொறுப்புகளைக் கொடுத்து நிறைவேற்றச் சொல்லியிருக்கிறார்கள்; பலர் செய்யத் தயங்கிய வேலைகளை என்னைத் தேடி ஒப்படைப்பார்கள். குறிப்பாகப் பொறியியல் வல்லுனர்களுக்குத் தேவையான மெட்ரிக் முறை அளவு அட்டவணையை நான் திறமையாகத் தயாரித்துக் கொடுத்துப் பாராட்டுப் பெற்றேன்.

சென்னைக்கு வந்து அண்ணா பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய போதும் சரி; எம். ஐ. டி.யில் பணியாற்றிக் கொண்டிருந்த போதும் சரி; துணைவேந்தரும், சிறந்த கல்வியாளருமாகிய வி. ஸி. குழந்தைசாமி என்னுடைய திறமைகளைக் கண்டுணர்ந்து அவற்றை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். பல திட்டப் பணிகளிலும், கமிட்டிகளிலும் என்னை நியமனம் செய்து என்னிடம் வேலை வாங்கினார். அவற்றையெல்லாம் நான் சரியாகச் செய்து முடித்ததால், துணைவேந்தர் மகிழ்ந்ததோடு, எங்களுக்கு மட்டுமல்லாமல் பல்கலைக் கழகத்துக்கும் நல்ல பெயர் கிடைத்தது.

இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக நான் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு பொறுப்புகளைப் பகிர்ந்தளித்து, என்னை மற்றவர்கள் ஊக்குவித்து என் திறமைகளை வளர்த்துப் பயன்படுத்திக் கொண்டது போலவே நானும் செயல்பட எண்ணியுள்ளேன். அதன் முதல் கட்டமாக அதிகாரிகளை மட்டுமல்லாமல், குமாஸ்தாக்களையும் கூப்பிட்டு உரையாடுகிறேன்; அவர்கள் கருத்துக்களைக் கேட்டறிகிறேன். அதில் அவர்களுக்கு ஏக பெருமை. இதனால் ஏற்படும் ஊக்கத்தால் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் திறமையாகப் பரிமளிக்கும் என்பதிலும் அதன் மூலம் பல புதிய திறமைசாலிகள் உருவாவார்கள் என்பதிலும் ஐயமேயில்லை.

‘கற்பனா சக்தியே காரியங்களைச் சாதிக்கும்!’’



– எம். பி. நிர்மல், (முதன்மை மேலாளர், இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி, நுங்கம்பாக்கம் கிளை)

கற்பனா சக்தி, கதை எழுதுவதற்கு மட்டுமல்ல, வாழ்க்கையில் முன்னேறவும் தேவை. அது எல்லோரிடமும் உள்ளது. பயன்படுத்தத் தெரிய வேண்டும்.

நம்முடைய மனசில் தேவதையும் இருக்கிறது; பிசாசும் இருக்கிறது. எது உசுப்பி விடப்படுகிறதோ அதைப் பொருத்தே விளைவு உண்டாகிறது. ஒரு சின்ன நிகழ்ச்சி. விமானம் புறப்பட்டு ஹைதராபாதில் இறங்கியது. டெல்லிக்கு வேறு விமானம் மாற வேண்டும். ''அந்த டெல்லி ஃப்ளைட் தாமதமாகி விட்டது. ஐந்து மணி நேரம் காத்திருங்கள்'' என்று அறிவிக்கப்பட்ட போது எல்லோரும் கொதிப்படைந்தார்கள். ஆனால் ஒருவர் மட்டும் ''ஹைதராபாத் மியூசியம் மிகவும் சிறப்பானது. இந்த ஐந்து மணி நேர இடைவெளியில் அதைப் பார்க்கலாமே'' என்று புறப்பட்டு விட்டார்! அவர் தேவதையைத் தூண்டி விட்டவர்.

இன்னும் ஒரு மேலை நாட்டு நிகழ்ச்சி. ஒரு நிறுவனத்தின் 'பாக்கிங்' பிரிவில் அநியாயமாகத் தாமதம் ஏற்பட்டது. காரணம் என்ன என்று ஆராய்ந்தார்கள். பாக்கிங் செய்யத் தரப்பட்ட செய்தித் தாளைத் தொழிலாளர்கள் படித்துக் கொண்டே பொழுதுபோக்குகிறார்கள் என்பது தெரிந்தது. அச்சிடப்படாத பழுப்புத் தாள் பயன்படுத்துவது சிக்கனமானது அல்ல. யோசித்தார்கள். பார்வை யிழந்தவர்களையே இந்த வேலையில் ஈடுபடுத்தி வெற்றியும் கண்டார்கள். கருணை காட்டியதாகவும் ஆயிற்று. வேலையும் துரிதமாக முடிந்தது!

தேனாம்பேட்டை ஐ. ஓ. பி. கிளைக்கு நான் வந்ததும் அண்ணாசாலையை யொட்டி 'கார் பார்க் வசதியோடு வங்கி' என்று சிந்தனை பிறந்தது. 'வண்டியை நிறுத்தி, வங்கி வசதி பெறுங்கள்' என்கிற பொருளில் 'PARK 'N' BANK என்ற சொற்றொடரை உருவாக்கி விளம்பரப்படுத்தினேன். ஆனால் பிரமாதமான வரவேற்பு இல்லை. சென்னை நகரில் வங்கிகளில் மோட்டார் வாகன வரி செலுத்துவது என்று நடைமுறை ஏற்பட்டது. இந்தச் சேவையில் 140 வங்கிக் கிளைகள் பொறுப்பேற்றன. 'மூன்று நிமிடத்தில் இரசீது தருவோம்; இலவசமாய் கார் சுத்தம் செய்யப்படும்' என்றெல்லாம் அறிவித்தோம். பலன் கிடைத்தது. 1989ம் ஆண்டில், 2,20,000 வண்டிகளில் 53,000 வண்டிகளுக்கான வரித் தொகை தேனாம்பேட்டைக் கிளையில் மட்டும் வசூலிக்க முடிந்தது. வரிசெலுத்த வந்தவர்கள் பலர், சீக்கிரமே வங்கியில் கணக்கு வைத்துக் கொள்ளவும் ஆரம்பித்தார்கள்!

வங்கியில் ஏராளமான புத்தகங்கள் பத்திரிகைகள் சேர்ந்து இடம் அடைத்துக் கொண்ட போது, ஓர் அறிவிப்புச் செய்தேன். ''இது புத்தக வங்கி, தேவையான நூல்களை வாடிக்கையாளர்கள் இலவசமாய் எடுத்துச் சென்று படித்துத் திருப்பித் தரலாம்.'' வாடிக்கையாளருக்கு இந்த சேவை மகிழ்ச்சி தந்தது.

ஒரு நண்பர் கேட்டார், ''புத்தகங்கள்

திரும்பி வராவிட்டால்?'' என்று.

''திரும்பி வந்தால் நல்லது. திரும்பி வராவிட்டாலும் நல்லது. இடம் காலியாகிறதே'' என்று பதில் சொன்னேன்.

கற்பனா சக்தி என்னும் போது அதில் எதிர்காலத்தை எட்டிப்பார்த்து முந்திக் கொள்வது என்பதும் உள்ளடங்கும். ஒரு நண்பர் புகைப்பட ஸ்டுடியோ வைத்துப் பிரபலமடைந்தார். ஜெராக்ஸ், வந்தது. எல்லோரையும் முந்திக் கொண்டு அதில் ஈடுபட்டார். வீடியோ வந்த போது, அதில் முந்திக் கொண்டு ஈடுபட்டார். இப்போது காமிரா தயாரிக்கும் அளவுக்கு முந்திச் செயல்படுகிறார். இது போல் முந்திச் செயல்படுகிற போது பிரச்னையும் எழும். கையைச் சுட்டுக் கொள்கிற ஆபத்து!

அந்தத் தோல்விதான், அடுத்த வெற்றிக்கும் வழிகாட்ட முடியும்!



''வெற்றியின் அளவுகோல் பணம் அல்ல''

சார்டர்டு
அக்கௌண்டன்ட்
வி. ஜெகதீசன்
(ஜகதீசன் அண்டு கோ)
கூறுகிறார் :

வாழ்க்கைக்குப் பணம் முக்கியம் தான். ஆனால் பணம்தான் எல்லாமா? அந்தப் பணத்தையும் எப்படி வேண்டுமானாலும் சம்பாதிக்கலாமா? நான் சார்டர்டு அக்கௌண்டன்டாய்த்தொழிலை ஆரம்பித்ததும் என் தகப்பனார், ''ஜகதீசா! தர்ம நியாயங்களுக்கு உட்பட்டு பணம் சம்பாதி! பணத்துக்காக தர்ம நியாயங்களைக் 'காம்ப்ரமைஸ்' செய்து கொள்ள நேர்ந்தால், பேசாமல் பிச்சை எடு, அது கேவலமில்லை'' என்றார். இன்றளவும் நான் அதைக் கடைப்பிடித்து வருகிறேன். அதனால் என் தொழிலில் கஷ்ட நஷ்டங்களை அடைந்திருக்கிறேன். ஆனால் சந்தோஷத்துடனும் பெருமிதத்துடனும் அவற்றை ஏற்றிருக்கிறேன்.

இன்கம்டாக்ஸ் அலுவலகம். ஓர் உயர் அதிகாரியைச் சந்திக்க, ஒருவர் காத்திருக்கிறார். அவரது விசிடிங் கார்டைக் கொடுத்து அரை மணி நேரமாயிற்று. ஆனால் இன்னொருவர், வந்தவுடனேயே அதிகாரியின் அறைக்குள் அனுமதிக்கப்படுகிறார். ஏன்? வைட்டமின் 'ப' தான் காரணம். லஞ்சம் தராதவருக்கு எதற்கெடுத்தாலும் கேள்விகள். 'இது சரியில்லை; அது சரியில்லை' என்று ஆயிரத்தெட்டு உருவாக்கப்படும் சிக்கல்கள்.

இன்கம்டாக்ஸ் அலுவலகம்தான் என்று இல்லை. எல்லா இடங்களிலுமே இப்படித்தான். கடும் உழைப்பு, புத்திசாலித்தனம், தன்னம்பிக்கை, இன்ன பிற குணங்களைப் பெற்றிருந்தாலும் போதாது; லஞ்ச அரக்கனுக்குத் தீனி போட வேண்டியிருக்கிறது. உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள 'டிஸ்கிரீஷனரி' அதிகாரம் நியாயமான முறையில் பயன்படுத்தப்படுவதை விட துஷ்பிரயோகம் செய்யப்படும் சந்தர்ப்பங்களே அதிகம்.

என்றாலும் மனம் தளறக் கூடாது. அரசு இயந்திரத்தில் அத்தனை அங்கங்களுமே, லஞ்சத்துரு ஏறியவை அல்ல. நல்லவர்களும் கணிசமான அளவில் இருக்கவே செய்கிறார்கள். நீங்கள் நியாயமாய் நடந்து கொள்ளும் போது, இத்தகைய அதிகாரிகளைக் கண்டறிந்து, அவர்களின் உதவியை நாடிப் பெற வேண்டும். நேர்மையாய் இருப்பதென்று முடிவு எடுத்த பிறகு எத்தகைய தொல்லைகள் வந்தாலும் தைரியமாய் எதிர்க்கும் 'மன வலிமை' வேண்டும். தவிர, ஆழ்ந்த விஷய ஞானமும் அவசியம். குறுக்கு வழியில் பணம் பறிக்க நினைக்கும் பேர்வழி முன் நீங்கள் அழுத்தமாய் உங்கள் அறிவை வெளிப்படுத்தும் போது, அவன் ஆடிப் போய் விடுவான். லஞ்சம் கொடுத்தோ, அரசை ஏமாற்றியோ குறுக்கு வழியில் ஒரு கோடி சம்பாதிப்பதை வாழ்க்கையின் தோல்வி என்றே நான் கருதுகிறேன். நேர்மையான முறையில் சம்பாதிக்கப்படும் ஓர் ஆயிரமே வெற்றியாகும்.

தொகுப்பு : சாருகேசி, ப்ரியன்,
சந்திரமௌலி, யெஸ்பால்

"இருட்டில் இருந்து... வெளிச்சத்துக்கு"



எத்தனை எத்தனை இருட்டுகள் நம்மை
எதிர்த்து நிற்கின்றன!

வறுமை இருட்டு நம்மை வளைத்து நிற்கிறது!
அறியாமை இருட்டு நம்மை அழிக்க முனைகிறது.!
மதபேத இருட்டு நம்மை பிரித்து வருகிறது!
வன்முறை இருட்டு நம்மை ஒழிக்க முயல்கிறது!

இந்த இருட்டுகளை எல்லாம்
விரட்டித் துரத்தும்

வெளிச்சப் பிரகாசத்தை
வரவேற்போம் வாருங்கள்!

இந்த தீபாவளித் திருநாளில்
நாம் ஏற்றுகிற தீபஒளி
இல்லத்திலும் உள்ளத்திலும் பரவிடுக!
இருட்டே இல்லாத வாழ்வினை வரவிடுக!

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

அன்புள்ள

(நா. மகாலிங்கம்)

சக்தி குழு நிறுவனங்கள்

SASI/SGC/102/91



✦ ப. சிதம்பரம் : செய்த....

விட்டனர்.

இந்தியத் துணிமணிகளை அதிக அளவு வாங்க ஆவன செய்யலாம் என்பது போலக் கோடி காட்டிவிட்டார் கார்லா ஹில்ஸ். நல்ல ஆரம்பம்தான்.

போபால் தீர்ப்பு : இப்போதைய கவலை!

பிட்டுக்கு மண்சுமந்த பெருமானைப் பாண்டியன் அடித்த சவுக்கடி, அண்ட சராசரங்களில், அனைத்துயிர்களின் மேல் விழுந்ததோடல்லாமல், கருவிலிருந்த சிசுக்களின் மீதும் விழுந்ததாமே - அதைப்போல போபால் யூனியன் கார்பைடு பேக்டரியிலிருந்து புறப்பட்ட விஷ வாயுவை அந்த நகர மக்கள் இன்னும் பல தலைமுறைகளுக்கு மறக்க முடியாது. அப்படியொரு பாதிப்பு.

பிப்ரவரி 1989 ல் இந்திய அரசாங்கம் யூனியன் கார்பைடு நிறுவனத்துடன் 470 மில்லியன் டாலர் நஷ்ட ஈட்டை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டது. இதன் இன்றைய மதிப்பு சுமார் ரூ. 1222 கோடி. பாதிக்கப்பட்ட மக்களோ, அவர் சார்பாக வேறு எவருமோ இந்தப் பேச்சுவார்த்தைகளில் பங்குபெறவில்லை என்பது

வடக்கு வாசல் :

சிதம்பரமும் மன்மோகன் சிங்கும் செய்த மாயம்!



✦ மன்மோகன் சிங் : .... மாயம்.

அமெரிக்க அரசின் வர்த்தகப் பிரதிநிதியான திருமதி கார்லா ஹில்ஸ் தில்லிக்கு ஒரு சூறாவளி விஜயம் செய்தார். விஞ்ஞான மருத்துவக் கண்டுபிடிப்புகளை வளரும் நாடுகள் அப்படியே காப்பியடித்து விடுவதால், முன்னேறிய நாடுகளுக்குக் கோடிக்கணக்கில் நஷ்டம் என்கிறார் இவர். இதனால் Intellectual Property Rights என்று கூறப்படும் பதிப்புரிமை, மூலவுரிமை பற்றிய சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என்றும் சொன்னார்.

இது வெறும் அறிவுரை அல்ல. மிரட்டல். இவர் சொன்னபடி செய்யா விட்டால் சூப்பர் 301 என்கிற அஸ்திரத்தை உபயோகித்து இந்தியப் பொருட்களை அமெரிக்கா வாங்காதபடி செய்யுமோ என்கிற பயம். 'செய்வீர்களா அப்படி?' என்று கேட்டதும் நழுவலாகத்தான் பதில் சொன்னார்.

மிகக் காறாரான பேர்வழியாயிற்றே என்று பயந்தார்கள். ஆனால் சிதம்பரமும் மன்மோகன் சிங்கும் என்ன மாயம் செய்தார்களோ, கருணை சுரக்கச் செய்து

குறிப்பிடத்தக்கது.

இந்த நஷ்ட ஈடு நியாயமானதுதான் என்று சுப்ரீம் கோர்ட் இப்போது தீர்ப் பளித்துவிட்டது. இறந்தவர் மற்றும் பாதிக்கப்பட்டவர் குடும்பங்களுக்கு மாதா மாதம் பணம் கொடுப்பது, வேலை வாய்ப்பு ஏற்படுத்துவது, அடுத்த எட்டு வருடங்களுக்கு இலவச மருத்துவ ஆலோ சனையும் சிகிச்சையும் வழங்குவது எனப் பலவித நிவாரணப்பணிகளை இந்தப் பணத்திலிருந்து நடத்த வேண்டும் என்று கோர்ட் பணித்துள்ளது. ஆவன செய்வதில் ஏதாவது பற்றாக்குறை ஏற்படுமானால் அதை இந்திய அரசாங்கமே செலவழித்துப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் சொல்லிவிட்டது.

ஒரு பன்னாட்டு வணிக நிறுவனம் செய்த குற்றத்துக்கு இந்திய மக்களின் வரிப்பணம் ஏன் (பற்றாக்குறையை ஈடு செய்வதன் மூலம்) செலவழிக்கப்பட வேண்டும் என்று ஒரு சாரார் கேட் கின்றனர். பேக்டரியில் அந்த இரவில் வேலை செய்த தொழிலாளரின் கவன மின்மை அல்லது நாசவேலை குறித்து ஏன் யாருமே பேசுவதில்லை என்று கேட்கிறது யூனியன் கார்பைடின் அமெரிக்கத் தலைமையகம்.

கசிந்ததும் வழிந்ததும் போக ரூ. 1222 கோடியில் நிஜமாகவே பாதிக்கப்பட்டவர் வரை எவ்வளவு போய்ச்சேரும் என்பது தான் நமது கவலை.

தில்லியில் 'ஸ்டார் வார்ஸ்'

உச்சாணிக் கதாநாயகனாயிருந்த ராஜேஷ் கன்னாவை மீண்டும் காங்கிரஸ் கட்சி தில்லிப் பாராளுமன்ற வேட் பாளராய் நிறுத்தியிருக்கிறது. தமது புகழின் அலைமேல் விரைந்து கொண்டிருந்த அத்வானியைப் போன இடைத் தேர்தலில் கதறடித்தார் - வெறும் 1500 வோட்டுக் களினால் பின்னடைந்து. பா.ஜ.க. வின் கோட்டையான தில்லியில் இது ஒரு சாதனைதான். இந்த முறை இவரை எதிர்க் கும் பா.ஜ.க சார்பு வேட்பாளர், சத்ருக்கன் சின்ஹா. 'கேவலம் நடிப்புக் கவர்ச்சிதான்' என்று யாரும் ஒதுக்கிவிடக் கூடாதே என்ற கவலையோடு சென்ற முறை எல்லாப் பகுதிகளிலும் வீடு வீடாய்ச் சென்று வாக்குக் கேட்டார், ராஜேஷ் கன்னா. நிறைய உழைத்தார். அது இப்போது நிச்சயம் வீண்போகாது என்று சொல்ல



✦ கார்லா ஹில்ஸ் : தலைவலி ஆரம்பம்

லாம்.

இந்த 'ஸ்டார் வார்ஸ்' பொறிபறப் பதாய் அமைந்து, பார்ப்போருக்குக் கொண் டாட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தியக் கலைப் பொருட்கள், ஏலத்தில்!


1989 ல் பம்பாய்ச் சமுத்திரத்தில் ஐ.என்.எஸ். ஜவஹர் என்ற கப்பலில் 35 இந்திய ஓவியர்களின் படைப்புக்கள் ஏல மிடப்பட்டன. ஒரு வைர வியாபாரி பத்துலட்ச ரூபாய் கொடுத்து எம்.எப். ஹுசேனின் ஓவியத்தைத் தட்டிக் கொண்டு போனபோது நுண்கலை உலகம் வியப்புக் குள்ளானது. இந்த ஏலத்தை நடத்திய பிரிட்டிஷ் நிறுவனம் Sotheby.

இது 1744 ல் தொடங்கப்பட்டது. இன்று உலகெங்கும் விரிவடைந்து வருடத்தில் சுமார் அரை- பில்லியன் டாலர் (ரூ. 1300 கோடி) புழங்கும் தலையாய கலைப் பொருள் ஏலக் கம்பெனியாகிவிட்டது. கேவலம் ஏழைநாடுதானே என்று எல் லாரையும் போல இந்தியாவை ஒதுக்கி வந்த இந்த நிறுவனத்தின் கண்களை 89 ன் ஏலம் திறந்து வைத்தது.

இந்தியாவின் பிரபல மோதி குருப் புடன் சேர்ந்து புதிதாய் ஒரு கலைப் பொருள் ஏல நிறுவனம் துவங்குவதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கிவிட்டது. உல கெங்கிலுமுள்ள சுமார் 60,000 பேருக்கு இவர்கள் அனுப்பும் அரிய பொருள்களின் ஏலப் பட்டியல் போகுமாம்.

வரும் ஞாயிற்றுக் கிழமை சாணக்யா பார்த்த கையோடு பரணில் ஏறிப் பாருங்கள். ஒரே ஒரு ஒரிஜினல் ரவிவர்மா கிடைத்தாலும் போதும்; லட்சாதிபதியாகி விடலாம்.

- இமயவரம்பன்


அந்தாளைப் பத்திக் கவலை இல்லே... உன்னைத்தான் ஒழிக்கணும்னு பார்க்கிறேன்...!
ஜெயலலிதா
கள்ளச் சாராயம்
ஒரு தரம் போய் ஆடி நல்ல பேரு வாங்கிட்டா ஆச்சா? எங்க, எங்க ஊரோட ஆடு பார்ப்போம்!
பம்பாய் வான்கடே ஸ்டேடியம்
சிவசேனா தொண்டர்கள்
இந்திய கிரிக்கெட் அணி
லாட்டூக்கே பூகம்பம் எப்பவோ ஒரு தடவைதான் வருது... நம்ம ஊரில தினசரி தா. பூகம்பம்தான்!

எரிமலைகளும் பூகம்பங்களும்

ருத்ரபூரில் ராம்லீலா கொண்டாடக் கூடியிருந்த மக்கள் மத்தியில் சீக்கிய பயங்கரவாதிகள் வைத்த இரு சக்திவாய்ந்த குண்டுகள் வெடித்ததில் 150 பேர் மடிந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. (அதிகாரபூர்வமான எண்ணிக்கை 42) தவிர காயமடைந்து குற்றுயிர் கொலையுயிராக இருப்போர் ஏராளம். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட போது, 'ஐயோ இப்படியும் ஒரு பூகம்பம் வெடிக்குமா?' என்று எண்ணினோம்.

சீக்கிய தீவிரவாதிகள் இந்த ராம் லீலா கொண்டாட்டத்தைத் தங்கள் கொடிய செயலுக்குத் தேர்ந்தெடுத்ததில் உள்நோக்கம் உண்டு. 'இதனால் இந்துக்கள் மனம் கொந்தளித்து பதில் தாக்குதல் நடத்தலாம்; அப்போது ஹிந்து - சீக்கிய விரோதபாவம் வளரும்' என்பது அந்தரங்கம். இந்தக் கருத்து பயங்கரவாதிகள் கையாளும் ஏ. கே. 47, வெடிகுண்டுகள் முதலியவற்றை விடவும் கொடியது. இந்த எண்ணத்துக்கு வலிமை சேர்ப்பது போல் பப்ரி மஸ்ஜித் விவகாரத்தில் இப்போது சிம்ரஞ்சித் சிங் மான் தலையிட்டு, 'மைனாரிடி நலன்களைக் காக்க கூட்டணி அமைப்போம்' என்று முஸ்லிம் தலைவர்களுக்கு அறைகூவல் விட்டிருக்கிறார். நல்லவேளை முஸ்லிம்களும் சரி, ஹிந்துக்களும் சரி, இந்த சூழ்ச்சிகளுக்கு இதுவரை பலியாகவில்லை.

பஞ்சாபில் முப்பது வங்கிகளை சீக்கிய பயங்கரவாதிகள் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். இந்தச் செய்தியைப் படித்ததும் 'ஐயோ! இப்படியும் ஒரு எரிமலை சீறுமா?' என்றுதான் திகைத்தோம்.

இதையெல்லாம் தாங்க முடியாததால்தானோ என்னவோ, இயற்கை அன்னையே கோபத்துடன் கிடுகிடுத்து நிஜமான பூகம்பத்தை உருவாக்கி விட்டாள். இதில் 417 பேர் மடிந்ததாக அதிகாரபூர்வத் தகவல் என்றாலும் உண்மையான எண்ணிக்கை மும்மடங்குக்கு மேல் இருக்கும் என்று கருதப்படுகிறது. முப்பது அணுகுண்டுகளின் சக்தியோடு வெடித்துள்ள பூகம்பம் விளைவித்த சேதம் கொஞ்ச நஞ்சமாகவா இருக்க முடியும்? உத்தரப்பிரதேசம் பெரும் துயரில் ஆழ்ந்து போயிருக்கிறது. பூகம்பத்தில் வீடு வாசல் இழந்து, உற்றார் உறவினரை இழந்து அவதிப்படும் பல்லாயிரக்கணக்கான மக்கள்பால் நம் ஒவ்வொருவர் உள்ளமும் செல்கிறது.

அனுதாபம் மட்டும் போதுமா? மனித இதயம் கொண்டவர்களாக நாம் இருப்பின், தீபாவளி கொண்டாடுகிறோமே, அதை அடக்கமாகச் செய்து, மிச்சப்படும் பணத்தை உ.பி. மக்களின் துயர் துடைக்க அளிக்கலாம். கருணை உள்ளம் கொண்ட மக்களுக்கு வசதியாக, இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனம் நிவாரண நிதி தொடங்கி நன்கொடைகளைப் பெற்றுக் கொள்கிறது. கோவில்களுக்காக நிதி திரட்டும் நமது முதல்வர், வேதனையில் ஆழ்ந்து போயிருக்கும் உ.பி. சகோதரர்களுக்காகத் தமிழக அரசின் நிதி உதவியை அறிவிக்கலாம். உ.பி. அரசு மத்திய அரசிடம் 125 கோடி நிதி உதவி கோரியுள்ளது என்பதைப் பார்க்க, துயர் துடைப்புப் பணி எளிதல்ல என்பது விளங்கும்.

இந்தப் பூகம்பத்தினால் ஒரு நன்மையும் விளைந்திருக்கிறது. 'தேஹ்ரி அணை விஷயத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் அக்கறை கொண்ட அனைவரும் எச்சரித்ததை அலட்சியப் படுத்தக் கூடாது' என்று இயற்கையே அறிவித்துள்ளதாக, எண்ண வேண்டும். 'வனங்கள் அழிவது மட்டுமல்ல; இந்த வட்டாரத்தில் நில நடுக்கத்துக்கான வாய்ப்புக்கள் மிகுதி; அணையில் தேங்கும் நீர், அந்தச் சாத்தியக்கூறுகளை மேலும் அதிகரிக்கும்' என்ற கருத்தை மத்திய மாநில அரசுகள் அலட்சியப்படுத்தாமல், மறு சிந்தனை செய்ய வேண்டும். இதில் வரட்டு ஜம்பத்துக்கும் பிடிவாதத்துக்கும் இடமில்லை.

பொதுவாக, இதுபோன்ற இயற்கை உற்பாதங்களைச் சமாளிக்க என்று அரசாங்கங்கள் ஆண்டுதோறும் பணம் ஒதுக்கீடு செய்து, ஒரு சேமிப்பு நிதி திரட்டி வைப்பது வழக்கம். ஆனால் சதா பற்றாக்குறை பட்ஜெட்டே போடும் நமது மத்திய, மாநில அரசுகளிடம் இதை எப்படி எதிர்பார்க்க முடியும்?



கல்கி



1991
நவம்பர் 3
மலர் : 50
இதழ் : 14
பிரஜோத்பத்தி
ஐப்பசி 17

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.



மீனாக்ஷி சேஷாத்ரி : என் தந்தை சிந்திரியிலுள்ள உரச் சாலையின் டில்லி யூனிட்டின் ஜி.எம்.மாக இருந்து ஓய்வு பெற்றவர். தாய் பாரம்பரியமான சங்கீதம், நாட்டியக் கலையில் தேர்ச்சி பெற்றவர். இப்படிப்பட்ட பாதுகாப்பான சூழ்நிலையிலிருந்து நான் நடிப்புத் துறைக்கு வருவதை என் தாய் முதலில் விரும்பவில்லைதான்! ஆனால், 'எந்தத் துறையிலும் நல்லவர்கள், கெட்டவர்கள் இருவருமே உண்டு; நாம் ஒழுங்கான

மீனாக்ஷி சேஷாத்ரி:

முதலிடத்துக்கு ஒரு முயற்சி

பீஹாரில் பிறந்து, டில்லியில் வளர்ந்து, பம்பாயில் குடியேறி விட்ட தமிழ்ப் பெண்ணான மீனாக்ஷி சேஷாத்ரி குறுகிய காலத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இந்திப் படங்களில் நடித்திருக்கிறார். ஹீரோ, கர் ஹோ தோ ஐசா, ஸ்வாதி, காயல் பரிவார் போன்ற பல வெற்றிப் படங்கள் இவருக்குச் சிறந்த நடிகைக்கான பரிசைத் தேடித் தந்திருக்கின்றன. அவரைப் பம்பாயில் சந்தித்துப் பேட்டி கண்டோம். ஜீன்ஸ், டீ ஷர்ட், நாரதர் கொண்டையில் பள்ளி மாணவி போலிருந்தார். அதே குழந்தைத்தனத்துடன் அம்மாவின் காலடியில் உட்கார்ந்தவாறே பேட்டியளித்தார்.

கேள்வி : உங்கள் வெற்றியில் உங்களுடைய பெற்றோருக்குப் பங்கு உள்ளதா? ஆரம்பத்தில் உங்கள் சினிமா பிரவேசம் குறித்து எதிர்ப்பு ஏதும் இல்லையா?

வர்களாயிருந்தால் யாராலும் நம்மை எதுவும் செய்து விட முடியாது; அதுவும் வாய்ப்புக்களைத் தேடி நாம் அலையவில்லை. பெரிய ப்ரொட்யூசர்களும் டைரக்டர்களும் அவர்களாக வந்து அழைக்கும் போது, ஏற்றுக் கொள்ளாதிருப்பது சரியில்லை' என்றெல்லாம் என் தந்தை, சகோதரன், சகோதரி அனைவரும் எடுத்துக் கூறி என் தாயின் சம்மதத்தைப் பெற்றனர். இப்படி என் திறமைகளை உற்சாகப்படுத்தி ஊக்குவித்ததில் என் குடும்பத்தில் எல்லோருக்கும் பங்கு உண்டு. நான் எங்கே, எப்போது, எந்தத் துறையிலிருந்தாலும், என்னை நானே பாதுகாத்துக் கொண்டு நிமிர்ந்து நிற்கக்கூடிய தன்னம்பிக்கையை என்னுள் வளர்த்தவர்கள் என் குடும்பத்தினர்தான்!

கே : நடிப்புத் துறையில் உங்களுக்கு மனநிறைவு கிடைத்துள்ளதா?

மீனாக்ஷி : இன்னும் நிறையச் செய்ய வேண்டும், நன்றாக, நிறைவாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒருபுறமிருக்கிறது. அதே சமயம், நான் ஏற்று நடித்த பாத்திரங்களைப் பற்றி எனக்கு எந்த வருத்தமோ, குறையோ இல்லை. காரணம்

எதையும் எதிர்நோக்கியோ, திட்டம் வகுத்தோ நான் செயல் படவில்லை. என் வழியில் வருகின்ற வாய்ப்புக்களை ஏற்றுக் கொள்கிறேன், அவ்வளவுதான்!

கே : ஒரு காலகட்டத்தில் எல்லா பெரிய பானர் படங்களிலும் நீங்கள் இடம்பெற்றிருந்தீர்கள்; கிட்டத்தட்ட முதலிடத்தைப் பிடித்து விடுவீர்கள் என்று எண்ணியிருந்த போது, திடீர்ச் சரிவு ஏன்?

மீனாக்ஷி : என்றுமே நான் முதலிடத்துக்கருகில் சென்றதில்லை. அன்றும் இன்றும் அந்த இடத்துக்கான முயற்சிகளில்தான் ஈடுபட்டிருக்கிறேன். அந்த முயற்சியைக் கைவிடவும் மாட்டேன். ஆனால் ஒன்று! முதலிடம் என்பது நடிப்புத் திறமைகளுடன் மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல; வருவூடன் இணைக்கப்பட்டதுதான் அந்தப் பதவி! நான் நடிப்பது பெரும்பாலும் பெரிய பானர்கள் என்பதால், எக்கச்சக்கமான பணம் முதலீடு செய்யப்படுகிறது. அவை வசூலில் சாதனை படைத்தால் நான் வெற்றி பெற்ற ஹீரோயின் என்று அர்த்தம்; இல்லாவிடின், எவ்வளவு திறமையைக் கொட்டி நடித்திருந்தாலும் வீண்தான். சில படங்கள் நன்றாகவே ஓடினாலும், முதலீட்டுத் தொகையுடன், வசூலை ஒப்பிடும் போது அடிபட்டுப் போய் விடும். இந்த வகையில் படவுலகில் உயர்வு தாழ்வுகள் என்பது சகஜம்தான்!

> "முதலிடம் என்பது திறமையுடன் மட்டும் சம்பந்தப் பட்டது அல்ல...."

என்றாலும் நீங்கள் உங்கள் கேள்வியில் உணர்த்தியது போல் சரிவு ஏதும் ஏற்பட்டு விடவில்லை. அண்மையில் நான் நடித்த தாமினி படம் ரிலீஸாகப் போகிறது. தொடர்ந்து அகேலா, ஹம்லா, ஹம்ஷகல், படிபெஹன் என்று பல படங்கள்...

கே : நீங்கள் ஆர்ட் படங்களில் நடிக்க முயற்சி செய்யவில்லையா?

மீனாக்ஷி : ஆர்ட் படத் தயாரிப்பாளர்கள் என்னை அணுகவில்லை என்பதுதான் உண்மை. நான் பலமுறை ஷியாம் பெனகல், கோவிந்த் நிஹலானி, குல்ஜார் போன்றோரிடம் என் உள்ளக் கிடக்கையை வெளியிட்டிருக்கிறேன். ஆனால் ஏனோ இன்னும் நேரம் கனியவில்லை.

கே : விசுவாமித்திரரில் பத்தே நிமிடப் பாடல் காட்சியை நீங்கள் ஒப்புக் கொண்டது ஏன்? படம் எதிர்பார்த்த வெற்றி அடையாததற்குக் காரணம் என்ன?

மீனாக்ஷி : விசுவாமித்திரரின் சரித்திரத்தை இரண்டரை மணி நேரத்துள் அடக்கும் போது, அதில் மேனகை பாத்திரத்துக்குப் பத்து நிமிடங்கள் தானே ஒதுக்க முடியும்! குறைந்த நேரமென்றாலும் அது முக்கியமான பாத்திரம் என்பதால் ஒப்புக் கொண்டேன். ஆயினும் 'விசுவாமித்திரர்' எதிர்பார்த்த வெற்றி பெறாதது துர்பாக்கியமே! அதற்கு என்ன காரணம் என்பது படத்தைப் பார்த்த பிறகுதான் தெரிந்து கொள்ள முடியும்; நான் இன்னும் அந்தப் படத்தைப் பார்க்கவேயில்லை!

கே : தமிழ்ப் படங்களில் நடிப்பதைப் பற்றி யோசித்திருக்கிறீர்களா?

மீனாக்ஷி : என் தாய்மொழியில் நடிக்க வேண்டும் என்று எனக்கு ஆசை தான். 'என் ரத்தத்தின் ரத்தமே' படத்தில் பாக்யராஜுடன் முதல் முதலாகத் தமிழில் நடித்தேன். அதில் டப்பிங் கூட என் சொந்தக் குரலிலேயே செய்தேன் என்பது எனக்குப் பெருமையாக இருந்தது. ஆனால் படம் இந்தி 'மிஸ்டர் இண்டியா'வின் ரீமேக் என்பதாலோ என்னவோ, சரியாக ஓடவில்லை.

கே : உங்களுக்கு இந்த ஆடிப் பாடும் கதாநாயகி ரோல்கள் அலுக்கவில்லையா?

மீனாக்ஷி : ஊஹூம்! கொஞ்சமுமில்லை; எனக்கு அது ரொம்பவும் பிடிக்



அடுத்த இதழில்....

●● ஊதுபத்திகள்:

பெருகிவரும் நறுமணங்கள்....

- சிறப்புக் கட்டுரை

கிறது. இப்போது திரையுலகில் மீண்டும் இசைமயமான காதல் கதைகள் சூடுபிடித்து வருகின்றன. இந்தியர்கள் என்றுமே ஆடல் பாடல் பிரியர்கள்தாம்! இந் நிலையில் ஆடிப் பாடும் கதாநாயகி ரோல்கள் எப்படி அலுக்கும்?

கே : இன்று டீ.வி. நட்சத்திரங்கள் பலர் திரைப்படத் துறையில் முற்றுகையிடு கின்றனர். அவர்கள் வருகை திரைப்பட நடிகைகளைப் பாதித்திருக்கிறதா?

மீனாக்ஷி : இல்லை! இன்று திரைப்படத் துறையில் பெரும் விஸ்தரிப்பு ஏற்பட்டிருக் கிறது. தினம் ஒரு படத்துக்குப் பூஜை போடப்படுகிறது. எத்தனை பேர் வந் தாலும் திரையுலகம் தாங்கிக் கொள்ள முடியும்! புதியவர்களின் வருகை, இருப் பவர்களை ஒன்றும் செய்து விட முடியாது .

கே : ஷபானா ஆஸ்மியைப் போன்று சமூக சேவை ஏதேனும் செய்கிறீர்களா?

மீனாக்ஷி : குறிப்பிட்டுச் சொல்லும்படி யாக இல்லை; ஆனால் நற்பணிகளுக் கென்று இலவச நாட்டிய நிகழ்ச்சிகள் செய்து வருகிறேன். போதை மருந்து ஒழிப்புப் பிரசாரத்திலும் கலந்து கொண் டிருக்கிறேன்.

கே : அரசியலில் ஈடுபாடு உண்டா?

மீனாக்ஷி : இந்த நிமிடம் வரை இல்லை; ஆனால் நாளை என்ன நடக்குமோ தெரியாது!

கே : தமிழ் சினிமாக்கள் பார்ப்ப துண்டா?

மீனாக்ஷி : பெரும்பாலும் கமல் - ரஜினி படங்களைத்தான் பார்த்திருக்கிறேன்; அக்னி நட்சத்திரம், சிரஞ்சீவி, நாயகன் முதலியவற்றை ரசித்திருக்கிறேன்.

கே : உங்களைப் பற்றி வரும் சினிமா விமர்சனங்கள், கிசுகிசுக்கள், இவை உங் களை பாதிப்பதுண்டா?

மீனாக்ஷி : ஒரு காலத்தில் என் நடிப் பைப் பற்றிக் குறிப்பிடாமல், விமர்சனம் எழுதப்பட்டிருந்தால் மிகவும் மனம் நொந்து விடுவேன். அல்லது ஒரு வரி உயர்வாய் எழுதியிருந்தாலும் அகமகிழ் வேன். ஆனால் இப்போதெல்லாம் விமர்சனங்களைப் பற்றி அவ்வளவாக அலட்டிக் கொள்வதில்லை. என் நடிப்பை ரசிகர்கள் விரும்புகிறார்களா என்று மட்டுமே பார்க்கிறேன். விமர்சகர்கள் 'ஓஹோ' என்று புகழும் படம் டப்பாவில் தூங்குவதையும், 'சீச்சி' என்பது வெள்ளி விழாக் கொண்டாடுவதையும் பார்ப்பதால் வந்த ஞானமிது! கிசுகிசுக்களைப் பொறுத் தவரை அவை ஒவ்வொரு முறையும் மனசை வருத்தினாலும், அவற்றை வாசகர் களே ஒரு பெரிய விஷயமாக எடுத்துக் கொள்வதில்லை என்பது பெரும் ஆறுதலா யிருக்கிறது.

கே : உங்களுக்குப் பிடித்த ஹீரோக்கள்?

மீனாக்ஷி : சஞ்சீவ்குமார், அஷோக் குமார், திலீப்குமார், அமிதாப்...


கே : சின்ன வயது ஹீரோக்கள் யாருமே இல்லையா?

மீனாக்ஷி : வயதானவர்களில் ஆரம்பித்து இளைஞர்களில் முடிக்கலாமென்றிருந் தேன்; அவசரப்படுகிறீர்களே... அமீர் கானும் கோவிந்தாவும் பிடிக்கும்; கோவிந்தா நல்ல 'ஆல் ரவுண்டர்'.

கே : 'கர் ஹோ தோ ஐசா'வில் வரும் மாமியாரை எதிர்க்கும் மாட்டுப் பெண் ரோல்தான் உங்களுக்கு மிகவும் பிடித்த மான 'ரோல்' என்று சொல்லியிருக் கிறீர்களே! நிஜ வாழ்வில் இப்படி ஒரு 'ரோல்' அமைந்தால் என்ன செய்வீர்கள்?

மீனாக்ஷி : படத்தில் வருமளவு கை கலப்பு, அடிதடிகளில் இறங்க மாட்டேன் என்று நினைக்கிறேன். கூடுமானவரை பேச்சு வார்த்தைகளினாலேயே தகராறு களைச் சரிசெய்யப் பார்ப்பேன். ஆனால் அந்த அளவு கொடுமைமிக்க மாமியாரை என் அம்மா எனக்குத் தேர்ந்தெடுக்க மாட் டார் என்று நம்புகிறேன்!

பேட்டி : **ஜெயஸ்ரீராஜ்**
மேலட்டை வண்ணப்படம் :
கே. வி. ஆனந்த்



கோமல் சுவாமிநாதன்



அசோகமித்திரன்

கல்கி பொன்விழா நாடகம், கவிதைப் போட்டி முடிவுகள்:

கோமல் சுவாமிநாதன், திருப்பூர் கிருஷ்ணன், ஆசிரியர் கி. ராஜேந்திரன் ஆகியோர் அடங்கிய நடுவர் குழு, கடந்த 13.10.91 அன்று கூடிப் பின் வரும் நாடகங்களை முதல், இரண்டாம் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுத்தது.

ரூ. 1,000 முதல் பரிசு பெறும் நாடகம் : சுழற்சி

எழுதியவர் :
நெய்வேலி ஆர். ராஜேந்திரன்,
(அறிமுக எழுத்தாளர்)
C-52, ஔவையார் சாலை,
வட்டம் 25
நெய்வேலி - 607 803.

ரூ. 500 இரண்டாம் பரிசு பெறும் நாடகம் : க்யூ

எழுதியவர் : பி. உதயக்குமார்,
4, 2 வது சந்து,
எல்லப்ப நாயக்கன் தெரு
புதுப்பேட்டை, சென்னை - 2.

அன்றைய தினமே, நல்லபெருமாள், அசோகமித்திரன், ஆசிரியர் கி. ராஜேந்திரன் ஆகியோர் அடங்கிய நடுவர் குழு, பரிசுகளுக்குரிய கவிதைகளையும் தேர்ந்தெடுத்தது.


முதல் பரிசு ரூ. 250
(புதுக் கவிதை)
''ஞான வெளியில்''

எழுதியவர் : வி. வேங்கட கிருஷ்ணன், (தத்துவப்பித்தன்)
5/56 ஏ, அரசு மருத்துவமனை சாலை,
குலசேகரம் - 629 161.
கன்னியாகுமரி மாவட்டம்.

நல்லபெருமாள்



திருப்பூர் கிருஷ்ணன்



இரண்டாம் பரிசு ரூ. 150
(புதுக் கவிதை)
''நவீன நாடுகடத்தல்''

எழுதியவர் : பிருந்தா சாரதி,
53-ஏ, செல்வா சாரங்கபாணி தெரு,
கும்பகோணம் - 612 001.

முதல் பரிசு ரூ. 250
(மரபுக்கவிதை):
''ஈரம்''

எழுதியவர் : முத்து எத்திராசன்,
128, காமராசர் குடியிருப்பு,
தெற்கு உஸ்மான் சாலை,
சென்னை - 17.

இரண்டாம் பரிசு ரூ. 150
(மரபுக்கவிதை):
''படிச்சுக் கிழிக்க வேண்டாம்''

எழுதியவர் : வி. சிவகுமார்,
26, நாவலர் தெரு,
ஆலங்குடி - 622 301.
புதுக்கோட்டை மாவட்டம்.

போட்டிகளில் பரிசு பெற்ற அனைவருக்கும் வாழ்த்துக்கள். பல்லாயிரக் கணக்கில் பங்கு கொண்டு போட்டியைச் சிறப்பித்த அனைவருக்கும் நன்றி.

- ஆசிரியர்

படங்கள் : யோகா

ஞான வெளியில்

ஒரு
தீப்பந்தம்
அதைச்
சுழற்றினால்
அற்புத
தீச்சுடர் வளையம்!

எனது
யதார்த்த சொரூபம்
எனக்குத் தெரியாததால்
வாழ்க்கையைச்
சுழல விட்டு
வேடிக்கை பார்க்கின்றேன்!

மூலத்தில்
முகிழ்த்து எழுந்த
நானெனும் 'ஆணவ'
அலங்கோல பொம்மைக்கு
ஆன்ம தரிசனம்
எப்போது?

மூல மொழியைப்
படிக்கத் தெரியாத
வேட்கையில்...
மொழிபெயர்ப்பைப்
படிக்கும் ஆனந்தம்!

உள்ளதை
உள்ளபடி உணரும்
திண்மை இலாததினால்,
ஓடும் மனத்தின் மீது
உல்லாசப் பயணம்
அற்ப சுகம்!



(பொன் விழாக் கவிதைப் போட்டியில் ரூ 250 முதல் பரிசு பெறும் புதுக் கவிதை!)

பூமியின் பரப்பளவை விட
எனது
ஆசையின் பரப்பளவு
அதிகம் என்பது
அவனுக்குத் தெரிந்திருந்தால்
இரண்டடியில்
அளந்து விட்டு
மூன்றாமடிக்கு
என்னை அளந்திருப்பான்!

நிறைவேறாத
ஆசைகள்
கனவாகச் சஞ்சரிக்கும்!
கொஞ்சம்
கற்பனை இருக்குமெனில்
கவிதையாய்ச் சஞ்சலிக்கும்!

ஆன்மாவின்
நெடிய யாத்திரையில்
எண்ணிலாக் காட்சிகள்...

இதய வானில்
இன்ப முகில்கள்
தாலாட்டும் போது
கால முட்களின்
கவலைக் கீறல்
பள்ளி ஆசிரியர்
தேர்வுத் தாள் திருத்தும்
பணிக் கையாய் விழுகிறது!

தன்னைத்தானே
உணராததால்
தலைகால் தெரியாத
தத்துவக் குப்பைகள்
சேமிக்கப்படுகின்றன!

சிருஷ்டிக்குள்ளே
நடத்தும்
சிலம்பாட்டத்தில்தான்
எத்தனை மகிழ்ச்சி!



வெற்றி
மனிதனை
விழுங்குகிறது ;
தோல்வி
சிந்திக்க வைக்கிறது!

இரண்டையும்
கண்டு
நகைக்கத் தெரிந்தால்
ஞான வெளியில்
நாட்டியம் ஆடலாம்!

- தத்துவபித்தன்

(ரூ. 250 முதல் பரிசு பெறும் மரபுக் கவிதை அடுத்த இதழில்)

காதலெனும் வானவில்

1

"மீரா! மீரா! மீரா!"

சமுத்திர அலையாய்க் குரல்கள் எழுந்தன. நாடி நரம்பெல்லாம் ஜுர வேகம் பற்றிக் கொண்டது. கண்ணுக்கு நேர் மேலாகப் பறந்த பந்தை நோக்கி அவள் விரைந்தாள். மந்திரக்கோல் பட்டது போல் கால்கள் ஜிவ்வென்று மேலே எழும்பின. வானைத் தொட்டு விடும் நீளத்துக்குக் கைகள் நீண்டன. கையில் சிக்கிய பந்தைக் கூடையில் போட்டதும் மறுபடி ஓர் அலை ஓசை எழுந்தது.

"ஜெயிச்சுட்டோம்! ஜெயிச்சுட்டோம்!"

பந்தை வீசிய வேகத்துடன் காலைத் தரையில் பதித்த தருணத்தில் கணுக்காலில் சுரீரென்று வலித்தது. அவள் சட்டென்று காலை மடக்கித் தரையில் குத்திட்டு அமர்ந்தாள். வெட்டி எடுத்து விட வேண்டும் போல் சொடுக்கிய வலியில் முகத்தை முழங்கால்களில் புதைத்துக் கொண்ட போது கண்களில் நீர் ததும்பிற்று. சுற்றிலும் பெண்கள் 'ஹோ! ஹோ!' என்று உற்சாக ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள். இந்த நேரத்தில் அடிபட்டுத் தரையில் அமர்ந்திருக்கும் தன்னை நினைத்து அவளுக்குப் பாவமாக இருந்தது. ஜெயித்தால் எல்லாரும் இன்று ஐஸ்க்ரீம் பார்லருக்குச் செல்வதாகத் திட்டம் போட்டிருந்தார்கள்.

மீரா ஆத்திரம் தீர "டாமிட்!" என்றாள்.

உலுக்கப்பட்டது போல் கண்கள் திறந்தன. கண்ணுக்கு நேராக அறை ஜன்னலும் ஜன்னலுக்கு அடுத்த சுவரில் மெடோனாவின் ப்ளோ அப்பும் இருந்தன. போர்வைக்கடியில் கால்கள் பத்திரமாக இருந்தன. கனவு. எப்படி நிஜம் போலக் கனவு வருகிறது என்று ஆச்சரியமாக இருந்தது. கனவில் அனுபவித்த வேகமும், வெற்றிக் களிப்பும் பிறகு வலியும் சத்தியமான உணர்வுகளாகத் தோன்றின - ஐஸ்க்ரீம் சாப்பிட முடியவில்லை என்கிற ஏமாற்றமும் உள்பட. இந்த மாதிரி அவளுக்கு எத்தனையோ கனவுகள் வருகின்றன. நிஜம் போல. சில சமயம் எது கனவு, எது நிஜம் என்று கூடப் புரியாத குழப்பம் ஏற்படும். 'நீயும் உன் கனாவும்' என்று அம்மா சிரிப்பாள். "உங்க அத்தைப் பாட்டியைக் கொண்டிருக்கே இதிலே" என்பாள்.

அத்தைப் பாட்டியை மீரா சென்ற வருஷம்தான் சந்திக்க நேர்ந்தது. படுசுவாரஸ்யமான மனுஷி. கும்பகோணத்துக்கு அருகில் ஏதோ கிராமத்தில் இருக்கிறாள். ஒன்பது கெஜப் புடைவையில் அம்மா வைத்திருந்த ஏதோ தமிழ் சினிமா காஸெட்டில் வரும் ஒரு நடிகை போல் இருப்பாள். எடுத்த எடுப்பிலேயே 'என்னை அத்தைன்னு கூப்பிட்டாப் போறும். அத்தைப் பாட்டின்னு நீட்டி முழக்க வேண்டியதில்லே' என்றாள். ஆனால் அவள் பேசும் விஷயமெல்லாம்




வாஸந்தி

நீட்டி முழக்கிக் கொண்டு தனித் தனிக் கதைகள் போல் இருக்கும். அவளுடைய கனவுகளே ஆரம்பமும் முடிவும் கொண்ட கதைகளாக இருக்கும். ஆச்சரியங்கள் நிறைந்ததாக, அற்புதங்கள் நிறைந்ததாக. ''நேத்து ஒரு கனாக் கண்டேன்'' என்று ஆரம்பிப்பாள்.

ஆரம்பத்தில் அத்தையின் சாகஸக் கனவுகளையெல்லாம் மீரா வாயைப் பிளந்தபடி கேட்பாள். அவள் சொல்லும் பாதி வார்த்தைகள் புரியாது. 'அப்படீன்னா அப்படீன்னா' என்று அம்மாவை நச்சரித்து ஆங்கில மொழிபெயர்ப்பில் புரிந்து கொள்ள வேண்டிவரும். இப்பவும் அத்தைப் பாட்டியின் கிராமிய சிலேடைகளும் உவமானங்களும் முழுசாக விளங்குவதில்லை. ஆனால் அவளுடைய கனவுகளை இப்பொழுது கேட்க நேர்ந்தால் முடிவு எப்படி இருக்கும் என்று ஊகிக்கக் கூடிய அளவுக்குத் தேர்ச்சி ஏற்பட்டு விட்டது.

அத்தைப் பாட்டியிடம் வேறு ஒரு வசீகரம் இருந்தது. தாத்தாவுடன் அவள் இருக்கும் போது தெரியும் வசீகரம். பாட்டிக்கு எழுபது வயது. தாத்தாவுக்கு எழுபத்தி ஐந்து. எங்கு சென்றாலும் இருவரும் சேர்ந்தே போவார்கள். பாட்டி இல்லாவிட்டால் தாத்தாவுக்குப் பொழுது போகாது. காப்பி குடிக்கக் கூட ரசிக்காது. அவர்கள் பேசாத பேச்சு கிடையாது. அரசியலிலிருந்து ஆன்மீகம் வரை - அலுக்காமல் சலிக்காமல். காரசாரமாகச் சண்டையும் போடுவார்கள். இந்த வயதில் சின்னப் பெண்ணைப் போல தாத்தா கோபித்துக் கொண்டார் என்று பாட்டி கண்ணீர் விடுவாள். அன்று நிச்சயம் கனவில் ஈச்வரன் வருவார்.

அமெரிக்காவிலிருந்து குடிபெயர்ந்து இந்தியாவுக்கு வந்த புதிதில் மீராவுக்கு ஏற்பட்ட ஆச்சரியங்களில் முக்கியமான ஆச்சரியம் இந்த ஜோடி. நியூயார்க்கில் அவர்கள்



வீட்டுக்கு அருகில் ஒரு பூங்கா இருக்கும். அதைக் கடந்து தினமும் பள்ளிக்குச் செல்லும் போது அங்கங்கே இருக்கும் பெஞ்சுகளில் வயதானவர்கள் தனித்தனியாக அமர்ந்து சூன்யத்தை வெறித்தபடி வெயில் காய்ந்து கொண்டிருப்பார்கள். உலர்ந்த சருகுகள் போல் ஒளியே இல்லாத அந்த முகங்களைப் பார்க்க மீராவுக்கு பயமாக இருக்கும். அடிவயிற்றில் சொல்லத் தெரியாத சங்கடம் ஏற்படும். இந்தியாவுக்குத் திரும்ப வேண்டும் என்று அப்பா திடீரென்று ஏன் முடிவு செய்தார் என்று இதுவரை தெளிவாகத் தெரியாவிட்டாலும் இந்தியச் சூழலுடன் சமரசம் செய்து கொள்ள அவளும் அவளுடைய தம்பி மகேஷும் சிரமப்பட்ட நேரங்களில், அமெரிக்கக் கிழவர்களுக்கு ஏற்படும் கதி தனக்கும் ஏற்படக் கூடாது என்றுதான் அப்பா வந்து விட்டாரோ என்று சம்சயம் ஏற்படும். அத்தைப் பாட்டியையும், தாத்தாவையும் பார்த்த போது அப்பாவிடம், 'தெ லுக் லைக் ஸன்ஷைன்' என்றது இன்னும் ஞாபகம் இருக்கிறது. இப்பவும் அப்படித்தான் இருக்கிறார்கள், சூரிய வெளிச்சம் போல. அந்தப் பிரகாசத்துக்கு என்ன காரணம் என்று புரியவில்லை. நியூயார்க்கில் இருக்கும் அவளுடைய சினேகிதன் எரிக் பேக்கருக்கு அவர்களைப் பற்றி எழுதினாள். 'அறுபது வருஷமாயிற்று கல்யாணமாகி. சேர்ந்து இருக்கிறார்கள்' என்று தெரிவித்ததற்கு, ''என்னுடைய மூதாதையரிலும் ஓரிரண்டு தம்பதிகள் அப்படி இருந்திருக்கிறார்களாம்'' என்று அவன் வேலை மெனக்கெட்டுத் தன்னுடைய குடும்ப விருக்ஷத்தின் கிளைகளை வரைந்து அனுப்பினான். அதிலும் முப்பது வருஷங்களை யாரும் தாண்டியிருக்கவில்லை.

பாட்டிக்கு உடனடியாக இன்று கண்ட கனவைப் பற்றிச் சொல்ல வேண்டும் போல் இருந்தது. அமெரிக்காவாக இருந்தால் நினைத்த நேரத்தில் நியூயார்க்கிலிருந்து லாஸ் ஏஞ்ஜல்ஸ்ஸில் இருக்கும் மாமாவுடன் பேச முடிந்தது. இங்கு மெட்ராசிலிருந்து கும்பகோணத்துக்கு ஃபோன் செய்ய முடியாது. லைன் அனேகமாகக் கிடைக்காது என்பதோடு இந்திய மண்ணில் அப்பா எஸ். டி. டி. செலவைப் பற்றிப் புலம்புவது ஏதோ கலாசார சம்பந்தமானது என்று தோன்றிற்று.

கனவுகளுக்கு விளக்கம் சொல்வதில் ஃப்ராய்டுக்கு அடுத்தபடியாகப் பாட்டி ஒரு அத்தாரிட்டி என்று மீராவுக்கு எண்ணம்.

ஒருமுறை பாட்டியிடம் வருத்தத்துடன், ''ரொம்பக்கெட்ட கனாக் கண்டேன் அத்தே'' என்றாள். ''யாரோ செத்துப் போறாப்பலே இருக்கு. நான் அழுறேன்.''

''அந்த மாதிரிக் கனாக் கண்டா ரொம்ப நல்லது வருதுன்னு அர்த்தம்'' என்று பாட்டி விசித்திரமான விளக்கம் கொடுத்தாள். இன்றைய கனவுக்குக் கூட அப்படிப்பட்ட விளக்கம் இருந்தாலும் இருக்கும். நல்லது வரும்.

மீராவுக்குச் சிரிப்பு வந்தது. நல்லது எந்த ரூபத்தில் வரும் என்று மெடோனாவின் உருவத்தைப் பார்த்தபடி ஹேஷ்யம் கணிப்பதில் சுகம் இருந்தது. கட்டுரைப் போட்டிக்கு அனுப்பிய கட்டுரைக்குப் பரிசு கிடைக்கலாம். சென்ற வாரம் முடிவடைந்த அரைப் பரீட்சையில் நல்ல மார்க் கிடைக்கலாம். திடீரென்று ஒரு நாடக விழா போடும் ஆசை ஹெட் மிஸ்ட்ரெஸ்ஸுக்கு வரலாம். நாடகத்திற்கு மீராவை விட்டால் யார் இருக்கிறார்கள்? ஆனால் இன்று எதைப் பற்றியும் தெரிய வராது. இன்று சனிக்கிழமை.

அமெரிக்காவில் சனி, ஞாயிறு என்றால் கொண்டாட்டமாக இருக்கும். அநேகமாக எல்லாருமாகச் சேர்ந்து எங்காவது வெளியூர் போவார்கள். அப்பா அமெரிக்க அப்பாக்கள் போல, கோடைக் காலங்களில் அரை டிராயரும் வெற்று மார்புமாகப் படகு ஓட்டுவார். அவளுடனும் மகேஷுடனும் நீச்சல் குளத்தில் நீந்துவார். அம்மாவும் அங்கு பாண்ட்டும் ஷர்ட்டும் போட்டவள்தான். அமெரிக்க இங்கிலீஷ் பேச முயன்றவள். டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸில் வேலை பார்த்தாள். திடீரென்று மூட்டை கட்டிக் கொண்டு இந்தியாவுக்கு வந்து விடத் தீர்மானித்த போது, மகேஷ் வெகு நாட்களுக்கு ''வொய் டாட், வொய்?'' என்று துளைத்தான், 'இந்தியா தான் நம்ம தேசம்' என்று அப்பா திருப்பித் திருப்பிச் சொன்னதில் திருப்தி அடையாமல்!

மீரா நெடிய சோம்பல் முறித்தபடி எழுந்தாள். பள்ளிக்கூடம் இல்லையென்றாலும் பாட்டு, டான்ஸ் க்ளாஸ் உண்டு. ஹோம்வொர்க் செய்து முடிக்க வேண்டும்.



''நான் ஆபீஸ் கிளம்பிப் போகிறவரைக்கும் என் மனைவி எங்க அம்மா கூட சண்டையே போட மாட்டா...''

''உங்ககிட்ட உங்க மனைவிக்கு அவ்வளவு பயமா சார்...?''

''அட நீங்க வேற! அதுவரைக்கும் என்கூட சண்டை போடுவா!''

- சீர்காழி. வி. ரேவதி

மியூஸிக் ஸிஸ்டத்தில் ஒரு டேப்பைச் சுழல விட்டு அவள் மெடோனாவின் பாட்டுக்கு ஏற்ப உடம்பை அசைத்தபடி பல்லைத் தேய்த்து முகத்தைக் கழுவிக் கொண்டு மாடி பால்கனிக்கு வந்து நின்ற போது, மெட்ராஸ்காரர்களின் காலையில் பாதி முடிந்து விட்டது போலிருந்தது. தெரு மூலையில் ஒரு காலியான கார் ஷெட்டில் துணிக்கு இஸ்த்திரி போடும் முருகேசன் உருப்படிகளை வாங்கிக் கொள்ள மூன்றாவது வீட்டிற்குள் நுழைவதற்கு முன் அவளைப் பார்த்து லேசாகச் சிரித்து, ''ஸ்கூல் இல்லையா?'' என்றான், சௌக்கியமா என்பது போல.


அவள் 'இல்லை' என்று தலையாட்டிச் சிரித்தாள். இந்த இரண்டு வருஷத்தில் முருகேசன் மாறவேயில்லை என்று தோன்றிற்று. அவள்தான் மாறி விட்டாள். இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வந்தது. அமெரிக்காவிலிருந்து முந்தைய இரவுதான் வந்து இறங்கியிருந்தார்கள். மறுநாள் காலை அவள் இதே பால்கனியில் நின்று இதே மாதிரி வேடிக்கை பார்த்த போது இந்த முருகேசன் பக்கத்து வீட்டின் முன் நின்றிருந்தான். மீரா அவனைப் பார்த்து அமெரிக்க வழக்கத்தில் வலது கையைப் பெரிதாக ஆட்டி உற்சாகமாகச் சிரித்து ''ஹாய்!'' என்றாள். அவன் அதிர்ந்து போனான். தனக்குப் பின்னால் யாராவது நிற்கிறார்களா என்று திரும்பிப் பார்த்தான். மீரா மறுபடி கையை அசைத்து 'ஹாய்' என்றாள். பால்கனியில் நிற்கும் அவளைப் படுக்கையறையிலிருந்து பார்த்த அம்மா விருட்டென்று எழுந்து வந்தாள்.

''யாரைப் பார்த்துச் சிரிக்கிறே?'' என்றாள் சந்தேகத்துடன்.

''யாரோ தெரியாது. ஆனா விசித்திரம். பதிலுக்குச் சிரிக்க மாட்டேங்கறான்'' என்றாள் ஆங்கிலத்தில்.

அம்மா எட்டிப் பார்த்துப் பதறிப் போனாள். முருகேசனின் கையில் வைத்திருந்த துணி மூட்டையைப் பார்த்து, ''உள்ளே போடி'' என்று மீராவை அதட்டினாள். ''இந்த ஊர்லேயெல்லாம் இப்படி நடந்துக்கக் கூடாது. தப்பா நினைப்பா'' என்று தோளைப் பிடித்து இழுக்காத குறையாக உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

அம்மாவின் இந்தச் செய்கை முதல் அதிர்ச்சியாக இருந்தது. அதற்குப் பிறகு தினம் தினம் புதிய புதிய அதிர்ச்சிகள் ஏற்பட்டன. இது வேறு உலகம் என்று மண்டையிலடிப்பது போல அம்மாவும் அப்பாவும் பேச்சிலும் உடையிலும் மட்டும் மாறவில்லை; ஆளே மாறிப் போனார்கள். இப்படிப் பேசக் கூடாது அப்படி சிரிக்கக் கூடாது என்று நூறாயிரம் தடைகள். அவர்களே புரியாத ஏதோ ஒரு கலவரத்தில் இருப்பது போல் அவளுக்குத்



''ஹோட்டலிலே சாப்பிட்டுப் பழகினதுனாலே நண்பன் வீட்டிலே மானம் போயிடுச்சா, எப்படி?''

''டிபன் சாப்பிட்டு முடிச்சதும் பழக்க தோஷத்திலே ஆட்டுரல் எங்கிருக்குன்னு கேட்டுட்டேன்!''

- வீ. சோழன்

தோன்றும். வந்த ஒரு வருஷத்திற்கு இந்தியா சுத்தமாகப் பிடிக்கவில்லை. அம்மா அவளைப் பெண்கள் பள்ளியில் சேர்த்தது நிலைமையை இன்னும் மோசப் படுத்திற்று. பெண்கள் அவளை ஏதோ மியூசியம் பொருளைப் போலப் பார்த்தார்கள். அவள் பேசும் அமெரிக்க ஆங்கிலத்தைக் கேட்டுத் தங்களுக்குள் குசுகுசுத்துச் சிரித்தார்கள். புரியாததால் பரிகசித்தார்கள். தினம் தினம் அவளும் மகேஷும் அமெரிக்காவுக்குத் திரும்பிப் போயிடலாம் என்று அழுவதும், சாப்பிடாமல் படுக்கப் போவதும்... இப்பொழுது நினைத்துப் பார்க்கும் போது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மிகப் பெரியப் பிரச்னையாக இருந்திருக்கும் என்று புரிந்தது.

அப்பொழுதுதான் அத்தைப் பாட்டியும் தாத்தாவும் கொஞ்ச நாள் அவர்களுடன் தங்க வந்தார்கள். ஏதோ ஒரு சாதுர்யமான தருணத்தில் அப்பாவுக்கு அவர்களை வரவழைக்கும் யோசனை ஏற்பட்டிருக்க வேண்டும். பிரச்னைக் குழந்தைகளைச் சமாளிக்க இங்கிலீஷ் தெரியாத அத்தையால் முடியும் என்று எப்படி நினைத்தாரோ தெரியாது. உண்மையில் அவர்கள் மீராவையும் மகேஷையும் வசியம் பண்ண எந்த முயற்சியும் எடுக்கவில்லை. புத்தி சொல்ல முனையவில்லை. இவர்கள்தான் அவர்களைப் பார்த்ததும் வசீகரிக்கப்பட்டார்கள். அவர்களது சளசள பேச்சையும் சிரிப்பையும் சண்டையையும் புதிய கண்டுபிடிப்பு போல ரசித்தார்கள்; பாட்டியுடன் பேசுவதற்காகவே தமிழ் கற்றுக் கொண்டார்கள். அமெரிக்க சிநேகிதர்களை விட்டுப் பிரிந்து வரும் போது வந்த அழுகை, தாத்தாவும் பாட்டியும் ஊருக்குக் கிளம்பும் போது மீண்டும் வந்தது.

தெருவைப் பார்த்தபடி நிற்கும் இந்தத் தருணத்திலும் அதை நினைத்துக் கண்ணில் நீர் கோப்பதைக் கண்டு அவளுக்குள் கூச்சமேற்பட்டது. இந்த இரண்டு வருஷங்களில் வயது கூடிப் பதினேழாகிப் போனது மட்டுமில்லை. மனசு நிறையத் தெளிந்து விட்டது, சக தோழிகளுக்குப் புத்தி சொல்லும் 'தலைவி' ஆகும் அளவுக்கு. அமெரிக்க ஊட்டத்தால் சராசரி இந்தியப் பெண்ணை விட அதிக உயரமும் வளர்த்தியும் இருப்பதால், மனமுதிர்ச்சியும் கொண்டவள் என்கிற நினைப்பில் டீச்சர்கள் அவளைத்தான் மானிட்டராக்குகிறார்கள். உண்மையிலேயே அவள் வகுப்பில் இருக்கும் சில பெண்கள் செய்யும் அசட்டுத்தனங்களைப் பார்க்கும் போது அத்தைப் பாட்டியின் ஸ்தானத்தில் தான் இருப்பது போலிருந்தது.

முருகேசன் பக்கத்து வீட்டிலிருந்து வெளிப்பட்டான். அவளை நிமிர்ந்து பார்த்து, ''துணி இருக்கா?'' என்றான்.

''இருக்கு'' என்று அவள் கட்டி வைத்திருந்த துணிகளை அள்ளிக் கொண்டு தடதடவென்று மாடிப் படியில் இறங்கி வாசலுக்கு வந்து ''பதினைஞ்சு உருப்படி'' என்று அவன் கையில் கொடுத்துக் கூடவே ''தாங்க்யூ'' என்றாள். அவன் ஒரு கூச்சப் புன்னகையுடன் அதை ஏற்றுக் கொண்டது அவளுக்கு உற்சாகமாக இருந்தது. வீட்டிற்குள் நுழைந்ததும், எதிர்ப்பட்ட அம்மாவிடம் ''முருகேசன் இஸ் ஸோ க்யூட்'' என்றாள். ''அவன்தான் என் பெஸ்ட் ஃப்ரெண்ட்.''

''பக்கத்து வீட்டு மாமி எதிரே இப்படி உளறி வைக்காதே'' என்றாள் அம்மா.

அம்மாவுடன் ஒரு விவாதத்துக்குத் தயாரான போது, டெலிபோன் ஒலிக்க, அவள் தாவிச் சென்று எடுத்த போது, மறுமுனையில் அவள் வகுப்பில் படிக்கும் மீனாட்சியின் குரல் சன்னமாக ஒலித்தது.

மீரா உற்சாகமாக ''ஹாய்!'' என்றாள். ''என்ன நியூஸ் காலங்கார்த்தாலே?''

''குட் நியூஸ்!'' என்று மீனாட்சி ரகசியக் குரலில் சொன்னாள். ''இன்னிக்கு எனக்கு ஒரு பார்ட்டிக்கு அழைப்பு வந்திருக்கு.''

''யார்கிட்டேர்ந்து?''

''எம்.ஸி.ஸியிலே படிக்கிறவன்.''

''போகப் போறியா?'' என்றாள் மீரா ஜாக்கிரதையாக.

''ஆமாம்'' என்றாள் மீனாட்சி மீண்டும் ரகசியக் குரலில். ''உன்னோட வெளியிலே போறதா அம்மாகிட்டச் சொல்லியிருக்கேன். நீ குட்டை உடைச்சுடாதே.''

மீரா பதில் சொல்வதற்குள் மீனாட்சி போனைக் கீழே வைத்தாள். கையில் இருந்த ரிசீவரைப் பார்த்து மீரா, ''டாமிட்'' என்றாள், அம்மா எதிரில் நிற்பதை மறந்து.

(தொடரும்)

ஒயிலாட்டம்



இயற்கையெழில், கிராமியப் பேச்சு வழக்கு, அம்மன் கோயில், மஞ்சள் புடைவை, வேப்பிலைக் கொத்து, தீமிதி... எவருமே கைவிடாத இந்த வழக்கமான அம்சங்களுக்கு ஒயிலாட்டமும் விலக்கு அல்ல. என்றாலும் -

இயற்கையின் வனப்புடன் கூடிய கிராமிய மணம் சற்று அழுத்தமாகவே இடம் பெற்றிருக்கிறது.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் ஆகிய பொறுப்புகளோடு ஒரு கனமான பாத்திரத்தில் ஆர். சுந்தரராஜன். (நிகழ்ச்சிகள் அனைத்துமே அவரைச் சுற்றியும் அவரைச் சார்ந்தும் இடம்பெறுவதால் அவரையே கதாநாயகன் என்று அழைக்கலாமா?)

உயர்ந்த பண்புகளுடன் அமைதியான வாழ்க்கை நடத்தி வரும் இந்த உன்னத ஒயிலாட்டக் கலைஞரின் வாழ்க்கையில், நகரத்திலிருந்து வரும் ஷர்மிளாவும் ரகுநாத்தும் ஊடுருவ, நிகழ்ச்சிகளில் சூடுபிடித்து விடுகிறது. வலுவேற்றுகிறவை : அவருடைய அடக்கமான வசனங்கள், அமைதியான அணுகுமுறைகள், அளவெடுத்துத் தைத்த சட்டையாகப் பொருந்துகிற நடிப்பாற்றல்.

நகரத்துப் பாடகி ஷர்மிளா நாட்டுப்புறக் கலைஞர் சுந்தரராஜனைப் பாட்டுப் போட்டிக்குச் சவால் விட்டு அழைக்க, சங்கீதமே தெரியாத அப்பாவியான ரகுநாத்தைத் தயார் செய்து ஷர்மிளாவை வீழ்த்துவதாக அவர் மறு சவால் விட, நல்லதொரு சங்கீதப் போட்டியை எதிர்பார்த்து நாம் நிமிர்ந்து உட்கார, பஞ்சாயத்துத் தலைவர் ராதாரவியின் குறுக்கீடு (முழுக்க முழுக்க ஏனோ தந்தையின் குரலிலேயே பேசுகிறார்!) கதையைத் திசை திருப்பி வேறு எங்கோ கொண்டு போய் விடுகிறது.

வழக்கமான 'தீமிதி' உச்சகட்டம். ஒரேயொரு வித்தியாசம் : எரியும் நெருப்பில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் அந்த வெடிகுண்டு! அத்தனை வெப்பத்துக்கும் எந்தவிதமான பாதிப்புக்கும் உள்ளாகாமல், 'பித்தானை அழுத்தினால்தான் வெடிப்பேன்' என்று சமர்த்தாகக் காத்திருப்பது 21-ம் நூற்றாண்டின் விஞ்ஞான அதிசயம்!

வெகுளியான ஜோடி ஷர்மிளா, ரகுநாத். பின்னவர் அறிமுகம் என்றாலும் கச்சிதம்.

வழக்கம் போல குமரிமுத்து சிரிக்கிறார். நம்மால் சிரிக்க முடியவில்லை - துணைக்கு செந்தில் இருந்தும் கூட.

லேசாக அங்கங்கே லயம் தப்பிப் போனாலும் ஒயிலாட்டம் அடக்கமான அழகு.

- சி. ஆர். கே.

வாஷிங்டன் வைரம்

இதுவரை...

வாஷிங்டனிலுள்ள உலகப் பிரசித்தி பெற்ற ஸ்மித்ஸோனியன் மியூசியத்தில் குண்டு ஒன்று வெடிக்கிறது. அங்கு காவலுக்கிருந்த ஜிம் அதில் காய மடைகிறான். அந்த குண்டு வெடிப்பிற்குக் காரண மானவன் தப்பியோடியபோது, அவன் முகத்திலிருந்த பெரிய வெட்டுக் காயத்தை ஜிம் நன்றாகப் பார்த்திருந் தான் என்றாலும் விசாரித்த போலீஸிடமும் எஃப்.பி. ஐ.யிடமும் முதலில் அதை மறைத்துவிடுகிறான்.

சரித்திர ஆய்வாளர் வைரமூர்த்தி. அவர் காரிய தரிசி நிர்மலா. வைரமூர்த்தியின் அறைக்குள் அந்த வெட்டுக்காய மனிதன் குண்டு வெடிப்பு பற்றிப் பேச, வைரமூர்த்தி அவனைத் தலைமறைவாக சான்பிரான் சிஸ்கோ போகச் சொல்கிறார். இதைத் தற்செயலாக ஒட்டுக் கேட்டுவிட்ட நிர்மலா, அது பற்றி வைர மூர்த்தியிடமே கேட்க, அவர் அவளைப் பயமுறுத்தி வைக்கிறார்.

இருப்பினும், அவள், வைரமூர்த்தியிடம் ஆராய்ச்சி மாணவனாக பிஎச்.டி. செய்து கொண்டிருக் கும் ரகுராமனிடம் நடந்ததைக் கூறி, அவனையும் எச்சரிக்கையாக இருக்கச் சொல்கிறாள்.

இவர்களின் சந்திப்பைத் தமது ஆள் மூலம் அறிந்த வைரமூர்த்தி, ரகுராமனையும் மிரட்டியதோடு, தமது திட்டத்திற்கு அவனை ஒத்துழைக்கச் சொல் கிறார். இல்லையெனில், அவனோடு, அவனது தோழி நிர்மலாவும் சேர்ந்து வீணாக அழிய நேரிடும் என்று பயமுறுத்துகிறார்.

வாஷிங்டனைச் சுற்றிப் பார்ப்பதற்காகத் தனது மாமா, மாமி, மற்றும் நல்லதம்பி ஆகியோர் வந்து தன் னுடனேயே தங்கியிருக்கும் இந்தச் சூழ்நிலையில் ரகு ராமன் என்ன செய்வதென்று தெரியாமல் தவிக் கிறான்.

10

நிர்மலாவிடம் கொஞ்சமும் பொறு மையில்லாமல் பேசிவிட்டதை நினைத்து சில நாட்களாக ரகுராமனுக்கு மிகவும் கவலையாக இருந்தது. கூடவே வைர மூர்த்தியின் திட்டம் அவன் மனதைத் துளைத்துக் கொண்டிருந்தது. அவ்வளவு துணிச்சலான காரியத்தைத் தன் உதவியுடன் அவர் செய்யப் பிடிவாதமாக இருந்தது - அவனுக்கு அளவில்லாத பயத்தை ஏற்படுத் தியது. வேறு யாரிடமும் சொல்லக் கூடிய நிலையிலும் அவன் இல்லை. நிர்மலாவும் அவனும் பழைய போஸ்ட் ஆபீஸில் சந்தித்துக் கொண்டதை ஆள் வைத்து அறிந்து கொண்ட வைரமூர்த்தி அவனு டைய அன்றாட நடவடிக்கைகளை நிச்சயம் கண்காணித்து வருவார் என்று நம்பினான்.

அன்று காலை வைரமூர்த்தியைப் பார்க்கச் சென்றவன் நேரடியாக, ''மிஸ். நிர்மலா... என்னை மன்னிக்கணும்'' என் றான்.

''அதற்கு ஒரே வழிதான் இருக் கிறது....'' நிர்மலா முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டாள்.

என்ன என்பதுபோல் ரகுராமன் அவ ளைப் பார்த்தான். அவள் காதில் போட் டிருந்த பச்சைக்கல் தோடு அவள் முகத் துக்குப் பொலிவூட்டியதை அவன் கவ னிக்கத் தவறவில்லை.

''உங்கள் மாமா மாமியைக் கூட்டிக் கொண்டு என் அபார்ட்மெண்ட் வரணும்.... நாளை மாலை என் வீட்டில் உங்களுக்கு எல்லாம் மட்ராஸ் சமையல்... சரியா?'' என்றாள் - புன் சிரிப்புடன்.

''அதில் எங்களுக்கு ஒரு சிக்கல் இருக்கிறது'' என்றான் ரகுராமன்.

''என்ன சிக்கல்?''

''சிக்கலின் பெயர் நல்லதம்பி'' என்று அவரைப் பற்றி ரகுராமன் சிறிது சொன் னான்.

''அப்படின்னா நல்லதம்பியையும் நீங்க கூட்டிக்கிட்டு வரலாம்... எனக்கு ஆட் சேபணை இல்லை..... சரியா ஏழு மணிக்கு வந்திடுங்க'' என்று ஏற்கெனவே எழுதித் தயாராய் வைத்திருந்த தன் விலாசத்தைத் தந்தாள்.

''தேங்க் யூ... மிஸ் நிர்மலா... உங்க ளிடம் உயர்ந்த குணங்கள் நிறைய இருக் கின்றன....''

''இந்த 'மிஸ்' நிர்மலா வேண்டாமே! வெறும் நிர்மலாவே போதுமே'' என்றாள்.

''அப்படின்னா... என்னை ரகுன்னே என் நண்பர்களைப் போல நீங்க சொல்ல லாமே'' என்றான் துணிவுடன்.

அவள் சிறிது தலையைக் குனிந்து கொண்டாள். முதல் முறையாக ரகுராமன் நிர்மலா வெட்கப்படும் காட்சியைக் கண் டான். ஒரு பெண் வெட்கப்படும் போது, கூட இருக்கும் ஆணுக்கு உள்ளத்தில் ஒரு துள்ளல் உண்டாகும். ரகுராமன் முகத்தில் புன்னகை பிறந்தது.

கடிகாரத்தைப் பார்த்தான். வைர மூர்த்தி வருவதற்கு இன்னும் பத்து நிமி டங்கள் இருந்தன. அதற்குள் நிர்மலாவுக்கு வைரமூர்த்தியைப் பற்றி எச்சரித்து விட லாம் என்று நினைத்தான்.

''நிர்மலா... நான் சொல்வதை கவன மாய்க் கேளுங்க. அன்று மாலை நானும் நீங்களும் சந்தித்துப் பேசியது வைர மூர்த்திக்குத் தெரிந்துவிட்டது. நீங்க கவன மாய் இருக்கணும்.''

வாசன்

நிர்மலாவின் முகத்தில் பயம் படர்ந்தது. ஏற்கெனவே வைரமூர்த்தியிடம் இருந்த பயம் பன்மடங்கு கூடியது.

''வேறே ஏதாவது... சொல்ல விரும்ப நீங்களா?''

''வைரமூர்த்தி என்னிடம் சொன்னதெல்லாம் நான் சொல்லும் நிலையில் இல்லை, நிர்மலா.... சொன்னால், உனக்கும் நல்லதில்லை எனக்கும் நல்லதில்லை'' என்று முடித்தான்.

ரகுராமன் ஏதோ வசமாக வைரமூர்த்தியிடம் மாட்டியிருக்கிறான். அது மிக இரகசியமானது என்பதை உடனே நிர்மலா புரிந்து கொண்டாள்.

''என்னிடம் சொல்ல வேண்டாம்.... ஆனால் நீங்களும் கவனமாய் இருங்க.''

கதவை யாரோ இலேசாகத் தட்டிய சத்தம் கேட்டது. வாசலில் ஒரு வெள்ளை அமெரிக்கன் நின்றிருப்பதை நிர்மலா கவனித்தாள்.

''உள்ளே வரலாமே'' என்றாள்.

''என் பெயர் ரிச்சர்ட் மூர்... நான் டாக்டர் வைரமூர்த்தியைப் பார்க்க வேண்டும்'' என்றான் வந்தவன்.

''அவர் திரும்பும் நேரம்தான். ஆனால் அவரைப் பார்க்க அப்பாயிண்ட்மன்ட் உங்களுக்கு இல்லையே'' என்றாள் நிர்மலா.

''எனக்கு அப்பாயிண்ட்மன்ட் தேவையில்லை'' என்று அதிகாரத்துடன் ரிச்சர்ட் மூர் சொன்னான்.

அந்த நேரத்தில் வைரமூர்த்தி உள்ளே நுழைந்தார். ரிச்சர்ட் மூர் அங்கே நின்றிருந்ததைப் பார்த்தவருக்கு முகம் மாறியது. இதை ரகுராமன் கவனித்துக் கொண்டான்.

''மிஸ்டர் ரகுராமன் சிறிது நேரம் காத்திருக்கலாம்... மிஸ்டர் ரிச்சர்ட் மூர் உள்ளே வரட்டும்'' என்று யாருடைய பதிலுக்கும் காத்திருக்காமல் வைரமூர்த்தி உள்ளே போனார்.

ரிச்சர்ட் மூர் சிகரட்டை எடுத்தான். அவனுடைய இடது புறங்கையில் பச்சை குத்தியிருந்ததை நிர்மலா கவனித்தாள். ரிச்சர்ட் நேராக வைரமூர்த்தியின் அறைக்குள் போய்க் கதவை மூடினான்.

11

ரகுராமன் வழக்கத்துக்கு மாறாக சீக்கிரமாக வீடு வந்து சேர்ந்தான். 'அபார்ட்மெண்ட்' கதவைத் தட்டினான். யாரும் திறப்பதாகத் தெரியவில்லை. அவனுக்கு வியப்பாக இருந்தது. 'என்ன இது?' என்று கதவைத் தானாகத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

மணி ஐந்தரையைத் தாண்டிவிட்டிருந்



தது. 'வாஷிங்டனைச் சுற்றிப் பார்க்கப் போயிருப்பார்கள். வழி தவறி எங்கோ திரிந்து கொண்டு இருக்கிறார்கள்' என்று ரகுராமன் நினைத்தான். 'இன்னும் ஒரு நாள் காத்திருந்திருந்தால் நானே கூடப் போய் வழி காட்டியிருப்பேன்' என்று அலுத்துக் கொண்டான்.

இன்னும் அரை மணியில் வராவிட்டால் 'மெட்ரோ சென்டர்' வரை போய்த் தேடிப் பார்க்கலாம் என்று முடிவு செய்து விட்டு, காப்பி போட ஆரம்பித்தான்.

வாசல் கதவு தட்டப்பட்டது. விரைந்து சென்று கதவைத் திறந்தான்.

வாசலில் பூர்ணம் மாமி, அவள் பின் வைத்தியநாதன், நல்லதம்பி, டாக்சி டிரைவர் ஸாம் என்ற சம்பந்தன் நால்வரும் நின்று கொண்டிருந்தார்கள்.

''என்ன தம்பி, நீங்க சீக்கிரமே வந்துட்டீங்க போல இருக்கே'' என்று சொல்லிக் கொண்டே நல்லதம்பி உள்ளே நுழைந்தார்.

''அது இருக்கட்டும். நீங்களெல்லாம் எங்கே போயிட்டீங்க? ஏன் இவ்வளவு லேட்?'' என்று சற்று எரிச்சலுடன் கேட்டான் ரகுராமன்.

''அவங்களைக் கோபிக்காதீங்க மிஸ்டர் ரகுராம்..... ஏதோ கொஞ்சம் வழி தவறிட்டாங்க.... நல்லவேளை, ஸ்டேஷன் வாசல்லே நான் பார்த்தேன்... சரி இவங்களை இங்கே விட்டுடலாம்னு வண்டியிலே கூட்டி வந்தேன்'' என்று ஸாம் கொஞ்சம் பக்குவமாகச் சொல்லிச் சமாளித்தான்.

''ரொம்ப தேங்க்ஸ், ஸாம்...'' என்று ரகுராமன் சொன்ன பிறகு, ''யாருக்கு காப்பி வேணும் சொல்லுங்க'' என்றான்.

எல்லோருக்குமே காப்பி வேண்டியிருந்தது.

'மிஸ்டர் ரகுராம்' என்று ஸாம் தன்னை அடிக்கடி கூப்பிட்டு சகஜமாய்ப் பேசுவது ரகுராமனுக்குப் பிடித்தது. ஸாம் ஒரு நண்பனைப் போல் பழகினான். அவன் மீது ஏதோ பரிவு ரகுராமனுக்கு ஏற்பட்டது. ஸாம் விடை பெற்றுச் சென்றான்.

இரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே மறுநாள் சனிக்கிழமை என்ற பேச்சு வந்தது.

''என்ன தம்பி... சனிக்கிழமை வந்துடுச்சி.... நமக்கு எங்கெங்கே போகத் திட்டம் போட்டிருக்கீங்க?'' என்று ஆர்வத்துடன் நல்லதம்பி கேட்டார்.

முதல்லே நாம 'ஸ்மித்ஸோனியன்' போகலாம். அங்க இரண்டு இல்லே மூணு மியூசியங்கள் தான் பாக்க முடியும்.... அதுக்கே நேரம் சரியாயிடும்... பாத்துட்டு சாயங்காலம் ஏழு மணிக்கு நிர்மலா வீட்டுக்குப் போகணும்..... அங்கேதான் நமக்குச் சாப்பாடு....'' என்று முடித்தான் ரகுராமன்.

''அது யாருடா நிர்மலா? எத்தனை நாளாத் தெரியும்?'' பெண்களுக்கே உரிய ஆர்வத்துடன் பூர்ணம் கேட்டாள்.

''டாக்டர் வைரமூர்த்தியின் செக்ரட்டரியாக வேலை பார்ப்பவள் நிர்மலா....'' என்று விவரங்களைச் சொன்னான்.

''ஏன் தம்பி, நீ படிக்கிற காலேஜிலே டாக்டர் வைரமூர்த்தியை நான் பார்த்துப் பேச முடியுமா?'' என்று திடீரென்று நல்லதம்பி கேட்டார்.

மற்ற மூவருக்கும் அவருடைய கேள்வியின் உள்ளர்த்தம் புரியவில்லை. அவரையே கண்கொட்டாமல் பார்த்தார்கள்.

''டாக்டர் வைரமூர்த்தியை உங்களுக்குத் தெரியுமா?''

''அவரைத் தெரியாது. ஆனா.... அவருடைய தம்பி மட்ராஸ்லே இருந்தார்..... அவரை எனக்கு நல்லாத் தெரியும்.... வைரமூர்த்தி கிட்ட எனக்குக் கொஞ்சம் சேதி சொல்லணுமே தம்பி'' என்று விளக்கினார் நல்லதம்பி.

''அடுத்தவாரம் ஒரு நாள் என் கூட 'யூனிவர்சிட்டி'க்கு வாங்க... நான் வைரமூர்த்தியைப் பார்க்க உங்களைக் கூட்டிப் போறேன்'' என்றான் ரகுராமன்.

12

''அமெரிக்க சட்டசபையின் தீர்மானத்தின்படி, 1791 ம் ஆண்டு வாஷிங்டன் அமெரிக்காவின் தலைநகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. பத்து ஆண்டுகள் கழித்து பிலடெல்பியா நகரத்திலிருந்து வாஷிங்டன் டி.சிக்கு அமெரிக்க அரசு மாறி வந்தது'' என்று ரகுராமன் சரித்திரத்தின் முதல் பகுதியைத் தொடங்கினான்.

நல்லதம்பி மிகவும் சுவாரசியமாய்க் கேட்டுக் கொண்டே வந்தார்.

''1991 ம் ஆண்டு வாஷிங்டன் டி.சியின் இருநூறாம் ஆண்டு விழாவாகும். இந்த ஆண்டு முழுக்க இங்கே வித விதமான கொண்டாட்டங்கள் நடக்கும். வாஷிங்டன் வாசிகள் பெருமைப்படக் கூடிய ஆண்டு இது'' என்று ரகுராமன் சொன்னதும் பூர்ணம் கூட கொஞ்சம் பெருமைப்பட்டாள்.

''நாமும் 1991 ம் ஆண்டு இங்கே வந்திருக்கோமேன்னு எனக்கு சந்தோஷம்'' என்றாள்.

'ஸ்மித்ஸோனியன்' கோட்டையை அடைந்தார்கள். சிவப்புக் கற்களாலான அந்தக் கட்டடம் பன்னிரண்டாம் நூற்றாண்டு கோட்டைகளைப் போலிருந்தது.

கட்டடத்துக்குள் நால்வரும் நுழைந்தனர். உள்ளே இடதுபுறம் இருந்த சிறிய அறைக்கு அழைத்துப் போனான் ரகுராமன்.

அந்த அறையில்தான் 'ஸ்மித்ஸோனியன் இன்ஸ்டிடியூஷன்' அமையக் காரணமாய் இருந்தவரின் வாழ்க்கை வரலாறு இருந்தது.

ஜேம்ஸ் ஸ்மித்ஸன் என்றவர்தான் இவ்வளவுக்கும் பொருளுதவி செய்து, கருத்துக்களையும் தந்தவர். அவர் அமெரிக்கா வந்ததே இல்லை! அவர் 1765 ம் ஆண்டு பிரான்சு தேசத்தில் திருமணம் செய்து கொள்ளாத எலிசபெத் ஹங்கர் போர்ட் கீட்டுக்கும், ஸர் ஹ்யூ ஸ்மித்ஸனுக்கும் பிறந்தவர். பிறப்பில் இழிவு ஏற்பட்டது, சமூகத்தில் ஒரு நல்ல நிலை ஏற்படவில்லை என்றெல்லாம் ஜேம்ஸ் ஸ்மித்ஸன் வருந்தினார். அறிவியலில் தேர்ச்சி பெற்றார். 1786 ம் ஆண்டு ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். உலோக ஆராய்ச்சியில் தேர்ச்சி பெற்று, 'ராயல் ஸொஸைடி'யில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவர் திருமணமே செய்து கொள்ளவில்லை.

தன்னுடைய பெயரை எப்படியும் நிலை நாட்ட வேண்டி, ஜேம்ஸ் ஸ்மித்ஸன் உயிலெழுதும்போது ஒரு விசித்திரமான செயலைச் செய்தார். தன் மருமகன் ஹென்ரி ஹங்கர்போர்ட்டுக்கு மக்கட் செல்வம் இல்லையெனில், தன் சொத்து முழுக்க அமெரிக்க அரசுக்குச் சேரட்டும் என்றும், 'ஸ்மித்ஸோனியன் இன்ஸ்டிடியூஷன்' என்ற பெயரில் மக்கள் அறிவு வளர்ச்சிக்கான நிறுவனமாக அது அமைய வேண்டும் என்றும் எழுதி வைத்தார். அவர் 1829 ல் மறைந்ததும், அவர் மருமகன் 1835 ல் மறைந்தார். மருமகனுக்கு மக்கட் செல்வமே இல்லாமல் போனதால் ஜேம்ஸ் ஸ்மித்ஸனுடைய கடைசி ஆசை நிறைவேறியது. பிறப்பில் தாழ்மை என்று கருதியபோதிலும், தனது கொடையால் என்றென்றும் தன் பெயரை மக்களுக்கு நினைவுறுத்திவிட்டார் ஜேம்ஸ் ஸ்மித்ஸன். வழக்கு, விசாரணை என்று மூன்று ஆண்டுகள் ஓடி, 1833 ல் அமெரிக்க அரசுக்கு ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் டாலர்கள் வந்து சேர்ந்தன. அந்தக் காலத்தில் அது மிக மிகப் பெரிய தொகை!

ஜேம்ஸ் ஸ்மித்ஸன் இத்தாலி தேசத்தில் ஜெனோவா நகரில் 1829 ல் இறந்தார். அவர் சவப்பெட்டி 1904 ம் ஆண்டு வாஷிங்டனுக்குக் கொண்டு வரப்பட்டு, 'ஸ்மித்ஸோனியன்' கோட்டையில் அந்தச் சிறிய அறையில் வைக்கப்பட்டுள்ளது.

''இப்போது இந்த நிறுவனத்தை யார் நடத்தி வருகிறார்கள்?'' என்று கேட்டது நல்லதம்பிதான்.

''அமெரிக்க நாட்டின் தலைமை நீதிபதியைத் தலைவராகக் கொண்ட பதினேழு பேர் உள்ள ஒரு குழுதான் நடத்திவருகிறது. அமெரிக்க உபஜனாதிபதியும், ஆறு சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றும் ஒன்பது பேர் கொண்ட குழு அது'' என்று தயங்காமல் பதில் சொன்னான் ரகுராமன்.

சற்று நேரம் சுற்றிப் பார்த்த பிறகு, ''மணி மூணு ஆகப் போவுது. நேராக எதிரே இருக்கும் 'நேச்சுரல் ஹிஸ்டரி' மியூசியத்துக்குப் போகலாம்'' என்று அவர்களைத் துரிதப்படுத்தினான் ரகுராமன்.

பாதித் தூரம் போனதும், ''அடடா... வலது பக்கம் பார்த்தா அமெரிக்க சட்டசபைக் கட்டடம் தெரிகிறது; இடது பக்கம் அதோ உயரமா இருக்கே அதுதான் வாஷிங்டன் மான்யூமெண்ட்,'' என்று கூறி வைத்தியநாதன் பிரமித்துப் போனார்.

''வாங்க மாமா, நேரமாகுது'' என்று ரகுராமன் நடக்க ஆரம்பித்தான்.

'மாடிசன் அவென்யூ' வழியாகவும், 'கான்ஸ்டிடியூஷன் அவென்யூ' வழியாகவும் 'நேச்சுரல் ஹிஸ்டரி' மியூசியத்துக்குப் போகலாம். ரகுராமன் குழுவினர் 'மாடிசன் அவென்யூ' வழியாய் உள்ளே நுழைந்தனர். கூடத்தின் மையத்தில் 1955 ம் ஆண்டு ஆப்பிரிக்காவில் கொல்லப்பட்ட பிரும்மாண்டமான யானை உருவம் நின்றது. பதின்மூன்று அடி உயரமானது. அதைச் சுற்றிலும் நிறையப் பேர் நின்று கொண்டிருந்தனர். சில சிறுவர் ஆங்காங்கு இருந்த போனைக் காதில் வைத்து அந்த யானையைப் பற்றிய கதையைக் கேட்டுக் கொண்டிருந்தனர். சில நிமிடங்கள் அதைப் பார்த்துவிட்டு ரகுராமன் 'புறப்படலாம்' என்று சொன்னான்.

''மாடிப்படி வழியாக இரண்டாம் தளத்துக்கும் போவோம். அங்கேதான் சமீபத்தில் வெடி விபத்து நடந்தது.... 'எலவேட்டர்' இப்போது வேலை செய்யவில்லை. அடுத்த வாரத்திலிருந்து அந்தப் பகுதி முழுக்கவே மூடப்படுமாம்.... இன்று வந்ததே நல்லதாயிற்று'' என்றான் ரகுராமன்.

'அங்கே என்னடா இருக்கு ரகு?'' என்றாள் பூர்ணம்.

''எல்லாம் உங்களுக்குப் பிடித்த சமாசாரம்தான். விலைமதிப்பில்லாத வைரம், வைடூரியம் உலகின் பல பகுதிகளிலிருந்து வந்திருக்கின்றன'' என்றான் ரகு.

''எனக்கும் பிடிக்கும் தம்பி. அதுலே 'ஹோப்' வைரம்னு ஒண்ணு இருக்காமே தம்பி....'' என்றார் நல்லதம்பி.

'ஹோப்' வைரம்!

ரகுராமன் சட்டென்று நின்றான். நல்லதம்பியை உற்றுப் பார்த்தான். அவர் முகம் எந்தவித மாற்றமும் இல்லாமலிருந்தது.

(தொடரும்)

பொன் விழாப் போட்டியில் ரூ 1,000 முதல் பரிசு பெறும் நாடகம் (அறிமுக எழுத்தாளர்)

சுழற்சி

ஆர். இராஜேந்திரன்

(மேடையின் ஒரு மூலையில் ஒரு சிறிய மேடை இருக்கிறது. அதில் இரண்டு பேர் அமர்ந்து இருக்கின்றனர். அரசியல்வாதி போன்ற தோற்றத்துடன் இருக்கின்றனர். அங்கே அவர்களுக்கு பானங்கள் முதலியவை இருக் கின்றன. மேடையின் கீழே எட்டுப் பேர் உடகார்ந்திருக் கின்றனர். சாதாரண மனிதர்கள் போலத் தோற்றம்.


திரை உயரும் போது arc ஒளி மேடையின் மீது அமர்ந் திருப்பவர்கள் மீது விழுகிறது. அவர்கள் சீட்டு விளையாட ஆரம்பிக்கிறார்கள்.

பிறகு arc ஒளி கீழே அமர்ந்திருப்பவர்கள் மீது விழு கிறது. அனைவரும் மேடையையே பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

பின்னணியில் குயில்கள் இசை... சிறிது நேரம் கழித்து...)

நபர் 1 : ம்... எவ்வளவு நேரம் இப்படியே இருக்கிறது...?
நபர் 2 : இருட்டுற வரைக்கும்....
நபர் 3 : இருட்டு வந்ததும்...?
நபர் 4 : இருட்டிலே இருப்போம்... மறுபடி விடியும்...
நபர் 5 : விடிஞ்சதுக்கு அப்புறம்...
நபர் 6 : மறுபடி இதையே செய்வோம்...
(சிறிது மௌனம்...)

நபர் 7 : அர்த்தமில்லாம இருக்கு...
நபர் 8 : உண்மைதான். அர்த்தமில்லாம இருக்கு....
நபர் 1 : எது...?
நபர் 8 : இப்படி உட்கார்ந்திருக்கிறது...
நபர் 7 : இல்லை, நம்ப வாழ்க்கை...
நபர் 2 : உண்மைதான்... நம்ப வாழ்க்கை அர்த்தமில்லாமத் தான் இருக்கு...
நபர் 7 : எதுக்காக நாம இங்கே காத்திருக்கோம்...?
நபர் 3 : யாருக்குத் தெரியும்...!
நபர் 4 : என்னது... எதுக்காகக் காத்திருக்கோம்னு யாருக்கும் தெரியாதா... தெரிஞ்சவங்க யாருமே இல்லையா...?
நபர் 1 : எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்லேர்ந்து இப்படித் தான் நடக்குது...
நபர் 5 : ஆமாம்... நமக்கு முன்னாடி இருந்தவங்க வகுத்து வைச்சது...
நபர் 7 : அர்த்தமில்லாதது...
நபர் 6 : பெரியவங்க ஏற்படுத்தினது. அப்படி சொல்லக் கூடாது...
நபர் 8 : அப்போ மேலே உட்கார்ந்திருக்கிற வங்க எல்லாம் யாரு...?



நபர் 4 : அதானே... அவங்க மட்டும் ஏன் மேலே உட்கார்ந்திருக்காங்க...
நபர் 2 : நமக்காகத்தான்...
நபர் 6 : நமக்காகவா...
நபர் 3 : ஆமாம்... நாம எல்லாரும் மேலே போக முடியாதில்லையா, அதனால தான்...
நபர் 5 : அப்படின்னா... அவுங்களும் ஒரு காலத்துலே...
நபர் 1 : கீழே இருந்தவங்கதான்...
நபர் 7 : மேலே இருக்கிறவங்க கொடுத்து வைச்சவங்க, இல்லை...?
நபர் 8 : ஏன் அப்படி?
நபர் 6 : வசதியா இருக்காங்க...
நபர் 5 : என்ன பண்றது? நம்ப தலை விதி இப்படி...
(சிறிது மௌனம்...)
நபர் 7 : இப்படியே இருந்தா நமக்குப் பைத்தியம் பிடிச்சுடும்...
நபர் 4 : என்ன பண்றது...?
நபர் 3 : ஏதாவது விளையாடலாம்...
நபர் 6 : என்ன விளையாடறது...?
நபர் 8 : ஓடிப் பிடிச்சு விளையாடலாம்...
நபர் 1 : வேண்டாம். அது சின்னப் பசங்க விளையாட்டு...
நபர் 2 : 'கண்ணாமூச்சி?'...
நபர் 8 : அது மட்டுமென்ன?
(எல்லோரும் யோசிப்பது போல் ஒரு பாவனை...)
நபர் 5 : ஆங்... நான் ஒரு யோசனை சொல்றேன்...
நபர் 1 : சொல்லு...
நபர் 5 : இப்போ ''கண்''னு சொன்னா... எல்லாரும் உடனே ''கண்''ணைத் தொடணும்... ''கை''ன்னு சொன்னா.. உடனே கையைத் தொடணும், என்ன...
நபர் 2 : நல்லாயிருக்குது விளையாட்டு..
நபர் 3 : அப்ப சரி... எல்லாரும் தயாரா... நான் சொல்றேன்... ''தலை!'
அனைவரும் : தலை.
(தலையைத் தொடுகின்றனர்... அப்படியே தொடருகின்றனர்...)
நபர் 3 : கண்... காது... மூக்கு... வாய்... நெஞ்சு... வயிறு...
(அனைவரும் வயிற்றைத் தொடுகிறார்கள்... ''வயிறு... வயிறு...'' என்று அனைவரும் திரும்பத் திரும்பச் சொல்கின்றனர். பிறகு ''பசி... பசி... பசி...'' என்கின்றனர். மெல்ல மெல்லக் குரல் உச்சத்தை அடைகிறது... குரலைக் கேட்டு மேலே இருப்பவர்கள் காதைப் பொத்திக் கொள்கின்றனர். பிறகு எழுந்து வருகின்றனர்.)
மேல் நபர் 1 : நிறுத்துங்க... நிறுத்துங்க...
மேல் நபர் 2 : ஏன் இப்படி சப்தம் போடறீங்க...?
அனைவரும் : பசி... பசி... பசி...
நபர் 7 : சோறு வேணும்...
அனைவரும் : ஆமாம்... சோறு வேணும்... பசி.. சோறு வேணும்...
மேல் நபர் 1 : பசியா...?
மேல் நபர் 2 : சோறா...?
மேல் நபர் 1 : இந்த வார்த்தையை உங்களுக்கு யாரு சொல்லிக் கொடுத்தது..?
மேல் நபர் 2 : இதுல ஏதோ சதி இருக்குது...
மேல் நபர் 1 : ஏதோ அயல்நாட்டுச் சதின்னு நான் நினைக்கிறேன்...
மேல் நபர் 2 : நம்மை செயல்படாம தடுக்க அவுங்க செய்ற சூழ்ச்சிதான் இது...
மேல் நபர் 1 : இதுக்கெல்லாம் நீங்க இடம் தரக் கூடாது. உங்களுக்காகத்தானே நாங்க இங்கே உட்கார்ந்திருக்கோம்...
மேல் நபர் 2 : எவ்வளவு கஷ்டப்படறோம். இவ்வளவு உயரத்துல உட்கார்ந்துக்கிட்டு, உயிரையும் பத்திக் கவலைப் படாம... உங்களுக்காகத்தானே உழைக்கிறோம்...
நபர் 7 : நீங்க மட்டும்தானே வசதியா இருக்கீங்க...
மே. நபர் 2 : யாரது... யாரது கேட்டது? (மிரட்டலாக)
மே. நபர் 1 : நாங்க என்ன வசதியா இருக்கோம்..? இவ்வளவு உயரத்துல இருந்து பார்த்தா உங்களுக்குத் தெரி

''உங்க மீட்டிங்ன்னு சொன்னாலே, யாரும், 'மைக்-செட்' தர மாட்டேங்கிறான்..''

''ஏனாம்...?''

''எல்லாம், நீங்க, 'சட்டசபையில் 'மைக்கை' உடைத்ததால், வந்த வினை...''

- ஆர். வசந்தகுமார்





தகப்பனார் : ''உன் ஜாதகத்துல ஏழாம் வீட்டுலே ராகு இருக்கிறான். எட்டாம் வீட்டுலே புதன் இருக்கிறான்னு ஜோஸியர் சொல்றாரு!''

மகள் : இன்னும் கொஞ்சம் நல்லாப் பார்க்கச் சொல்லுங்கப்பா! 10-ம் வீட்டுலே சுரேஷ் இருக்கிறதும் தெரியும்...''

- செங்குன்றம் ரமேஷ்ராம்

உங்கள் கண்மணி தத்தி தத்தி முதல் அடி எடுத்து வைக்குமுன்...

அக்குழந்தை லட்சாதிபதியாக வளர்வதற்கான வலிமையான அடியை நீங்கள் வைத்திடுங்கள்.

நீங்கள் அறியாமலேயே நாட்கள் பறந்து உங்கள் கண்மணி வளர்ந்து வெளி புலகில் காலடி எடுத்து வைக்கும் நேரம் வந்து விடும். வாழ்க்கையை தனியாக எதிர் நோக்க. உங்கள் இன்றைய ஆலோசனை. உங்கள் கண்மணியின் நாளைய நல்ல ஆரம்பம். யூனிட் ட்ரஸ்டின் குழந்தைகள் பரிசு வளரும் நிதியில் முதலீடு செய்யுங்கள். உங்கள் சிறிய சேமிப்பும் உங்கள் கண்மணியை லட்சாதிபதியாக்குவதை காணலாம். நீங்கள் ஒரு பெரிய தொகையை ஒருமிக்க முதலீடு செய்யலாம் அல்லது சிறு சிறு தொகையாக வருடா வருடம் முதலீடு செய்யலாம். உங்கள் கண்மணி 21 வயதாகும்போது இப்பரிசும் பக்குவ மடைகிறது. இத்தொகையை அவன் அவசியப்படி செலவாக்கலாம்.

இப்பொழுது ஒரு வசதியான சலுகை. இப்பணத்தை உங்கள் குழந்தை 18 வயதான பின் வருடத்திற்கு இரு முறை பெறலாம். அதாவது தேவை ஏதுவாயினும் இதை உபயோகித்துக் கொள்ளலாம். மீதிப்பணம் உங்கள் குழந்தை 21 வயதாகும்வரை வளர்ந்து கொண்டிருக்கும்.



மேலும் விவரங்கட்கு அணுகுங்கள்: எங்களது ஏஜெண்டுகள், முக்கிய பிரதிநிதிகள், ஸ்பென்சர் அண்டு கம்பெனியின் கிளைகள், ANZ கிரின்லேஸ் வங்கியின் கிளைகள், சென்னையில் ஸ்டாப் அண்டு ஷாப் செலின் ஸ்டோர்ஸ் லிட். மற்றும் ஹைதராபாத்தில் பஞ்சவடி சூப்பர் மார்க்கெட்.

டிவிடெண்ட் இப்பொழுது 13% ஆக அதிகரித்துள்ளது. நினைவிருக்கட்டும் 5 வருடத்திற்கு ஒரு முறை போனஸ் டிவிடெண்டும்* அளிக்கப்படும்.

* 1986-91க்காக அறிவிக்கப்பட்ட போனஸ் டிவிடெண்ட் 5%

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா
ஒரு கோடி யூனிட்தாரர்களின் சேவைக்கென சமர்ப்பணம்

யூனிட் ட்ரஸ்ட்டின் குழந்தைகள் பரிசு வளரும் நிதியில் முதலீடு செய்யுங்கள்.

அனைத்து செக்யூரிட்டிகள் முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்க் கொண்டதாகும். நீங்கள் எந்த முதலீடும் செய்வதற்கு முன் உங்களுடைய முதலீடு ஆலோசகர் அல்லது முகவரை கலந்தாலோசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Sista's UTI.17702.91 TM.C

Zonal Office: 45, Second Line Beach, Madras 600 001. Ph: 587433, 562257. **Branch Office:** ☐ **Trichy** • 104, Salai Road, Woraiyur, Tiruchirapalli 620 003. Ph: 32837.

Our Chief Representatives in Tamilnadu ☐ ANNA DIST. • **S. Jeyachandran,** Dindigul, Ph: 3535 ☐ COIMBATORE • **A. Dhanabal,** Ph: 26313 ☐ DHARMAPURI • **S.A. Mathaiyan,** Ph: 6152 ☐ KAMARAJAR DIST. • **R. Venkateswaran,** Rajapalayam, Ph: 22433, 21360, 21771 ☐ KANYAKUMARI • **S. Subash Chandra Bose,** Nagercoil, Ph: 3474 ☐ MADURAI • **M. Ramamoorthy,** Ph: 43179 ☐ NORTH ARCOT • **P. Narayanan,** Vellore, Ph: 21575 ☐ NILGIRIS • **M. Madhavan Nambiar,** Coonoor, Ph: 21037 ☐ PERIYAR DIST. • **K. Jyothi Ramalingam,** Erode, Ph: 78285, 71785, 74785 ☐ P M DIST. • **R. Ramasamy,** Karaikudi, Ph: 2277 ☐ RAMANATHAPURAM • **A. Balakrishnan,** 45, North Car Street, Ramanathapuram 623 501 ☐ SALEM • **N.K. Inkarsal,** Ph: 66414 ☐ SOUTH ARCOT • **S. Balakrishnan,** Cuddallore, Ph: 377, 46 ☐ THANJAVUR • **K. Muthusamy,** Ph: 20374 ☐ TIRUNELVELI • **P. Venkatraman,** Ph: 26314 ☐ VOC DIST. • **K. Ramamoorthy,** Tuticorin, Ph: 21311.

யும்... நாங்க படற கஷ்டம் எங்களுக்குத்தான் தெரியும்...

நபர் 6 : நாங்க படறது உங்களுக்குத் தெரியலையே...

மே. நபர் 2 : எல்லாரும் கவனிங்க... உங்க கஷ்டத்தைப் போக்கத்தான். ஒரு கோயில் கட்டப் போறோம்...

நபர் 1 : கோயிலா...

மே. நபர் 1 : ஆமாம்... பெரிய பிரம்மாண்டமான கோயில்...

நபர் 2 : கோயில் கட்டினா...

மே. நபர் 2 : சாமி கும்பிடலாம்.

நபர் 3 : சாமி கும்பிட்டா...

மே. நபர் 1 : நல்லது உங்களுக்கு...

நபர் 4 : அப்படின்னா... ரொம்ப சந்தோஷம்...

நபர் 5 : எல்லாம் சரிதான்... கோயில்ல எந்த சாமியை வைக்கிறது...?

மே. நபர் 2 : ஏன் எங்க சாமிதான், அதிலென்ன சந்தேகம்...!

நபர் 6 : அதெப்படி... அவன் சாமி வேற என் சாமி வேற... நான் எப்படி அவன் கோயிலுக்குப் போவேன்?

நபர் 5 : அதானே... என் சாமி கூட வேற தான்...

மே. நபர் 1 : அப்போ... ஒண்ணு செய்வோம், ஆளுக்கு ஒரு கோயில்... ஆளுக்கு ஒரு சாமி...

நபர் 4 : அதுதான் நல்லது...

மே. நபர் 2 : அப்போ... அவுங்க அவுங்க அவங்களோட சாமியைக் கும்பிடுங்க... மத்ததைப் பத்திக் கவலைப்படாதீங்க... நாங்க பார்த்துக்குறோம்...

(ஆளுக்கொரு மாதிரி வழிபாடு செய்கிறார்கள். மறுபடி மறுபடி வழிபாடு செய்கிறார்கள். மேல் நபர்கள் சென்று அமர்கிறார்கள். இவர்கள் வழிபாடு செய்து ஓய்ந்து விழுகிறார்கள்)

நபர் 7 : ஏன் நிறுத்திட்டீங்க... இன்னமும் செய்யுங்க... இப்படியே செஞ்சுதான் சாகப் போறீங்க...

நபர் 8 : வேற என்ன செய்றது...?

நபர் 1 : ஒண்ணும் புரியலை..

நபர் 2 : எது புரியலை...?

நபர் 3 : மேலே இருக்கிறவங்க சொல்றது தான்...

நபர் 4 : அது மட்டுமில்லை... நாம சொல்றதும் அவுங்களுக்குப் புரியலை...

நபர் 5 : ஏன் அப்படி...?

நபர் 6 : அவுங்க மேலயிருக்காங்க. நாம கீழே இருக்கோம்...

நபர் 8 : நாம்பளும் மேலே போகலாம்...

நபர் 1 : அதெப்படி முடியும்...?

நபர் 3 : ஏன் முடியாது...?

நபர் 4 : எல்லாரும் போக இடம் இல்லையே...

நபர் 6 : ஆமாம்... அதையும் யோசிக்க

னும்...

(எல்லோரும் யோசிக்கும் பாவனை...)

நபர் 7 : நான் ஒரு யோசனை சொல்றேன்...

நபர் 8 : என்ன உடனே சொல்லு...

நபர் 7 : நமக்குள்ளே யாராவது ஒருத்தனை மேல ஏத்துவோம்...

நபர் 6 : அப்படி ஏத்தினா...

நபர் 7 : அவனுக்கு நம்மோட கஷ்டம் தெரியும்...

நபர் 5 : கஷ்டம் தெரிஞ்சா...

நபர் 7 : கஷ்டம் தீர்த்து வைப்பான்...

நபர் 2 : அதுவும் நல்ல யோசனைதான்...

நபர் 1 : ஆனா அதுல ஒரு சிக்கல்...

நபர் 3 : என்ன சிக்கல்...?

நபர் 1 : யாரை மேலே ஏத்தி விடறது?

நபர் 4 : அதானே, யாரை மேலே ஏத்தி விடறது...

நபர் 8 : நமக்குள்ளே பேசி ஒரு முடிவுக்கு வருவோம்...

நபர் 7 : பேசினா ஒண்ணும் முடிவுக்கு வர முடியாது...

நபர் 6 : வேற என்ன செய்யலாம்...?

(யோசிக்கும் பாவனை...)

நபர் 2 : ஆங்... எனக்கு ஒரு யோசனை...

நபர் 8 : என்ன, சொல்லு உடனே...

நபர் 2 : ''சாட் பூட் த்திரி'' போட்டுப் பார்ப்போம்... ஜெயிச்சவனை மேலே அனுப்புவோம்...

நபர் 3 : அதுதான் சரி..

(அனைவரும் ''சாட் பூட் த்திரி'' போடுகின்றனர். நபர் 7 மட்டுமே ஜெயிக்கிறான்...)

நபர் 1 : இவன்தான் ஜெயிச்சான்... இவன் தான் ஜெயிச்சான்...

நபர் 2 : இவனைத்தான் மேலே ஏத்தணும்... எல்லோரும் சேர்ந்து மேலே ஏத்துவோம்...

நபர் 3 : தூக்குறது ரொம்ப கஷ்டமா இருக்கும்.

நபர் 5 : பாட்டுப் பாடினா சுலபமா இருக்கும்....

நபர் 6 : என்ன பாட்டுப் பாடலாம்...?

நபர் 7 : நான் எழுதின பாட்டுச் சொல்லவா..

நபர் 4 : சொல்லு... சொல்லு...

நபர் 7 : எங்கள் ஓட்டு... உனக்கே... உனக்கே...

நபர் 6 : நல்ல பாட்டு...

நபர் 8 : ஓட்டுன்னா என்ன...?

நபர் 7 : ''ஓட்டு''க்கு ஒண்ணும் அர்த்தமில்லை...

நபர் 5 : அப்ப சரிதான்...

நபர் 2 : எல்லாரும் சேர்ந்து தூக்குவோம் அவனை... பாட்டுப் பாடித் தூக்குவோம் அவனை...

(எல்லோரும் சேர்ந்து பாட்டுப் பாடி அவனை மேலே ஏற்றுகின்றனர்... மேலே ஏறியவன் வணங்குகிறான்... அனைவரும் கை தட்டுகிறார்கள்...)

நபர் 1 : ஜெயிச்சவன்...

அனைவரும் : வாழ்க...

(''வாழ்க வாழ்க'' என்று கோஷம் உச்சத்தில் கேட்கிறது... மேலே ஏறியவனைப் பார்த்து அங்கே உள்ளவர்கள் திகைக்கிறார்கள்... ஒளி மேடையில் மட்டும் விழுகிறது. நபர் 7 அவர்களிடம் ஏதோ வாதாடுகிறான். அவர்கள் அவனைச் சமாதானப்படுத்துகிறார்கள்... பிறகு அவனை அணைத்துக் கொள்கின்றனர்... அவனும் அவர்களுடன் சேர்ந்து சீட்டு விளையாடுகிறான்... ''வாழ்க வாழ்க'' ஒலி மெல்ல மெல்லத் தேய்கிறது.

கீழே அமர்ந்திருப்பவர்கள் மீது வெளிச்சம் விழுகிறது. அனைவரும் மேடையையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பின்னணியில் குயில்கள் இசை. சிறிது நேரம் கழித்து...)

நபர் 1 : ம்... எவ்வளவு நேரம் இப்படியே இருக்கிறது...?

நபர் 2 : இருட்டுற வரைக்கும்...

நபர் 3 : இருட்டு வந்ததும்...

நபர் 4 : இருட்டிலே இருப்போம்... மறுபடி விடியும்.

நபர் 5 : விடிஞ்சதுக்கு அப்புறம்...?

நபர் 6 : மறுபடி இதையே செய்வோம்...

(திரை)



ஆறும் நூறும்!

''ஆறிலும் சாவு, நூறிலும் சாவு'' என்கிற பழமொழிக்கு, இளம்பிறை மணிமாறன் ஒரு நூதனமான விளக்கம் கொடுத்தார் :

''குந்திதேவிக்குத் தன் மூத்த மகன் கர்ணனைத் தெரிந்ததும், கிருஷ்ணனிடம், 'கர்ணனையும் நீதான் காப்பாற்ற வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டதற்கு, கிருஷ்ண பரமாத்மா, 'கர்ணன் பஞ்சபாண்டவர்களுடன் சேர்ந்து ஆறாவதாக நின்று யுத்தம் செய்தாலும் இறப்பான். துரியோதனாதிகளான நூறு பேருடன் சேர்ந்து யுத்தம் செய்தாலும் இறப்பது திண்ணம். விதியை மாற்ற முடியாது' எனக் கூறினாராம். அதனால்தான், 'ஆறிலும் சாவு, நூறிலும் சாவு' என்கிற பழமொழியே வந்தது.''

பிரசங்கத்தைக் கேட்டு எழுதியவர் :

என். வி. கிருஷ்ணன்

சிவகாமியின் சபதம்

முன்கதை – ரத்னச் சுருக்கமாக....

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட மகேந்திர பல்லவர் பல்வேறு கலைகளில் ஆர்வம் கொண்டவராக விளங்கி, அதனால் நாட்டின் பாதுகாப்பைக் கவனியாமல் இருந்தார். இதைத் தெரிந்து கொண்டு மாபெரும் சேனையுடன் படையெடுத்து வந்தான் சளுக்க சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி வாதாபி புலிகேசி. அவன் வழியில் எங்கும் தங்காமல் நேரே வந்திருந்தால், காஞ்சிக் கோட்டை மிக எளிதாக அவன் வசப்பட்டிருக்கும். அதைத்தான் புலிகேசியின் ஒற்றனும் புத்த பிக்ஷுவுமான நாகநந்தி விரும்பி, செய்தியும் அனுப்பினார்.

ஆனால் மிருக பலத்தை, அறிவாற்றலுடன் கூடிய மகேந்திர பல்லவரின் தந்திர சாமர்த்தியங்கள் முறியடித்து விட்டன. நாகநந்தியின் சூழ்ச்சிகளுக்கு எதிர் சூழ்ச்சிகள் பல செய்து, வட பெண்ணைக் கரையிலேயே புலிகேசியைப் பல காலம் தாமதிக்கச் செய்தார். இதற்கிடையில் தமது மகன் மாமல்ல நரசிம்ம பல்லவனையும் தளபதி பரஞ்சோதியையும் ஊக்குவித்துக் காஞ்சிக் கோட்டையைப் பலப்படுத்தினார்.

வீர மாமல்ல நரசிம்மனுக்கும், சிற்பி மகளும் ஆடலரசியுமான சிவகாமிக்கும் இடையில் காதல் மலர்ந்து, நாளுக்கு நாள் வலுப்பெற்று வந்தது. புள்ளலூர்ப் போர்க்களத்தில் துர்விநீதனைப் புறங்காணச் செய்து வந்த மாமல்லர், சிவகாமியை மண்டபப்பட்டு கிராமத்தில் சந்திக்க, இருவரும் இதயங்களைப் பரிமாறிக் கொள்ள, அவர்களுடைய காதல் அசைக்க முடியாததாயிற்று.

இதே நேரத்தில் வாதாபி ஒற்றன் நாகநந்தி பிக்ஷு, சிவகாமியின் கலைத்திறன் மீது மோகம் கொண்டவராக, மாமல்லனைக் கொன்றுவிடவும் முயற்சி செய்தார். அந்த முயற்சி மகேந்திர பல்லவரின் ஒற்றர்களின் திறமை காரணமாகவும் தெய்வ அருளாலும் தோல்வி அடைந்தது. மாறு வேஷத்தில் மண்டபப்பட்டு கிராமத்துக்கு வந்த மகேந்திர பல்லவர், 'நாட்டின் எதிர்காலத்தை உத்தேசித்து, சிவகாமி தன் காதலைத் தியாகம் செய்து மாமல்லனை விட்டுக் கொடுக்க வேண்டும்' என்று கோரினார். சிவகாமி உறுதியாக இருக்க, மகேந்திர பல்லவர் வெட்கத்தோடும் வேதனையோடும் தலைநகர் திரும்பினார்.

வடபெண்ணைக் கரையிலிருந்து பின்வாங்கிய பல்லவ சேனை காஞ்சிக் கோட்டைக்குள் புக, காஞ்சி முற்றுகை தொடங்கியது. அதே சமயம், இது நாள்வரை தமது ராஜ தந்திரத்தின் ஓர் அம்சமாக வெளியே உலவ விட்டிருந்த ஒற்றன் நாகநந்தி பிக்ஷுவைக் கைது செய்து சிறையில் அடைத்தார் மகேந்திரர்.

பலகாலம் முற்றுகை நடத்தியும் புலிகேசியால் காஞ்சிக் கோட்டையைப் பிடிக்க முடியவில்லை. இதற்கிடையில் அவனது சேனையும் போதிய உணவின்றிச் சோர்வடையவே சமாதானத் தூது அனுப்பினான். அவனை நம்பிய மகேந்திர பல்லவர், கோட்டைக்குள் அவனை வரவேற்று, ராஜோபசாரம் செய்தார்.

இது மாமல்லனுக்குப் பிடிக்காமல் போகவே, அவனும் தளபதி பரஞ்சோதியும் பாண்டிய மன்னனுக்குப் பாடம் கற்பிக்கக் காஞ்சிக் கோட்டையை விட்டு வெளியேறினர். அதே நேரத்தில் புலிகேசிக்கு முன் ராஜசபையில் நடனமாட மகேந்திர பல்லவரால் தருவிக்கப்பட்டாள் சிவகாமி.

அவள் அழகும், அவளுக்கும் அவள் தகப்பனார் ஆயனச் சிற்பிக்கும் காண்பிக்கப்படும் மரியாதையும் புலிகேசியை பிரமிக்க வைத்தன. காஞ்சியின் செல்வச் செழிப்பு பொறாமையை வளர்த்தது. மாமல்ல நரசிம்மனைக் காணாதது வியப்பையும் ஏமாற்றத்தையும் அளித்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, 'நாகநந்தி பிக்ஷு என்ன ஆனார்?' என்ற கேள்வி புலிகேசியின் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருந்தது.

இனி தொடர்ந்து படியுங்கள்.

பதினாறாம் அத்தியாயம்
புலிகேசியின் புறப்பாடு

மறு நாள் காஞ்சி நகரில் மீண்டும் ஒரு பெரிய கொண்டாட்டம். அன்று வாதாபிச் சக்கரவர்த்தி புலிகேசி காஞ்சியிலிருந்து புறப்படுவதாக ஏற்பாடாகியிருந்தது.

புறப்படுவதற்கு முன்னால் இன்னொரு தடவை காஞ்சிமா நகரை நன்றாய்ப் பார்க்க வேண்டுமென்று புலிகேசி விரும்பினார்.

எனவே இரு சக்கரவர்த்திகளும் பட்டத்து யானை மீது அமர்ந்து நகர்வலம் கிளம்பினார்கள். இந்த வைபவத்தை முன்னிட்டுக் காஞ்சி நகரம் அன்று மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. நகர மாந்தர்கள் - ஸ்திரீகளும் புருஷர்களும் - அழகிய ஆடை ஆபரணங்கள் பூண்டு தெரு ஓரங்களில் கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே பலவகை வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. உப்பரிகை மேல் மாடங்களிலிருந்து இரு சக்கரவர்த்திகளும் அமர்ந்து சென்ற பட்டத்து யானை மீது மலர் மாரி பொழிந்து கொண்டிருந்தது.

காஞ்சிமா நகரின் அழகிய விசாலமான வீதிகளையும், மாட மாளிகைகளையும், கோயில்களையும், கோபுரங்களையும், சிற்ப சித்திர மண்டபங்களையும், நடன அரங்கங்களையும், புத்த விஹாரங்களையும் சமணர் ஆலயங்களையும் எவ்வளவுதான் பார்த்தாலும் புலிகேசிக்கு அலுப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

''பாரவியை மகா கவி என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அவர் எவ்வளவு மட்டமான கவி என்பது இப் போதுதான் தெரிகிறது.....'' என்றார் வாதாபிச் சக்கரவர்த்தி திடீரென்று.

''அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்? பாரவியின் 'கிராதார்ஜுனீயம்' எவ்வளவு அழகான காவியம்?.... தாங்கள் படித்திருக்கிறீர்கள் அல்லவா?'' என்றார் மகேந்திர பல்லவர்.

''ஆ! இந்தக் கவிகள் மலையையும் காட்டையும் மழையையும் மேகத்தையும் வர்ணிக்கச் சொன்னால் வர்ணிப்பார்கள். இந்த மாதிரி ஒரு நகரத்தை வர்ணிக்கச் சொன்னால் அப்போது அவர்களுடைய சாமர்த்தியமெல்லாம் எங்கோ போய் விடுகிறது! பாரவி இந்த நகரத்தைப் பற்றி எனக்கு எழுதிய வர்ணனையெல்லாம் இதன் உண்மைச் சிறப்பில் கால் பங்குகூட வராது... பல்லவேந்திரா! நான் ஒன்று சொல்கிறேன், கேட்கிறீர்களா? நாம் இருவரும் ஒரு பரிவர்த்தனை செய்து கொள்வோம். நர்மதையிலிருந்து துங்கபத்திரை வரை பரந்து கிடக்கும் என்னுடைய சாம்ராஜ்யம் முழுவதையும் எடுத்துக் கொண்டு அதற்கு மாற்றாக இந்தக் காஞ்சி நகரை மட்டும் எனக்குக் கொடுங்கள்!'' என்றார் வாதாபி அரசர்.

''மன்னர் மன்னா! திவ்யமாக இந்தக் காஞ்சி நகரை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்கு மாறாக, உங்கள் இராஜ்யம் முழுவதையும் எனக்குக் கொடுக்க வேண்டாம். அஜந்தா மலையையும் அதன் குகைகளையும் மட்டும் கொடுத்தால் போதும்! கல்லினாலும் சுண்ணாம்பினாலும் மண்ணினாலும் மரத்தினாலும் கட்டிய இந்த மாநகரின் கட்டடங்கள் எல்லாம் ஒரு காலத்தில் இடிந்து தகர்ந்து போனாலும் போகலாம்; அஜந்தா மலைக் குகைகளில் எழுதிய அழியா வர்ணச் சித்திரங்கள் நீடூழி காலம் இருக்கும். சளுக்க குல சிரேஷ்டரே! தங்களுக்கு ஒரு சமாசாரம் தெரியுமா? நேற்று நடனமாடினாளே, சிவகாமி! ''வாதாபிக்குப் போகிறாயா?'' என்று கேட்டதும், அவள் அவ்வளவு மனத்தாங்கலுடன் பேசினாள் அல்லவா? நீங்கள் மட்டும் அவள் தந்தை ஆயனரிடம் அஜந்தாவைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டியதுதான்; உங்களுடன் வந்தால் அஜந்தா வர்ண இரகசியத்தைத் தெரியப்படுத்துவதாகச் சொல்ல வேண்டியதுதான். உடனே உங்களுடன் புறப்பட்டு வர ஆயத்தமாகி விடுவார்!....''

''அப்படியா? ஆயனச் சிற்பிக்கு அஜந்தாவர்ண விஷயத்தில் அவ்வளவு அக்கறையா?'' என்று புலிகேசி கேட்டபோது ஏதோ பழைய நினைவு வந்தவரைப் போல அவருடைய கண்களில் சிந்தனைக் குறி தோன்றியது.

''ஆமாம்; ஆமாம், அஜந்தா வர்ண இரகசியத்தைத் தெரிந்து கொண்டு வருவதற்காக ஆயனர் தூது கூட அனுப்பினாரே, அது உங்களுக்கு ஞாபகம் இல்லையா?'' என்றார் பல்லவ சக்கரவர்த்தி. பின்னர் தொடர்ந்து, ''ஆகா! அந்த ஓலையைப் படிக்கக் கேட்டபோது நீங்கள் எப்படித் திகைத்தீர்கள்!'' என்று கூறிவிட்டுக் கலகலவென்று நகைத்தார். விதி, விதி என்று சொல்கிறார்களே, அந்த விதியானது அப்போது மகேந்திர வர்மரின் நாவிலே வந்து உட்கார்ந்து கொண்டது. அது காரணமாக, மகாமேதாவியும்; தீர்க்க திருஷ்டியுள்ளவரும், சாணக்கிய சாகஸத்தில் இணையற்றவருமான அந்தப் பல்லவ சிரேஷ்டர், நாவின் அடக்கத்தை இழந்தார்.

யாகாவா ராயினும் நாகாக்க
காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

என்னும் பொய்யாமொழிப் புலவரின் வாக்கை நன்கறிந்தவராயினும் அச்சமயம் அதை மறந்துவிட்டார். அவருடைய இதய அந்தரங்கத்துக்குள்ளே கிடந்த ரகசியங்கள் ஒவ்வொன்றாய் வெளி வரலாயின.

மகேந்திர பல்லவரின் கடைசி வார்த்தைகள் புலிகேசியின் உடம்பில் ஏக காலத்தில் பல தேள்கள் கொட்டியது போன்ற உணர்ச்சியை உண்டாக்கியதாகத் தோன்றியது. ''சத்ருமல்லா! எதைப்பற்றிச் சொல்கிறீர்கள்? உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டுவிட்டு, பாம்பு சீறுவதைப்போல் பெருமூச்சு விட்டார் புலிகேசி.

மகேந்திர பல்லவர் மறுபடியும் நகைத்து, ''ஆமாம்! அந்தக் காட்சியை நினைத்தால் எனக்கு இன்னமும் சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது. வடபெண்ணை நதியை நீங்கள் நெருங்கிவிட்டீர்கள். முதலில் ஒரு தூதன் ஓலையைக் கொண்டு வந்து கொடுக்கிறான். அதிலே நீங்கள் எதிர்பாராதவிதமாய் ஏதோ எழுதியிருக்கிறது. உங்களுக்குக் கோபம் கோபமாய் வருகிறது. அந்தச் சமயத்தில் ஓர் இளம் பிள்ளையைச் சிறைப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அவனிடமும் ஓர் ஓலை இருக்கிறது. அதைப் படித்தால், பூஜை வேளை

அமரர் கல்கி

யில் கரடியை விடுவதுபோல், அஜந்தா வர்ண இரகசியத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறது. அப்போது உங்களுடைய முகத்தைப் பார்க்க வேண்டுமே? - அதிர்ஷ்டவசத்தினால், அந்தப் பிள்ளையாண்டானை உடனே சிரச்சேதம் பண்ணச் சொல்லாமல் நாகார்ஜுன மலைக்கு அனுப்பச் செய்தீர்கள்!'' என்றார்.

''விசித்திர சித்தரே! இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது? கிட்ட இருந்து பார்த்ததுபோல் சொல்கிறீர்களே?'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு கேட்டார் புலிகேசி.

''கிட்ட இருந்து பார்த்ததனால்தான் தெரிந்தது!'' என்றார் மகேந்திர சக்கரவர்த்தி.

புலிகேசி மகேந்திரரின் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு ''ஆ! அப்படியானால், அந்த வஜ்ரபாஹு என்கிற தூதன் தாங்கள்தானாக்கும்!'' என்றார்.

''அடியேன்தான்!'' என்றார் மகேந்திர பல்லவர்.

''என் மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்த பல மர்மங்களில் ஒன்று வெளியாகி விட்டது. மீதமுள்ள மர்மங்களைக் கண்டு பிடிப்பதில் இனிமேல் கஷ்டமேயிராது'' என்று புலிகேசி மெல்லிய குரலில் தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.

பிறகு உரத்த குரலில் ''அப்படியானால் வஜ்ரபாஹு கொண்டு வந்த அந்த ஓலை?....'' என்று கேட்டார்.

''தூதனையே சிருஷ்டி செய்தவனுக்கு ஓலையைச் சிருஷ்டி செய்வதுதானா பெரிய காரியம்?''

''இல்லை, இல்லை! காஞ்சி மகேந்திர பல்லவருக்கு எதுவுமே பெரிய காரியம் இல்லை!.... ஐயா! இப்போதாவது எனக்குச் சொல்லலாமல்லவா? எது நிஜ ஓலை! எது பொய் ஓலை?''



''சத்யாச்ரயா! அந்தப் பிள்ளை முதலில் கொண்டுவந்த நிஜமான ஓலை மட்டும் உங்களிடம் அப்போது வந்திருந்தால் - இன்றைக்கு நீங்களும் நானும் இந்தக் காஞ்சி நகரின் வீதிகளில் பட்டத்து யானையின் மீது அமர்ந்து ஊர்வலம் வந்து கொண்டிருக்க மாட்டோம். ஊர்வலம் வருவதற்கு வீதியே இராது; காஞ்சி நகரமும் இராது. வைஜயந்தி அடைந்த கதியைக் காஞ்சியும் அடைந்திருக்கும். நண்பரே! இப்போது நீங்களும் உண்மையைச் சொல்லுங்கள். இந்த அழகான நகரை, அடியோடு அழித்துவிடும் எண்ணம் அப்போது உங்கள் உள்ளத்தில் இருக்கவில்லையா?'' என்று மகேந்திரர் கேட்டார்.

புலிகேசி தன் மனத்திற்குள், ''அப்போது அவ்வளவாக இல்லை; இப்போதுதான் இந்த நகரை எரித்துப் பொசுக்கிச் சாம்பலாக்கி விட வேண்டுமென்று தோன்றுகிறது'' என்று எண்ணிக் கொண்டார். வெளிப்படையாக, ''பல்லவேந்திரா! முதல் ஓலையில் - நிஜ ஓலையில் - என்ன எழுதியிருந்தது?'' என்று கேட்டார்.

''வேறொன்றுமில்லை, பாகப் பிரிவினைதான் செய்திருந்தது! 'பல்லவ சாம்ராஜ்யத்தையும் காஞ்சி சுந்தரியையும் நீ எடுத்துக் கொள்; நடன கலா ராணி சிவகாமியை மட்டும் எனக்குக் கொடுத்துவிடு' என்று பிக்ஷு உங்களைக் கேட்டிருந்தார்!''

இதைக் கேட்ட வாதாபிச் சக்கரவர்த்தி சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்துவிட்டு, ''காஞ்சி சுந்தரியைக் கைப்பற்றுவது அவ்வளவு சுலபமான காரியமா?'' என்றார்.

''நண்பரே! அந்த ஓலையில் எழுதியிருந்தபடி நீங்கள் நேரே காஞ்சிக்கு வந்திருந்தால் அது சுலபமாகத்தான் இருந்திருக்கும். அப்போது இந்தக் காஞ்சிக் கோட்டை வாசல்களின் கதவுகள் உங்கள் யானைப் படையில் ஒரு யானையின் மோதலுக்குக் கூட ஈடு கொடுத்து நின்றிருக்க முடியாது!'' என்றார் மகேந்திர பல்லவர்.

புலிகேசியின் உள்ளத்தில் பல தீமலைகள் ஏக காலத்தில் நெருப்பைக் கக்க ஆரம்பித்தன. மகேந்திரரை ஏறிட்டு நோக்கி, ''பல்லவேந்திரா! அர்த்த சாஸ்திரத்தை எழுதிய கௌடில்யர் உங்களிடம் பிச்சை வாங்க வேண்டும்!'' என்றார்.

''எங்கள் தென்னாட்டிலும் ஒரு பிரபல இராஜ தந்திரி உண்டு. அவர் பெயர் திருவள்ளுவர். அந்தப் பெரியார் எழுதிய பொருளதிகார நூலை உங்களுக்குப் பரிசளிக்க வேண்டுமென்று எனக்கு விருப்பம். ஆனால், எங்கள் செந்தமிழ் மொழியை இன்னும் நீங்கள் நன்றாய்ப் பயிலவில்லையே?'' என்றார் சத்துருமல்லர்.

பிறகு, ''நண்பரே! போனதெல்லாம் போயிற்று. அதையெல்லாம் பூர்வ ஜன்ம

''ஓர் இளம்
பிள்ளையைச்
சிறைப்படுத்திக்
கொண்டு
வருகிறார்கள்....
அப்போது உங்கள்
முகத்தைப் பார்க்க
வேண்டுமே...?''
என்றார் மகேந்திரர்.



அநுபவமாக நினைத்து மறந்துவிடுங்கள். இந்தப் பத்துத் தினங்களில் நீங்களும் நானும் அத்தியந்த சிநேகிதர்களாகி விட்டோம். உங்களை நான் அறிந்து கொண்டேன். என்னையும் நீங்கள் அறிந்து கொண்டீர்கள். உங்களுடைய படையெடுப்பைத் தடுப்பதற்கு நான் கையாண்ட தந்திரங்களையெல்லாம் என் மனத்திற்குள் வைத்திருப்பது சிநேகிதத் துரோகம் என்றுதான் அவற்றை உங்களுக்குச் சொன்னேன். இனிமேல் நமது நேசத்திற்கு எவ்விதத் தடங்கலும் இல்லை, நம்மிருவருடைய ஆயுளும் உள்ளவரையில் நாம் இனிமேல் சிநேகிதர்கள். என் ஆயுட் காலத்தில் தங்களுக்கு விரோதமாக இனி நான் ஒன்றும் செய்ய மாட்டேன். தாங்களும் அப்படித்தானே?'' என்று மகேந்திர பல்லவர் உண்மையான உள்ள நெகிழ்ச்சியுடன் கேட்டார்.

''சத்ருமல்லா! அதைப்பற்றிக் கேட்க வேண்டுமா?'' என்றார் வாதாபிச் சக்கரவர்த்தி.

நகர்வலம் எல்லாம் முடிந்து பட்டத்து யானை காஞ்சியின் வடக்குக் கோட்டை வாசல் அண்டை வந்து நின்றது. இரு சக்கரவர்த்திகளும் பிரியவேண்டிய சமயம் வந்தது.

யானையின் மீதிருந்தவர்கள் பூமியில் இறங்கினார்கள். ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டார்கள்.

''பல்லவேந்திரா! உங்கள் நகருக்கு விருந்ினனாக வந்ததில் எனக்கு எவ்வளவோ சந்தோஷம். அபூர்வமான காட்சிகளைக் கண்டேன். அபூர்வமான விஷயங்களைக் கேட்டேன். ஆனால், தங்கள் வீரப் புதல்வன் மாமல்லனைப் பார்க்காமல்

அருள்வாக்கு



"என்னுடைய ஆத்மா" என்று நாம் பேச்சிலே எப்போதாவது சொன்னால் அது தப்பு. இதேபோல இன்னொருத்தனுடைய ஆத்மா என்று சொன்னாலும் தப்பு. 'ஆத்மா' என்றால் என்னவென்று தெரியாததால் நாம் பண்ணும் தப்பு. ஸாதாரணமாக ஆத்மாவைப் பற்றி எப்போது சொல்கிறோம்? யாராவது ரொம்பவும் கஷ்டப்பட்டால், "பாவம், அந்த ஆத்மா படாதபாடுபடுகிறது" என்கிறோம். ஓயாமல் சஞ்சலப்பட்டுக் கொண்டே இருப்பவரை, "நிம்மதியில்லாத ஆத்மா" என்கிறோம். "காலமானார்" என்று பேப்பரில் போடும்போது, "அன்னாருடைய ஆத்மா சாந்தி அடையட்டும்" என்று போடுகிறார்கள். இந்த எல்லா இடத்திலுமே "ஆத்மா" என்ற பத ப்ரயோகம் ஸரியில்லை. ஆத்மா பாடும் படாது, நிம்மதி இல்லாமலும் இருக்காது. அது புதிசாக சாந்தி என்று ஒன்றை அடைய வேண்டியதுமில்லை.

அகண்டமானது ஆத்மா. அதன் கண்டமான ஆபாஸமே ஜீவபாவம் அடைந்து தன்னையே "நான்" என்று நினைப்பதுதான் அஹங்காரம்; ego என்பது. இந்த ego வைத்தான் நாம் பெரும்பாலும் ஆத்மா என்று தப்பாகச் சொல்லிவிடுகிறோம். ஸமுத்ரத்திலே ஒரு சொம்பை அமுக்கி, அந்த சொம்புக்குள் இருக்கிற நாலு ஆழாக்கு ஜலத்தை ஸமுத்ரம் என்கிறது போலத்தான், நாம் தனி ஜீவ அஹங்காரத்தை ஆத்மா என்பதும். சொம்பு ஜலம் ஸமுத்ரத்துடையது என்பது போல, இதுவும் ஆத்மாவுடையதுதான்

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

திரும்பிப் போவதிலேதான் கொஞ்சம் வருத்தம்!" என்றார் புலிகேசி.

"ஆம்; மாமல்லனையும் பார்க்கவில்லை. உங்களுக்கு முதலில் ஓலை கொண்டு வந்த வாலிபனையும் நீங்கள் பார்க்கவில்லை; நாகநந்தி பல்லவ ராஜ்யத்துக்குப் பெரியதொரு உபகாரம் செய்தார். சிறந்த வீரத் தளபதி ஒருவனை அளித்தார்!...."

புலிகேசி குறுக்கிட்டு, "ஆமாம்; தளபதி பரஞ்சோதியைப் பாராததிலும் எனக்கு ஏமாற்றந்தான். அவர்களிருவரும் எங்கே என்பதை இன்னும் தாங்கள் சொல்லவில்லையே?" என்றார்.

"பாண்டிய மன்னனை வழி அனுப்ப அவர்கள் போயிருக்கிறார்கள்! இன்றைக்குக் காலையிலேதான் செய்தி வந்தது. பாண்டியனைக் கீழைச் சோழ நாட்டின் எல்லை வரையில் கொண்டு போய்விட்டு விட்டார்களாம்!"

"ஆஹா! நினைத்தேன். ஏதோ பாண்டியனுக்கு நீங்கள் சம்பந்தியாகப் போவதாக ஒரு வதந்தி இருந்ததே!"

"சம்பந்தி உபசாரம் செய்வதற்குத்தான் மாமல்லனும் பரஞ்சோதியும் போனார்கள்!" என்று கூறி மகேந்திர பல்லவர் நகைத்தார்.

"விசித்திர சித்தரே! போய் வருகிறேன். போவதற்கு முன்னால் கடைசியாக ஒரு வார்த்தை கேட்கிறேன். நாகநந்தி பிக்ஷு யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று புலிகேசி கேட்க மகேந்திர பல்லவர், "உத்தேசமாகத் தெரியும்!" என்று கூறி வாதாபிச் சக்கரவர்த்தியின் காதோடு ஏதோ கூறினார்.

"ஆ! உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமேயில்லை. அப்படித் தெரிந்திருக்கும் போது, அவரை நீங்கள் விடுதலை செய்து என்னுடன் அனுப்பப் போவதில்லையா?" என்று புலிகேசி ஆங்காரமான குரலில் கேட்டார்.

"சக்கரவர்த்தி கோரினால் அவ்விதமே செய்யத் தடையில்லை!" என்றார் மகேந்திர பல்லவர்.

"வாதாபி சளுக்க குலத்தார் யாரிடமும் எந்தக் கோரிக்கையும் செய்து கொள்வதில்லை!" என்று புலிகேசி கம்பீரமாய்க் கூறினார்.


"காஞ்சிப் பல்லவ குலத்தினர் யாருக்கும் கோராத வரத்தைக் கொடுப்பதில்லை" என்றார் மகேந்திர வர்மர்.

"பல்லவேந்திரா! போய் வருகிறேன்" என்றார் புலிகேசி.

"சத்யாச்ரயா! ஞாபகம் இருக்கட்டும்" என்றார் மகேந்திரர்.

"ஒரு நாளும் மறக்க மாட்டேன்" என்றார் வாதாபி மன்னர்.

(தொடரும்)



இதுதான் நம்பிக்கை!

கைகொடுத்து காப்பாற்ற தந்தையுண்டு என்று
கலவரமின்றி குளத்தில் தாவும் குறும்புப்பையன்
— இதுதான் நம்பிக்கை!
உலகத்திலேயே அழகான கண்களை உற்றுப்பார்த்தால்
உள்ளே தெரியும் ஒளி — இதுதான் நம்பிக்கை!
நாளை என்பது நிச்சயம்! ஆனால் நாளை நல்லதாய்
விடியுமென்று வாழ்வது — இதுதான் நம்பிக்கை!
நம்பிக்கை என்பது தொன்று தொட்டு வரும்
பாரம்பரியம் — *இதுதான் உபாஸனா!*
உங்கள் கைகளைபிடித்து சாலையை கடக்கும் கண்
பார்வையற்றவரின் ஊன்றுகோல் — இதுதான் நம்பிக்கை!
"நாமத்தை சொன்னால் போதும் நந்தி விலகும்!"
என்று நந்தன் தில்லைக்குப் போனது — இதுதான் நம்பிக்கை!
"நலமாய் வாழ்வோம்" என நம்பி கைபிடித்து
நங்கை ஏழடி நடப்பது — இதுதான் நம்பிக்கை!
இரண்டு பேர்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளும்
இணையற்ற நெருக்கம் — இதுதான் நம்பிக்கை!
நம்பிக்கை என்பது தொன்றுதொட்டு வரும்
பாரம்பரியம்! — இதுதான் டிவிஎஸ்!
கவனமாய் கல் மீது கல் வைத்து கட்டும் மாளிகை!
கணப்பொழுது போதும் தரையோடு சாய்க்க! —
இதுதான் நம்பிக்கை!
சில உறவுகளுக்கு புதிய பொருளை தருவது
— இதுதான் நம்பிக்கை!
நம்பிக்கை! இதுதான் உபாஸனா!
இதுவே தனிச்சிறப்பை இவர்களுக்களிக்கிறது!

உபாஸனா
ஃபைனான்ஸ் லிமிடெட்

610, மவுண்ட் ரோடு, சென்னை 600 006 தொலைபேசி : 860437

நம்பிக்கை என்றால் இவ்வளவே!

Stimulus UFL 98/91

மழை விட்டுப்போச்சு

பாதை கூடத் தெரியாதபடி மழை சுழன்றடித்துக் கொண்டிருந்தது. பளீரென்று ஒளிவீசும் மெர்க்குரி விளக்கின் வெளிச்சத்தில் வலுவான தூறல் வெள்ளிக் கம்பிகளாக விழுந்து கொண்டிருந்தன.

கணேசன் குளிருக்கு இதமாக இருக்கட்டுமே என்று ஒரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான். கண்கள் பஸ் ஸ்டாண்டையே சுற்றிக் கொண்டிருந்தன. அவசர அவசரமாகக் கதவுகள் அடைக்கப்பட்ட கடைகளின் ஓரங்களில் மழைக்குப் பயந்து மனிதர்கள் ஒண்டிக் கொண்டிருந்தார்கள். இருளும் கவியத் தொடங்கியதால் ஜன நடமாட்டம் சுத்தமாய் அற்றுப் போயிருந்தது.

கணேசனுக்கு ஆயாசமாய் இருந்தது. ஏதோ ஒரு இனந் தெரியாத இழப்பை மனசு அனுபவித்துவிட்டதைப் போல அலுப்பும், சலிப்புமாய் உணர்ந்தான். பை நிறையப் பணம் கனத்துக் கொண்டிருந்தாலும் மனசில் உற்சாகம் இல்லை.

மத்தியானம் கூட அவனுக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை. ஒரே புளி ஏப்பமாய் வந்து கொண்டிருந்தது. இப்படி உண்மைக்குப் புறம்பாய் உழைத்துக் கொண்டிருப்பதனால்தான் உடம்புக்கு ஏதோ வந்துவிட்டதாகக் கணேசன் பயந்து போனான். உடனே கடைசிப்பையன் கனகுவின் ஞாபகம் வரவே, சலனத்தை அப்புறப்படுத்தி விட்டு சவாரிக்குத் தயாரானான் கணேசன்!

''கவலைப்படாதே கனகராசு! இன்னிக்கு உனக்கு வெறும் செருப்பில்லே! பூட்ஸே வாங்கித்தர்றேன்! கால்லே மாட்டிக்கிட்டு கலெக்டர் துரையாட்டம் நடப்பியாம்!''

மனசுக்குள் மகனுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு கணேசன் நிமிர்ந்து உட்கார்ந்தான். எப்படியோ ஈரோட்டிலிருந்து தப்பிப்பிழைத்துக் கர்ப்பிணியாய் வந்து நின்ற பஸ்ஸிலிருந்து ஜனங்கள் பிரிக்கப்பட்ட ஆரஞ்சு மூட்டையாய் உதிர்ந்து சிதறிக் கொண்டிருந்தார்கள். சிலர் மழைக்கு மறைவிடம் தேடி ஓட, பலர் ஆட்டோ ஸ்டாண்ட்டை நோக்கி அவசரமாக வந்தார்கள்.

கணேசன் வரிசையில் மூன்றாவதாக இருந்தான். முதலிரண்டு வண்டிகளும் நிமிஷ நேரத்தில் புகையைக் கக்கிவிட்டு புறப்பட ஆயத்தமாய் நின்றன. வந்தவர்களில் சிலர் தயங்கி, பின் வழியில்லை என்று தீர்மானித்துக் கொண்டவர்களாய்ச் சொன்ன தொகைக்குத் தலையாட்டி விட்டு ஆட்டோவிற்குள் உட்கார்ந்தார்கள்.

கணேசன் காத்திருக்கும் போதுதான் தலைக்கு முக்காடு போட்டுக் கொண்டு அந்த முக்கால்கிழம் வண்டிக்குப் பக்கமாய் வந்து நின்றது. கிழவனோடு சேர்ந்து ஒண்டிக் கொண்டு துண்டு போர்த்திய பத்து வயதுப் பையன் ஒருவன் பற்கள் கிட்டிக்க ஆட்டோவை அகன்ற வாயோடு அளந்து கொண்டிருந்தான்.

''என்னா பெரீவரே! வண்டி வேணுமா?''

''டவுன் வண்டி வராதுங்களா.... குஞ்சாண்டியூர் வரைக்கும் போவணும்.'' கிழவன் தயங்கித் தயங்கி மெதுவாகக் கேட்டான்.

கணேசன் உதட்டைப்பிதுக்கினான். ''ம்ஹூம்... எந்த வண்டியும் வராது.... இன்னிக்கு 'பந்த்' தெரியுமில்லே... ஒண்ணு நடந்து போவணும்... இல்லே நம்ம வண்டியிலே வரணும்! என்ன சொல்றே?''

''நடக்க முடியாதுங்க. இந்த மழை இருட்டிலே மேடேறி மேலேபோயி... இந்தப் பச்சப் புள்ளையை எப்படீங்க நடக்க அடிக்கறது..... அதுவுமில்லாம நான் அவசரமா ''உடைஞ்சகரைக்கு''ப் போவணுமுங்க. குஞ்சாண்டியூர் போயிட்டா குறுக்கால நடந்து போயிடலாம்.''

''அப்புறமென்ன... ஏறிக்குந்து! மழை ஈரத்துல நனையாதே!''

கிழவன் யோசித்தான்.... அந்தப் பையன் வேறு தாத்தாவைக் குடைந்து கொண்டிருந்தான்... ''தாத்தா.... இதுலயே போயிடலாம் தாத்தா... ரொம்பப் பசிக்குது தாத்தா....''

கிழவன் எரிச்சலோடு பையனை முறைத்தான்.

''அட சும்மா இர்லே... கடையும் காணோம். ஒரு எழவையும் காணோம். பசி... பசின்னு ஏன் உசிரை எடுக்கறே!''

பையன் தலைகுனிந்து தேம்பத் தொடங்கவும் கணேசனுக்கு எரிச்சலாய்

இருந்தது.

''ஏன்யா புள்ளையக் கோவிச்சுக்கறே! சட்டுப் புட்டுனு முடிவு பண்ணு. இல்லே அப்பிடி மூலையில ஒதுங்கு... வர்ற சவாரியைக் கெடுத்துக்கிட்டு....''

''வந்து.... குஞ்சாண்டியூர் போறதுக்கு எவ்வளவு ஆகுமுங்க?''

கணேசன் மிடறுவிழுங்கினான். காலையிலிருந்து சிரமத்தோடு சொல்லியது, இந்தக் கிழவனிடம் சொல்லும் போதும் தொண்டையில் சிக்கிய மீன் முள்ளாய் நெருடியது.

''என்ன... ஐம்பது ரூபா ஆகும்....''

கிழவன் அதிர்ந்து பின் வாங்கினான்.

''அம்பது ரூபாய்ங்களா?''

''சரி... அஞ்சைக் குறைச்சுக்கோ! மழை ஈரத்துல வசவசன்னு நாயம் பேசாம ஏறிக் குந்துய்யா.''

''இது ரொம்ப அநியாயமுங்க....'' என்ற கிழவன் பையனைச் சேர்த்து இழுத்துக் கொண்டு மெல்ல விலகினான்.


அப்போது பார்த்துத் தலையில் ஸ்பீக்கரும், கொடிகளும் கட்டிய தேர்தல் பிரசார வேன் ஒன்று பஸ்ஸ்டாண்டுக்குள் வந்து நின்றது. திபுதிபுவென்று ஒண்டிக் கொண்டிருந்த கூட்டமும் இன்னும் பலரும் வேனை மொய்த்துக் கொண்டனர். சிறிது நேரத்தில் உற்சாகக் குரல் எழுப்பியபடி எல்லோரும் வேனில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். எங்கோ சிந்தனையாய்

ஜெரா

இருந்த கணேசன் சத்தம் கேட்டு வேனைப் பார்த்தான். கிழவன் நிம்மதியோடு பேரனை அணைத்தபடி வேனுக்குள் உட்கார்ந்திருந்தான். கணேசனுக்கு எங்கிருந்து தான் அப்படி ஒரு ரௌத்ரம் பீறிட்டதோ தெரியாது! ஆட்டோவை விட்டு இறங்கி, வேனை நோக்கி ஓடினான்! வேன் டிரைவரைப் பார்த்து ''இறங்குய்யா கீழே'' என்றான்.

''பிரசார வேன்னா எது வேணாப் பண்ணலாமா! சவாரியை எல்லாம் ஏத்திக்கிட்டுப் போயிட்டா எங்க பொழப்பு எப்படிய்யா நடக்கும்! நாளை மின்னிக்கு இந்தப் பக்கம் வேனை ஓட்டமாட்டே தெரிஞ்சுக்கோ....''

வேன் டிரைவர் கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, உள்ளே இருந்தவர்களைப் பார்த்து எதையோ சொல்லிவிட்டு இறங்கினான். எல்லோரும் சோகம் வழியும் முகத்தோடு வேனை விட்டு இறங்குவதைப் பார்த்தபடி ஆட்டோவில் உட்கார்ந்திருந்தான் கணேசன்! அரக்கத்தனமாக நடந்துகொண்டு விட்டோமோ என்று அவன் மனம் குறுகுறுத்தது. காலையிலிருந்து வேறெப்படி நடந்து கொண்டிருக்கிறாய்? என்று அவனுக்குள் இருந்து



இன்னொருவன் கேலி பேசினான்.

வெளியே மழை வலுக்க ஆரம்பித்தது. அந்தக் கிழவன் திரும்பவும் ஆட்டோவை நெருங்கி ''கொஞ்சம் குறைச்சுக்குங்க சாமி! ரொம்ப அவசரமாப் போவணுங்க!'' என்று குரல்கம்ம வேண்டினான். கணேசன் கறாராகத் தலையாட்டி மறுத்துவிடவும், கிழவன் தயங்கியபடி ஆட்டோவில் ஏறி அமர்ந்தான்!

கணேசன் சகஜ நிலைக்குத் திரும்பியவனாக, ஆட்டோவைக் கிளப்பினான். பின்னால் அந்தப் பையன் கையில் சுருட்டி நீட்டிய இரண்டு ரூபாயோடு ஒண்டி உட்கார்ந்திருந்தான்!

''என்ன பெரியவரே! பையன் கையில் பணத்தை குடுத்துகிட்டு... எங்காவது போட்டுடப்போறான்.''

கிழவன் பெருமூச்சுவிட்டபடி ''பசி, பசின்னு அலையறான் - அதான் ஏதாவது வாங்கிச் சாப்புடுன்னு பணத்தைக் குடுத்துட்டேன். பணம் இருக்கற தெம்புல கொஞ்சம் பசியை மறந்து இருப்பான்'' என்றான். கணேசன் கிழவனின் பேச்சைச் சிலாகித்தபடி, வீசும் மழைத்தூறலில் வேகமாக ஆட்டோவை இயக்கினான்!

கணேசன் மற்ற ஆட்டோ டிரைவர்களைப் போலில்லை! கொஞ்சம் மனிதாபிமானத்தோடும், நேர்மையோடும் தான் நடந்து கொண்டிருந்தான். அதற்குக் கிடைத்த பாராட்டுக்கள் அவனுடைய பசிச்சத்தைத் தீர்க்கவில்லை. ''எல்லோரையும் போல இருக்கறதுலே என்ன தப்பு?'' என்று அவனுடைய மனைவி கூட சதா குத்திக் காட்டிக் கொண்டிருந்தாள். எத்தனையோ அ சந்தர்ப்பங்களில் தன்னைச் சமாதானப் படுத்திக் கொள்ள முடிந்த கணேசனால் தன்னுடைய கடைசிப் பையன் கனகராஜின் ஆசையில் மண்ணைப் போட்ட போது மட்டும் சகித்துக் கொள்ள முடியவில்லை.

பல மாதங்களாக கனகராஜ் கேட்டுக் கேட்டு, செருப்பு வாங்குவதற்காக இவனிடம் வாங்கிவைத்திருந்த பணத்தை அவனுக்குத் தெரியாமல் அவன் பையிலிருந்து எடுத்து அரிசி வாங்குவதற்காகக் கொடுக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்ட பிறகு தான் கணேசன் மாறிவிட முடிவு செய்தான்.

அதற்கு ஏற்றாற்போல யாரோ ஒரு பஸ் டிரைவரைப் பயணி ஒருவர் அடித்து விட்டார் என்பதற்காக வாகன வரத்து தடை செய்யப்பட்டு 'பந்த்' அறிவிக்கப்பட்டதும் கணேசன் உற்சாகமானான்.

நியாயமாய் வண்டிச் சத்தம் வாங்கிக் கொண்டிருந்தவன் வரம்பை மீறி ஏற்றினான். இதோ, பாக்கட் நிரம்பி வழிகிறது! பையனுக்கும் கூட கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்துவிடலாம்! ஆனால்.... ஏதோ ஒன்று இதயத்தின் மூலையில் அவ்வப்போது எழுந்து நின்று பிறாண்டுகிறதே! அதற்குப் பெயர் என்ன?

''இப்படியே நிறுத்திடுங்க... இறங்கிக் குறுக்காலே போயிடறேன்.''

கணேசன் வண்டியை ஓரம்கட்டி, வைதீஸ்வரா நகரை ஒட்டிய காம்பவுண்ட் சுவர்ப் பக்கம் நிறுத்தினான். சற்று தூரத்தில் பெட்ரோமாக்ஸ் லைட் வெளிச்சத்தில் ஒரு டீக்கடை அந்த மழையிலும் கூட சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. பையன் கீழே இறங்கிய சுருக்கில் டீக்கடையைச் சுட்டிக்காட்டி ''பன்னு வாங்கிக்கிட்டா தாத்தா?'' என்றான்.

❒ அமெரிக்க ஜனாதிபதிகளிலேயே மிக அதிகமாக உலக நாடுகளில் பயணம் செய்தவர் என்னும் பெருமை 'ஜார்ஜ் புஷ்'ஷுக்குக் கிடைத்திருக்கிறது. இவர் இதுவரையில் 17 முறை அயல்நாட்டுப் பயணங்களை மேற்கொண்டு 32 நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கிறார். இதல்லாமல் உள்நாட்டில் அவர் 5,49,976 கி. மீ. பயணம் செய்துள்ளார்!

தகவல் : தக்கோலம் அ. முஸ்தபா



தாத்தா தன் காடா பனியனின் பக்கப் பாக்கெட், உள் பாக்கெட், இங்கே, அங்கே என்று கசங்கிய ரூபாய்த் தாள்களைத் தேடிப்பிடித்துக் கணேசனின் கைகளில் போட்டார். பையன் கடையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான். கணேசன் கசங்கிய நோட்டுக்களைப் பிரித்து எண்ணி விட்டு, கிழவனைப் பார்த்தான். கிழவன் பயத்தோடு கணேசனைப் பார்த்து விழித்தான்.

''எம்புட்டு தம்பி இருக்குது?''

''ரெண்டு ரூபா குறையுது பெரியவரே.''

கிழவன் திடீரென ''ஏலேய்'' என்று பையனைப் பார்த்துக் கூவினான். பையன் நிற்பதாகத் தெரியவில்லை. கிழவன் கணேசன் சொல்லச் சொல்ல டீக்கடையை நோக்கி ஓடினான். வேறுவழியின்றி கணேசனும் கிழவனைத் தொடர வேண்டியதாகி விட்டது.

பன்னை கையில் வாங்கிவிட்டு, பணத்தை நீட்டும் முன்பு டக்கென்று பையனைப் பிடித்து விட்ட கிழவன், பன்னை பிடுங்கி டீக்கடைக்காரனிடம் கொடுத்து விட்டு, அந்தப் பையனின் கையில் இருந்த இரண்டு ரூபாயைக் கணேசனிடம் நீட்டினான்....

''எங்கிட்டே வேறே காசு இல்லே தம்பி....''

கணேசனின் கண்ணில் நீர் முட்டியது. பணத்தை வாங்கவும் மனமின்றிக் கிழவனை வெறித்தான்...

''பசியோட இருக்கற புள்ளை கையில இருந்து இப்பிடிப் புடுங்கலாமா பெரியவரே?'' என்று தழுதழுத்த கணேசன், பையனின் கையில் மீண்டும் பன்னை எடுத்துக் கொடுத்தான்.... கிழவன் திடீரெனத் தலை தலையாய் அடித்துக் கொண்டு ''இவன் பசிக்குத்தான் அப்பனையே முழுங்கிப்புட்டானே! அந்த எழவுக்குத்தானே போயிக்கிட்டு இருக்கோம். வெறும் வயத்தோட போனாத் தப்பு இல்லே தம்பி! அதுக்காக நீ நஷ்டப்பட வேணாம்'' என்று கதறினான்.

கணேசன் மட்டுமல்ல, டீக்கடையிலிருந்த ஓரிருவரும் கூட சிலையாகிப் போனார்கள். கணேசன் துளிர்விட்ட கண்ணீரை மழைத்துளியைத் துடைப்பவன் போல வழித்தெறிந்து விட்டு, கிழவனையும், பையனையும் அணைத்தபடி ஆட்டோவை சமீபித்தான்! கிழவனின் கைகளை விரித்து அவன் தந்த ரூபாய் நோட்டுக்களை வைத்தான். இருவரையும் வலுக்கட்டாயமாய் ஆட்டோவுக்குள் அமர்த்தினான். ஆட்டோவை ஒடித்து ''உடைஞ்ச கரை''க்குப் போகும் பாதையில் திருப்பினான். அவன் மீண்டும் பழைய கணேசனாக ஆட்டோவை ஓட்டிக் கொண்டிருக்கும் போது, மழை சுத்தமாக நின்றுபோய், வானம் வெளுத்திருந்தது.



''எது, எதுக்குத்தான் ஆர்ப்பாட்டம்ங்கற விவஸ்தை இல்லாமல் போயிடுச்சி!''

''என்ன விஷயம்?''

''நரகாசுரன் சாவில் மர்மம் இருக்கு! நீதி விசாரணை தேவைன்னு எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் செய்யறாங்க!''

- எஸ். சுந்தரராஜ்



'' 'சிக்கனம்'கிற தலைப்பிலே கதை எழுதியிருக்கீங்க சரி, ஆனா உங்களுக்குப் பத்துப் பைசா மிச்சம் ஆகுதுங்கிறதுக்காக அந்தக் கதையை ஆறு கார்டுல எழுதி அனுப்பணுமா?''

- சீர்காழி. வி. ரேவதி



''என் மனைவி அடிக்கடி என் கூட சண்டை போட்டுக்கிட்டு அவங்கம்மா வீட்டுக்குப் போயிடறா!''

''ஹூம்... குடுத்து வெச்சவர் சார் நீங்க. என் மனைவி என் கூட சண்டை போட்டு அடிக்கடி என்னை என் அம்மா வீட்டுக்கு அனுப்பிடறா!''

- வேதபுரி. எஸ். ரமேஷ்

இதுவரை...

வள்ளிக்குப்பம் என்கிற கிராமத்தில் 'விஸாட்'டை நிறுவுவதற்காகப் பம்பாயிலிருந்து வரு கிறார்கள் மனோஜும் ஷண்பேகரும். மனோஜ் திரு மணமான கையோடு மனைவி ப்ரமிளாவையும் அழைத்து வருகிறான்.

'விஸாட்'டை நிறுவ ஏற்பாடு செய்த இடத்தில் ஒரு மரம். அதில் முனீஸ்வரன் குடியிருப்பதாகக் கிராம மக்கள் நம்புவதால், அதை வெட்டி 'விஸாட்' நிறுவக் கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். இவர்கள் நடேச பண்டிதர் என்ற ஊர்ப் பெரியவரின் துணையை நாட, ''அந்த மரத்தை வெட்ட வேண்டுமானால் ஒரு பெண் குழந்தையை நரபலி கொடுக்க வேண்டும்''

கம்ப்யூட்டர் கிராமம்

என்கிறார்.

அதிர்ச்சியுற்ற மனோஜ், மற்ற வேலைகளை முடித்துக் கொண்டு, பிறகு மரம் வெட்டுகிற விஷயத் தைக் கவனிக்கலாம் என்று ஷண்பேகரோடு மற்ற வேலைகளைக் கவனிக்கிறான்.

இதற்கிடையில், நடேச பண்டிதர் வீட்டிலிருந்த செல்வி என்ற பெண் திடீரென்று ஒரு நாள் அந்த 'முனீஸ்வரன் மரத்'தில் தூக்கில் தொங்க, அது எப்படி நடந்தது என்று ஷண்பேகரை மனோஜ் துருவித் துருவிக் கேட்கிறான். தனக்கும் அதற்கும் சம்பந்த மில்லை என்று சொன்ன ஷண்பேகர், திடீரென்று ''என்னை நீதான் காப்பாற்ற வேண்டும்'' என்று மனோஜின் காலைப் பிடித்துக் கொள்கிறான்.

ஷண்பேகரை சாலையிலிருந்து எழுப்பிய மனோஜ், ''என்ன இது ஷண்! பயப்படாதே. உன்னை யாரும் எதும் செய்ய முடியாது. என் மனசுக்குள் நிச்சயம் ஏற்படவே அந்தக் கேள்விகள் எல்லாம் கேட்டேன்'' என்றான்.

''இருந்தும் என் மேல் சந்தேகம் வரு கிறாற் போல நடந்து கொண்டு இருக் கிறேன் போலத் தெரிகிறது.''

''ஆம். எதையும் மறைக்காதே.''

''முதலில் பம்பாய்க்கு போன் பண்ணி, லீகல் டிப்பார்ட்மெண்ட்டிலிருந்து யாரை யாவது வரவழைக்க வேண்டும்.''

சுஜாதா


14

''சரி.''

''மனோஜ், இப்படியே பம்பாய்க்குப் போய் விடவா?''

''சந்தேகம் வலுக்கும். போலீஸ் அங் கேயும் உன்னைத் துரத்தும். பதற்றப் படாதே. உன்னை யாரும் கைது செய்ய வில்லை.''

''ஆண்டிஸிப்பேட்டரி பெய்ல் வாங்கி



விடலாமா?''

''உளறாதே'' என்றான்.

சிகரெட் தேவையாக இருந்தது ஷண் பேகருக்கு. கீழே போட்டதை எடுத்து, மறுபடி பற்றவைத்துக் கொண்டான். 'பப்' என்று இழுத்தான். ''நான் அந்தப் பெண்கள் அனைவருக்கும் கம்ப்யூட்டர் கற்றுக் கொடுக்க விரும்பினேன்.''

''இதை யாரிடமும் சொல்லாதே. நம்ப மாட்டார்கள்.''


''நிசமாகவே அதுதான் காரணம். கருப் பாயி, செல்வி எல்லாருக்கும் அதேதான்.''

திரும்பிய போது டிஎஸ்பியின் வீட்டில் பகல் போல மின் பல்புகள் எரிந்து கொண்டிருக்க, போலீஸ் இன்ஸ்பெக்டரும் டிஎஸ்பியும் டீ சாப்பிட்டுக் கொண்டிருந் தார்கள். ஜீப்பில் வேறு வழியில் அவர்கள் வந்திருக்க வேண்டும்.

''பாடிய என்ன செஞ்சீங்க?''

''ஆரம்பாக்கம் தாலுக்காஸ்பத்திரில வெச்சிருக்கு. டவுனுக்கு போஸ்ட் மார்ட் டத்துக்கு அனுப்பி ஆகணும்.''

''நடேச பண்டிதனே செய்திருப்பாங்க. அந்நாளு விவரம், போக்குவரத்து எதும்



தெரியவே இல்லை. அந்தப் பொண்ணு யாரு? என்ன உறவு?''

''வெசாரிச்சுருங்க.''

''இதோ, இந்த மராட்டிக்காரனும் செய்திருக்கலாம்.''

''வாங்க மனோஜ்! மிஸ்டர் ஷண்பேகர் டோண்ட் லீவ் வில்லேஜ் விதவுட் பர்மிஷன், அண்டர்ஸ்டாண்ட்?''

''ஒய்?''

''ஒய்? பிகாஸ் யு ஆர் ஸஸ்பெக்ட்.''

மனோஜை அவன் பார்த்து ''ஆர் தே அரஸ்டிங் மி.''

''செய்யலாம்.''

''நான்சென்ஸ்.''

''எல்லாம் விசாரிப்போம். ரொம்ப ஆட்டம் கூடாதுன்னு சொல்லுங்க.''

ப்ரமிளா சோபாவில் படுத்துக் கொண்டு, ''மனோஜ் எனக்கு எப்ப டிக்கெட் வாங்கப் போற?'' என்றாள்.

''நாளைக்கு.''

''இப்ப திறந்திருக்காதா?''

''ரொம்ப லேட்டுமா. நடுராத்திரிக்கு மேல ஆய்டுத்து பாத்தியா, பேசாம படுத்துக்கோ.''

''ஜுரம், அவளுக்கு'' என்றாள் டிஸியின் மனைவி.

''இங்க வந்ததே தப்பு. பேசாம வேற இடத்தில மெஷின் வெக்கலாம் நீங்க.''

''அது எப்படிங்க?'' என்றான் மனோஜ்.

''அது எப்படின்னா, பாருங்க சீரழிவை! பலி வாங்கிருச்சில்லை தெய்வம்!''

''தெய்வம் எல்லாம் அப்படி பலி வாங்காதுங்க. இது சனங்க செய்த வேலை.''

''சனங்களைத் தெய்வம் செய்ய வெச்சிருக்குது.''

''அதெப்படிங்க?''

''சும்மா குதர்க்கம் பேசாதீங்க. காலைல எஸ். பி. வராரு. பதில் சொல்லிக்கங்க.''

ஷண்பேகர், ''ரத்தம் தொடையில் இருந்ததா புடைவையில் இருந்ததா?'' என்றான்.

'க்' என்று அடித் தொண்டையில் ப்ரமிளா வாந்தி வருவது போல சப்தம் பண்ணினாள்.

''எங்க இருந்தா என்ன?''

''இல்லை, தொடையில கீற்றா மாதிரி ரத்தம் இருந்தா அது தற்கொலை. தூக்கில தொங்கறவங்க கடைசி நிமிஷத்தில தொடையைப் பிராண்டிக் கொள்வார்கள்.''

''அது தொங்க வைக்கப்பட்ட கேஸ் மிஸ்டர் ஷண்பேகர்.''

''யார்?''

''உங்களில் ஒருத்தர்.''

மனோஜ் அப்போதுதான் நடேச பண்டிதர் வருவதைப் பார்த்தான். வாயில் துண்டு அடைத்து அழுது கொண்டிருந்தார்.

''பிரியமா வளர்த்தீங்க பண்டிதரே! யாரு கொன்னிருப்பாங்கன்னு சொல்றீங்க?''

''கிராமத்தில தெய்வ கோபம் கொன்னிருக்குன்னு பேசிக்கிறாங்கய்யா.''

''உங்க சந்தேகம் யார் மேல?''

''மராட்டிக்காரன் மேலதாங்க ரொம்ப. அவன்தான் சினிமாவில அவளை பாதில கூட்டிக்கிட்டுப் போனான்.''

''பின்னால போனீங்களா?''

''போனேன். இரண்டு பேரும் இருட்ல மறைஞ்சாங்க.''

''நானும் பார்த்தேன்'' என்றார் டிஸி.

ஷண்பேகர் புரியாமல், ''என்ன பேசுகிறார்கள்? மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டியது அவசியம்'' என்றான்.

''ஷண் யு ஆர் இன் ட்ரபிள். நீ அந்தப் பெண்ணை அழைத்துச் சென்றதாகப் பல பேர் சொல்கிறார்கள்.''

''சத்தியமாக இல்லை.''

''உங்கள் இரண்டு பேரையும் சினிமா கொட்டகைக்கு வெளியே பார்த்ததாகச் சாட்சி இருக்கிறது.''

''யார் சொன்னது?''

''ப்ரொஜெக்டர் ஆப்பரேட்டர் சொன்



ளது'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''ஷண்பேகருக்கு அந்தப் பெண்ணை கொல்ல எந்தவித காரணமும் இல்லை என்பதை நீங்கள் அறிய வேண்டும்'' என்றான் மனோஜ்.

''காரணம் அப்புறம் யோசிக்கலாம். கொஞ்சம் தோண்டினால் காரணம் கிடைக்கும். எதற்கும் எஸ்பி நாளை வரும் போது இவரைத்தான் முதலில் விசாரிக்கப் போகிறோம். இவருடன் பெண் அந்த சைட்டுக்கு போனதைப் பார்த்த சாட்சி இருக்கிறது.''

ஷண்பேகர் கலவரத்துடன் மனோஜின் சட்டையைப் பிடித்து இழுத்தான். ''பெரிய சதி. இதற்கு என்னை நாளை நிச்சயம் கைது பண்ணுவார்கள்.''

''போலீஸ் அத்தனை அவசரமாகச் செயல்படாது.''

''என்றுதான் நம்பிக்கை!''

''ஷண்பேகர் இதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது...''

''எதற்கு?''

''தப்பிக்க.''

''எப்படி?''

''அவர்கள் கொன்றது யார் என்று கண்டுபிடிப்பதற்குள் நாமே கண்டுபிடித்து விடுவது.''

''எப்படி?''

''யோசி நண்பனே! கம்ப்யூட்டர் ப்ரொக்ராம் எழுதுகிறாய்... அத்தனை புத்தி சாலியாக இருக்கிறாய். நாமே விசாரிப்பது ஒவ்வொருத்தராக. முதலில் இந்தப் பெண் யார்? எங்கிருந்து வந்தாள்? பண்டிதருக்கு என்ன உறவு என்பதைக் கண்டறிய வேண்டும். ஃபாக்ட்ஸ் ஃபர்ஸ்ட்.''

மறுதினம் காலை தாலுக்கா ஆஸ்பத்திரியை அடுத்த ஓட்டுக் கட்டடத்தின் நடுவே இருந்த சிமெண்டு திண்ணை மேல் கிடத்தப்பட்டிருந்த செல்வியின் சவத்தைப் போய்ப் பார்த்தார்கள்.

சன்னல் வழியாகப் பல முகங்கள் பார்த்திருக்க, செல்வி தூங்குவது போலத்தான் கிடந்தாள். உடல்தான் நீலம்பாரித்திருந்தது. ''தொடையில் ரத்தக் காயங்கள் இல்லை'' என்றான் ஷண்பேகர்.

போஸ்ட்மார்ட்டம் பண்ணி வெளியே வந்த டாக்டரைப் பார்த்து ஷண்பேகர், ''ஹலோ நான்தான் ஷண்பேகர்'' என்றான்.

''ஹலோ.''

''போஸ்ட்மார்ட்டம் முடிந்ததா?''

''முடிந்தது.''

''தற்கொலையா?''

''அப்படித்தான் தோன்றுகிறது.''

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

டாக்டர் நிமிர்ந்து பார்த்து ''ஆர் யு எ போலீஸ் ஆபீஸர்?'' என்றார்.

''இவர்தான். ஆம்.'' என்றான் ஷண்பேகர் மனோஜின் கையை உதறி. ''விகேச்சர் மார்க் கிளியராக இருக்கிறது.



சாப்பிடுபவர் : ''ஹூம்... இவ்வளவு மோசமான டிபனா இருக்கும்னு முதல்லேயே தெரிஞ்சிருந்தா , சாப்பிட்டுட்டு மாவாட்ட நான் வேற ஹோட்டலுக்குப் போயிருப்பேன்...!''

- கரடிகுளம் ஜெயபாரதிப்ரியா

கயிறு அடையாளமும் பொருந்துகிறது.''

''டாக்டர் அது போதுமா? தற்கொலை என்று சொல்வதற்கு வாயில் எச்சில் வழிந்திருந்ததைக் கவனித்தீர்களா? எச்சிமொஸிஸ் பார்த்தீர்களா? கோராடிட் அர்ட்டரி பார்த்தீர்களா?''

''நீங்கள் டாக்டரா?''

''இல்லை, கம்ப்யூட்டர் சைன்டிஸ்ட். பொழுதுபோக்குக்கு இதெல்லாம் படிப்பேன். மோடி!''

''நிசமாகவே இது தற்கொலை இல்லை என்றும் சொல்லலாம். உடலில் பல இடங்களில் போராட்டக் காயங்கள் இருக்கின்றன.''

''ரேப்?''

''அதும் இருக்கலாம். வஜைனல் ஸ்வாபும் எடுக்கவிருக்கிறேன்...''

''எடுக்கலாமே.''

இதற்குள் குரல் கேட்கத் திரும்பினான். இன்ஸ்பெக்டர் பெரிய அதிகாரியுடன் வந்தார்.

''ஐம் செல்வகுமார் எஸ்.பி.'' என்றார்.

''ஐம் ஷண்பேகர்.''

''இவர்தாங்க.''

''மிஸ்டர் ஷண்பேகர், உங்களைச் சில கேள்விகள் கேட்க வேண்டும். என்னுடன் வருகிறீர்கள்.''

மனோஜ், ''நானும் வரலாமா?'' என்றான்.

''தாராளமாக.''

''ஆர் யு அரஸ்டிங் மி?''

''அரஸ்டைப் பற்றி யாரும் பேசவே இல்லையே'' என்றார். சிரித்தார்.

''அரஸ்ட் பண்ணுவதாயிருந்தால் நான் லாயரை கன்ஸல்ட் பண்ண வேண்டும்.''

''ஐ ஜஸ்ட் வாண்ட் டு ஆஸ்க் கொஸ்சன்ஸ் மிஸ்டர் ஷண்பேகர்!''

''ஆஸ்க்.''

''முதல் கேள்வி உங்கள் சட்டை பட்டன் என்னாச்சு?''

கேள்வியின் எதிர்பாராத தன்மையில் அதிர்ச்சி அடைந்து, ஷண்பேகர் தன் சட்டையைப் பார்த்துக் கொண்டான். இரண்டு பொத்தான்கள் இல்லை. தொலைந்திருக்க வேண்டும்.

''காணோம்'' என்றான்.

''என்னிடம் இருக்கிறது. இதுதானா, பாருங்கள்.''

(தொடரும்)



சொட்டு நீலத்தைப் பாட்டில் பாட்டிலாகவும், சோப் புத்தூளை டப்பா டப்பாவாகவும் தண்ணீரில் கரைத்து விட்டது போல் அப்படியொரு வெண்மையான நுரைப் பிரவாகம். சுமார் நூறடி உயரத்திலிருந்து விழும் நீரைப் பார்க்கும் போது பாரதிராஜாவின் வெள்ளையுடை தேவதைகளைப் பார்ப்பது போல் கிளுகிளுப்பும் சிலிர்ப்பும் ஏற்படுகிறது! 'என்ன சத்தம் இந்த நேரம்?' - புன்னகை மன்னன் பாட்டு நினைவிருக்கிறதா? அந்த நீர்வீழ்ச்சிதான் அதிரம்பிள்ளி நீர்வீழ்ச்சி

கேரள மாநிலம் திருச்சூரிலிருந்து முப்பது கி.மீ. தூரத்திலுள்ளது சாலக்குடி. அங்கிருந்து மறுபடியும் முப்பது கி.மீ. மலைப் பயணத்தில் அமைந்துள்ளது இந்த நீர்வீழ்ச்சி. நீர்வீழ்ச்சிக்குப் போகும் ரோடுகள் வழக்கமாக நீர்வீழ்ச்சிகளின் அடிவாரத்திற்கருகே போகும். ஆனால் அதிரம்பிள்ளி நீர்வீழ்ச்சிக்குப் போகும் ரோடு நீர்வீழ்ச்சியின் தலைக்கருகே நம்மைக் கொண்டு விடுகிறது. அங்கிருந்து அடிவாரத்திற்குப் போக செங்குத்தான ஒற்றையடிப் பாதைகளே உள்ளன.

ரோட்டிலிருந்து ஒரு யானைப் பாதையில் சிறிது தூரம் மேலே ஏறினால் நம் கண் முன் விரிவது ரம்மியமான இயற்கை எழில் கொஞ்சும் காட்சி. பரந்த பச்சை வயல்வெளியைப் போல், புல் வெளியைப் போல், பரந்த சமவெளி மலைப் பாறைப் பிரதேசம் பிரமிப்பூட்டி திக்குமுக்காட வைக்கிறது. இந்தப் பாறைகளில் ஜாக்கிரதையாகக் கால் வைத்து நடக்கையில் ஏதோ எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி நடப்பது போல் ஒரு கம்பீரம் ஏற்படுகிறது! இந்தப் பாறைகளைப் பல காதலர்கள் தங்கள் நினைவுச் சின்னங்களாகப் பயன்படுத்துகிறார்கள். பல காதல் ஜோடிகளின் பெயர்கள், பல மொழிகளில் பெயிண்டாலோ, சுண்ணாம்பாலோ, அல்லது செதுக்கியோ எழுதப் பட்டுள்ளன.

சமவெளிப் பாறைப் பிரதேசம் தடாலென்று நீர்வீழ்ச்சியின் தலையில் முடிந்து போகிறது. இந்த இடத்தில் நீரின் சீற்றம், அரசியல்வாதி எதிர்க்கட்சிக்காரனைச் சாடும் சீற்றத்தைத் தோற்கடிக்கிறது! இயற்கையின் அசுர சீற்றத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. தண்ணீர் சீறிப் பாய்ந்து ஒரு பிரமாண்டமான பள்ளத்தாக்கில் விழுகிறது. இந்தக் காட்சி இயற்கை அளித்த வரம். சொட்டு நீலம், சோப்புத் தூள் என்பதற்கு

மனசுக்குள் சிலுசிலுக்கும் 'புன்னகை மன்னன்' அருவி!

மேல் கற்பனைக்கு எட்டாத அழகு! ஓராயிரம் ஓங்கார ஓசையுடன், அடிவாரத்திலுள்ள பாறைகள் மேல் நச்சென்று விழுந்து மோதித் தெறிக்கிறது தண்ணீர். நம் உள்ளங்களைக் கொள்ளைக் கொண்டு போகும் இந்த அழகை யாரும் கொள்ளையடித்துக் கொண்டு போய் விடாதபடி பாதுகாப்பு அரண் போல் ஒரு பக்கம் மேற்குத் தொடர்ச்சி மலையும் மற்றொரு பக்கம் பரந்த பள்ளத்தாக்கில் மலையையும் விஞ்சத் துடிக்கும் உயரத்துக்கு ரப்பர், தேக்கு, மருது, இருள், ஈட்டி மரங்களும் அடர்ந்த காடு. பாறைகளின் விளிம்புகளில் நின்று அந்தப் பள்ளத்தாக்கைப் பார்க்க, சற்று அதிகப்படியான நெஞ்சுரம் தேவை. கொஞ்சம் பயந்த சுபாவம் உள்ளவர்களுக்குத் தலை இறுகிறுத்துப் போகும்.

குற்றாலம் போல் இந்த நீர்வீழ்ச்சியில் குளிப்பது சாத்தியமில்லை. ஆனால் அந்த சமவெளிப் பாறைகளில் பரந்து விரிந்து ஓடி வரும் நதியில் குளிக்கலாம். சுட்டெரிக்கும் பகல் நேரமானாலும் ஓடும் நீர் என்பதால் எப்போதும் ஜில். ஓரடி, இரண்டடி உயரப் பாறைகளிலிருந்து விழும் நீரில் குளிப்பதே ஒரு சுகானுபவம்.

இந்த நீர்வீழ்ச்சியைக் காணப் பலரும் வந்தாலும், கேரளர்கள்தான் அதிகம் வருகிறார்கள். அவர்களிலும் ஆண்களைவிடப் பெண்களே அதிகம். அவர்களிலும் குளிப்பதற்கு அதிக ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை - நீர்வீழ்ச்சியில் குளிக்க முடியாமற் போகும் ஏமாற்றத்தின் காரணமாகவா? நாம் சிலரை அணுகி 'ஏன் குளிக்கலை?' என்று கேட்டதற்கு, அவர்கள் 'நீ தண்ணியில்லாத காட்டுலேருந்து வந்திருக்கே. தண்ணியைக் கண்டதும் எருமைமாடு கணக்கா உருண்டு புரளுறே. எங்க மாநிலத்துலே இதுபோல நாற்பத்தியோரு ஆறுகளும் அதனோட கிளைகளும் ஓடுது. எங்களுக்கு நித்தம் இந்த சுகம்தான்!' என்றார்கள்.

மேலேயிருந்து நீர்வீழ்ச்சியின் அடிவாரத்திற்குச் செல்லும் ஒற்றையடிப் பாதைகள், செங்குத்தாக இறங்குகின்றன; மழை நீரினால் வழுக்குகின்றன. சறுக்கிக் குப்புற விழாமல் தப்பிப்பதற்கு சற்றேனும் மலையேறும் திறமையும், மலைகள் பற்றிய ஞானமும் பெற்றிருக்க வேண்டும் - மேலே ஏறும்போது ஏற்படப் போகும் மூச்சிரைப்பையும் கால் வலியையும் ஏறும்போது பார்த்துக் கொள்வோம்.

அடிவாரத்தையடைந்து அங்குள்ள பாறைகள் ஒன்றில் ஏறி நின்று அண்ணாந்து, நாட்டுப்புறத்தான் விமானத்தைப் பார்ப்பது போல் நீர்வீழ்ச்சியைப் பார்த்தால் அற்புதமய்யா அற்புதம். பனித்துகள்



களாகத் தண்ணீர் பிரவாகமெடுத்து விழுகிறது. பாறைகளில் விழும் தண்ணீர் சாரல்களாகத் தெறித்து, அடர்ந்த வெண் புகையாக எழும்புகிறது. நீர்வீழ்ச்சியின் அருகிலுள்ள பாறைகள் ஒன்றில் உடைகளோடு படுத்துக் கொண்டு இந்தச் சாரல் குளியலை அனுபவிப்பது மற்றொரு சுகம்.

குற்றாலம் ஐந்தருவி போல் இங்கே மூன்றருவியாக விழுகிறது தண்ணீர். ஆனால் ஆகஸ்ட் மாதத்தில் உச்சிப் பாறைகளை முழுவதுமாக மூடி ஒரே பேரருவியாகப் பிரவாகமெடுத்துக் கொட்டுமாம். அதுவே இங்கே சிறந்த சீஸன். ஆனால் எப்போதுமே உல்லாசப் பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள் - குறிப்பாக சனி, ஞாயிறுகளில்.

இங்கு கடை வைத்திருப்பவர்களிடம் விசாரித்ததில் இந்த நீர்வீழ்ச்சி பத்து வருடங்களுக்குள்ளாகத்தான் பிரபலமானது என்கிறார்கள். இவர்களில் ஓரிரு இளைஞர்கள் தமிழ் பேசியதைக் கேட்டு 'எப்படி?' என்று விசாரித்தோம். 'தமிழ் சினிமா படப்பிடிப்பு இங்கே அடிக்கடி நடப்பதால் அந்த யூனிட் ஆட்களிடம் பேசிக் கற்றுக் கொண்டோம்' என்றார்கள். தமிழ் சினிமா உருப்படியாக ஏதும் சாதித்ததில்லையென்று யார் சொன்னது!

- வின்செண்ட், செல்வக்குமார்

படங்கள் :

எஸ். கோபாலகிருஷ்ணன்

பிணைக் கைதி அவலத்தைத் தடுக்கவே முடியாதா?

பயங்கரவாதிகள் மிகச் சுலபமாகப் பிணைக் கைதிகளைக் கடத்திக் கொண்டு போகிறார்கள். அரசால் அதைத் தடுத்து நிறுத்தவே முடிவதில்லை. இதைத் தடுப்பதற்கு அவசரமாக நாம் என்ன செய்ய வேண்டும்? தமிழகத்தின் முன்னாள் காவல் துறைத் தலைவரான வி. ஆர். லட்சுமி நாராயணன் கூறுகிறார்...

"பயங்கரவாதிகள் பிணைக்கைதிகளாக ஆட்களைக் கடத்திக் கொண்டு போவது என்பது இந்தியாவில் மட்டுமின்றி, உலகெங்கும் நடப்பதுதான். காவலிலிருக்கும் தங்களைச் சேர்ந்தவர்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை தவிர, பணம் பறிப்பதற்காக நடத்தப்படும் கடத்தல்களும் உண்டு. இத்தனை சுலபமாக இந்த 'ஆள் கடத்தல்' நடப்பதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தோமானால், நம் போலீஸிடம் 'புரொஃபஷனலிஸம்' என்பது அற்றுப் போய் விட்டதுதான் என்பது புரியும். நம் காவல் துறையினரிடம் தேவையான அளவுக்குத்



திறமையும், சுறுசுறுப்பும் இல்லை என்பது உண்மை. இது மத்திய அரசுக்கும் சரி, மாநில அரசுக்கும் சரி பொருந்தும்.


"வி. ஐ. பி. செக்யூரிட்டி என்ற பெயரில் தனிநபர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டியதுதான். ஆனால் அதில் அதிக எண்ணிக்கையில் போலீஸாரை ஈடுபடுத்துவதும், அது மட்டும்தான் போலீஸாரின் கடமை என்கிற ரீதியில் செயல்படுவதும் தவறு. இதனால் நாட்டின் ஒட்டுமொத்தமான சட்டம் - ஒழுங்கு நிலைமை மோசமடையவே செய்யும். ஸ்பெஷல் பிராஞ்ச் போன்ற சிறப்புப் பிரிவுகள் இன்னும் பலப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் நாட்டு நடப்புகளைக் கூர்ந்து கவனித்து, என்ன நடக்கக்கூடும் என்று முன்கூட்டியே அனுமானித்துத் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கத் தவறக் கூடாது. பொதுவான சட்டம் - ஒழுங்கு பராமரிப்பில், அதிகக் கவனம் செலுத்துவதன் மூலமும், இன்டலிஜன்ஸ் பிரிவை சுறுசுறுப்பாக்குவதன் மூலமும், வி.ஐ.பி. செக்யூரிட்டியில் ஈடுபடுத்தப்படும் போலீஸார் எண்ணிக்கையைக் குறைக்கலாம். இதன் மூலம் மிச்சப்படும் போலீஸாரை இன்னும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

"ஆட்சியில் இருப்பவர்கள், இன்டலிஜென்ஸ், ஸ்பெஷல் பிராஞ்ச்களை, தம் கட்சிக்காரர்கள் மற்றும் எதிர்க் கட்சிக்காரர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், டெலிபோன்களை ஒட்டுக் கேட்கவும் மற்ற ஒற்று வேலைகளுக்கும் பயன்படுத்துவதை நிறுத்தினாலே போதும்; சட்டம் - ஒழுங்கு மேம்படும்.


"தவிர, மிகவும் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து, கடுமையான பயிற்சிகளை அளித்து, எந்த நேரத்திலும், எந்தப் பிரச்னையையும் சமாளிக்கும் விதமாய்ப் போலீஸ் அதிகாரிகளை உருவாக்குவது இன்றைய உடனடித் தேவை."

சந்திப்பு : எஸ். சந்திரமௌலி


நீங்கள் எண்ணும்
இளமைத் தோற்றத்தைப்
பெற...
கோத்ரேஜ் பவுடர் ஹேர் டைய் கொண்டு இப்பொழுது நீங்கள் எண்ணும் இளமைத் தோற்றத்தைப் பெறலாம். அதன் மேம்படுத்தப்பட்ட ஃபார்முலா உங்கள் கேசத்திற்கு இயற்கையான தோற்றத்தை அளித்து நீடிக்கச் செய்கிறது. மேலும் இதை உபயோகிப்பது எளிது.
கோத்ரேஜ் பவுடர் ஹேர் டைய்
இப்பொழுது உயர்தரமான தொழில்நுட்பத்துடன்
NEW IMPROVED FORMULA
PERMANENT NATURAL BLACK
EASY TO APPLY
PERMANENT NATURAL BLACK
Godrej
Self Spreading
'SHAMPOO BASED'
POWDER HAIR DYE
Concentrate
இப்பொழுது
கோத்ரேஜ் வழங்கும் உன்னதமான பவுடர் ஹேர் டைய்



நாம்
அன்றாடமும்
கேட்டுப்
பக்திப்
பரவசமாகிற
ஸ்ரீவேங்கடேச
சுப்ரபாதத்தின்
மகிமை என்ன?
அதை இயற்றி
யவர் யார்?
மைலாப்பூர்
தேசிக பவனத் தின் ஆஸ்தான
வித்வான்
ஸ்ரீ உ.வே.வா.
ஸ்ரீவத்ஸாங்காச்சார்யார்
இங்கே விளக்குகிறார்...



ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாத மகிமை

"பிறந்த குழந்தைக்குத் தாயின் உடம்பு முழுவதும் தெரியாது. ஆயினும் அமுதம் வழங்குகிற இடம் மட்டும் நன்றாகத் தெரியும். அதே போல் நமக்கு பகவானின் உருவம் முழுவதையும் நினைவில் கொள்ள முடியாவிட்டாலும், அவருடைய இணையடிகளை வணங்கினால் அதுவே உய்வு பெறப் போதுமானது'' என்று கவிதா நயத்தோடு சொல்லப்படுகிற ஒரு ச்லோகம் நாம் தினமும் கேட்கிற ஸ்ரீ வேங்கடேசுவர சுப்ரபாதத்தில் இடம்பெற்றிருக்கிறது.

இன்னும் ஒரு பாடலில் இப்படி வருகிறது. பகவான் தன் ஒரு கரத்தால் திருவடியைக் கீழ்நோக்கிக் காட்டுகிறார். இது எதைக் குறிக்கிறது? முன்பு ஒரு காலத்தில், அர்ஜுனனுக்கு 'எனது திருவடிகளை அடைவாயாக' என்று பகவான் எதைக் காட்டி அருள்பாலித்தாரோ, அதையே பக்தர்களுக்குக் குறிப்பிடுவதாய்க் கவி வர்ணிக்கிறார்.

''அராயி காணே விகடே கிரிம் பஜஸ்வ'' என்கிறது ரிக்வேதம். பிறவிக் குருடனாயிருந்தாலும் வறியவனாக இருந்தாலும் திருவேங்கட மலையில் போய்ச் சேவித்து நின்று பார்வையையும் செல்வத்தையும் சேர்த்துப் பெறலாம் என்பது இதன் பொருள்.

இத்தகைய பழம்பெருமை வாய்ந்த திருவேங்கட மலையைப் பற்றி, அதில் எழுந்தருளியுள்ள பகவானைப் பற்றி எழுந்த சுப்ரபாதமே, இன்று உலகில் வழங்கும் மற்ற சுப்ரபாதங்களுக்கெல்லாம் முன்னோடியாக அமைந்திருக்கிறது.

தெய்வங்களில் எம்பெருமான் ஒருவரே பள்ளி கொண்ட கோலத்திலும் காட்சி தருகிறவர். பள்ளி கொண்டவரை எழுப்புவது ஒரு தொன்மையான வழக்கமாகும். இது வேதகாலம் தொடங்கி நடைபெற்று வருகிற நிகழ்ச்சியாகும்.

பள்ளிகொண்ட பரமனை முதலில் எழுப்பியவர் மகரிஷி விஸ்வாமித்திரர் தான். எல்லோரும் சொல்லும் பிரசித்தமான 'கௌஸல்யா ஸுப்ரஜா ராமா..'

என்று தொடங்கும் சுலோகம் மகரிஷி வால்மீகியின் வாக்கு! விஸ்வாமித்திரர் ஸ்ரீராமனை எழுப்பிய பாங்கு அது. இந்த மகரிஷி வாக்கை வைத்துத்தான் ஸ்ரீ வேங்கடேசுவர சுப்ரபாதம் எழுந்தது.

இன்றைக்கு அறுநூற்று எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த பிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமிகள் இயற்றிய பல நூல்களில் மிகவும் போற்றப் படுவது இந்த ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம் தான்.

வைணவ ஆசார்யார்களில் பிரசித்த மான வேதாந்த தேசிகர் ஸ்வாமிகளின் குமாரரான வரதாச்சார்யார் ஸ்வாமிகளின் சிஷ்யர் இந்த அண்ணன் ஸ்வாமி. இரு ஹஸ்தராகவேதான் இவர் விளங்கினார். வைணவர்களில் மற்றொரு பிரிவினருக்குத் தலைவரான ஸ்ரீமத் மணவாள மாமுனிகளின் தொடர்பும் பெற்றவர் இவர். வாதத் திறமையால் வென்ற சிறப்புக்காகப் 'பிரதிவாதி பயங்கரம்' என்கிற அடைமொழியைப் பெற்றிருக்கிறார். தஞ்சாவூர் மாவட்டம் சீர்காழி அருகில் உள்ள திருநாங்கூர்தான் இவர் அவதரித்த இடம். திருவேங்கடமுடையானுக்குக் கைங்கர்யங்கள் ஆற்றிக் கொண்டிருந்தார். சில காலம் காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்கும் பகவத் கைங்கர்யங்களில் ஈடுபட்டிருந்திருக்கிறார்.

திருவேங்கடமுடையான் மீது அளவற்ற ஈடுபாடு கொண்டு அண்ணன் ஸ்வாமிகள் இயற்றிய சுப்ரபாதம் நான்கு பகுதிகளாக விளங்குகிறது. முதல் பகுதியில் திருவேங்கடமுடையானைப் பள்ளியெழுப்புகிறார்.

இரண்டாவது பகுதி - 'கமலா குச' என்று தொடங்குவது முதல் வேங்கடேசனைப் புகழ்ந்து பாடுவது.. ஸ்தோத்திரம் எனப்படுகிறது.


மூன்றாவது பகுதியாக சரணாகதி பாடப்படுகிறது. பகவானின் திருவடிகளில் அடைக்கலம் வேண்டுகிற பகுதி இது.

இறுதிப் பகுதி வேங்கடேசப் பெருமாளுக்கு மங்கலம் பாடுகிற அற்புதமான பகுதி.

திருவேங்கடமுடையானின் சந்நிதியில் தினந்தோறும் காலை வேளைகளில் நடைபெறுகிற வைபவங்களை அழகுறக் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிற ஆனந்த வலிமை சுப்ரபாதத்துக்கு உண்டு. வைணவ சித்தாந்தக் கருத்துக்களும் பொதுப்படையான நீதிகளையும் கண்ணாடி போல் தெளிவாகக் காட்டுகிற உன்னதமான இலக்கியம் இது.

'ஈசானாம் ஜகதோத்யா' என்று தொடங்குகிற பகுதியை மட்டும் சொன்னால் கூடத் திருச்சானூரில் கோவில் கொண்டுள்ள அலர்மேலு மங்கைத் தாயாரின் அருளைப் பெறலாம் என்பது சான்றோர்கள் கண்ட முடிவு. அதே போல் 'ஸ்ரீ சேஷ சைல கருடாசல' என்று தொடங்குகிற பகுதியில் ஏழு மலைகளின் பெயரைச் சொன்னாலே போதும். பகவத் தியானம் நிறைவு தருகிறது என்றும் நம்புகிறார்கள்.

தொகுத்து எழுதியவர் : சுப்ர பாலன்
புகைப்படம் : தம்பையா



''நேத்திலேர்ந்து எதிர் வீட்டுப் பெண்ணைக் காணும் சார்!''
''அதுக்கு நீ ஏன்யா கம்ப்ளெய்ண்ட் பண்றே!''
''என்னோட பையனையும் காணுமே!''
- கீவலூர் கோவி. செந்தில்



''நம்ம மாப்பிள்ளை விவரமானவருன்னு எப்படிச் சொல்றே...?''
''நீங்க, நம்ம பொண்ணுக்கு 'வாஷிங் மெஷின்' வாங்கித் தருகிறேன் என்று சொன்னவுடன், 'அப்படியே ஒரு ஜெனரேட்டரும் வாங்குங்க மாமா'ங்கறாரே...!''
- பாலகிருஷ்ணன்ஜி

ராஜதந்திரம்

பி.எஸ். சுப்ரமணி

"இப்ப என்னதான்யா சொல்றே?" என்றார் திருஞானம். குரலில் லேசாக எரிச்சல் இருந்தது. போட்டிருந்த சட்டையைக் கழற்றி, அமர்ந்திருந்த நாற்காலியின் முதுகில் போட்டிருந்தார். தலையில் இயற்கையாகவும், முகத்தில் செயற்கையாகவும் முடியை இழந்திருந்தார்.

"தலைவரே! இன்னிக்கு ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சாகணும். கட்சிக்குத் தேவை நானா? இல்ல அந்த வெறும் பயலா?" என்றார் பன்னீர் செல்வம். எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். கோபத்தில் இருந்தார். முகமும், காதோரமும் ரத்தமாய்ச் சிவந்திருந்தன.

"இது என்னய்யா கேள்வி? ரெண்டு பேருந்தான் தேவை. அதுவும் நீ கட்சியோட தூண் மாதிரி, உன்னைப் போயி...." என்று மேலும் பேசப்போனவரை இடைமறித்தார் பன்னீர் செல்வம்.

"தலைவரே! வார்த்தை ஜாலம் காட்டி விஷயத்தை மழுப்பாதீங்க. இந்த இடைத் தேர்தல்ல நம்ம பார்ட்டியோட கேண்டிடேட்டா நாச்சிமுத்துவ செலக்ட் செஞ்சிருக்கீங்க. அப்ப கட்சிக்கு நான் தேவையில்லை. அந்த நாச்சிமுத்து தேவை. அப்படித்தானே?" என்றார். குரல் கோபத்தில் உயர்ந்திருந்தது.

திருஞானம் ஆளுங்கட்சியில் முக்கியமான, பொறுப்பான ஒரு துறையின் அமைச்சராக இருப்பவர். நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சியில் ஒரு 'பெரிய' ஆள். ஆளுங்கட்சி பொறுப்பு ஏற்றபின் நடக்கும் இந்த இடைத்தேர்தலில், ஒரு தொகுதி திருஞானம் வசம் விடப்பட்டு இருந்தது. அந்தத் தொகுதியின் வேட்பாளர் தேர்வு முதல் விளம்பர போஸ்டர் வரை சகலமும் திருஞானம் பொறுப்பில் விடப்பட்டு, பிரதிபலனாக வெற்றியை மட்டும் கேட்டிருந்தது கட்சித் தலைமை. அதனால் ஜாதி வோட்டுகள் கணிசமாக விழும் என எதிர்பார்த்து நாச்சிமுத்துவைத் திருஞானம் தேர்வு செய்யப்போக, மற்றொரு ஜாதியின் சற்று பலமிக்க பன்னீர் செல்வம், தம்மைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என அமைச்சர் முன், கோபத்துடன் குதித்துக் கொண்டிருந்தார்.

"அப்படியில்லை பன்னீர் செல்வம். கட்சிக்கு ரெண்டு பேரும்தான் தேவை. ஆனா இப்ப நடக்கப்போற இடைத் தேர்தல் கட்சியோட கௌரவப் பிரச்னை. உனக்குத் தெரியாததில்லை. நம்ம கட்சி ரூலிங் பார்ட்டி ஆகி நடக்கற எலெக்‌ஷன். இதுல கட்சி கண்டிப்பா ஜெயிக்கணும். இப்பவே எதிர்க்கட்சிக்காரனுங்க பொதுத் தேர்தல்ல நாம ஜெயிச்சது அனுதாப அலை, கள்ள ஓட்டு அப்படி, இப்படின்னு சொல்றானுங்க. அதுவுமில்லாம எதிர்க்கட்சிங்க எல்லாம் ஒண்ணாச் சேர்ந்து கூட்டணி வேற போட்டு நிக்கிது. வந்து கொஞ்ச நாள் கூட ஆவல. அதுக்குள்ள நம்மாளுங்க கைநீட்டிட்டாங்க. அத இந்த பத்திரிகைக்காரங்க அதுல ஊழல், இதுல லஞ்சம் அப்படீன்னு ஒவ்வொண்ணையும் நோண்டி நோண்டி கண்டுபிடிச்சி எழுதறானுங்க. அதனால இந்த எலெக்‌ஷன்ல ஜெயிக்கறது ரொம்ப முக்கியம். இதுல ஜெயிச்சா கெடைக்கப் போறது எம்.எல்.ஏங்கற பதவி மட்டுமில்ல. கட்சிக்கு கௌரவம். ஊழலற்ற கட்சின்னு நாம வெளிய சொல்லிக்கக் கூடிய ஒரு லேபிள் இந்த எலெக்‌ஷன். அதனால....."

"அதனால?" என்றார் பன்னீர் செல்வம்.

திருஞானம் பதில் சொல்லாமல், "தனராஜு," அந்த பைலை எடுய்யா" என்றார்.. பி.ஏ. பவ்யமாக ஒரு பச்சை நிற ஃபைலை எடுத்து இவரிடம் தர, அதை பன்னீர் செல்வம் பக்கம் தள்ளி, "பாரு" என்றார். "என்ன இது?" என்றார் பன்னீர் செல்வம் புரியாமல்.

"ஃபைலுய்யா! இந்த தொகுதியோட தலை எழுத்து! இந்த தொகுதியோட மக்கள் தொகை, ஆணா, பொண்ணா, அவுங்க ஜாதி, குலம், கோத்ரம் எல்லா டீடெய்ல்சும் கலெக்ட் பண்ணித் தயாரிச்சது. எதுக்கு? இந்த எலெக்‌ஷனுக்காக. இந்த தொகுதிக்காரனுங்க தங்கள் ஜாதிக்காரன்னு தெரிஞ்சாத்தான் ஓட்டையே பொட்டியில போடுவானுங்க. இந்த லிஸ்ட்படி இங்க நாச்சிமுத்துவோட ஜாதிக்காரனுங்க ஜாஸ்தியா இருக்கானுங்க. எப்படியும் இந்த எலெக்‌ஷன்ல ஜெயிக்கறது ரொம்ப முக்கியம். அதனால கட்சிக்குச் சாதகமா இருக்கற எந்த விஷயத்தையும் விடக் கூடாதுன்னு சொல்லத்தான் நாச்சிமுத்துவுக்கு ஸீட் குடுக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்" என்றார்



''ரிட்டயர் ஆகிற வயசுல எம்ப்ளாய் மெண்ட் எக்ஸ்சேஞ்ல இருந்து வேலைக் கான அப்பாயின்மெண்ட் ஆர்டர் வந்தது.''

''அடப் பாவமே... அப்புறம்?''

''வேலையில் ஜாயின் பண்ணி பென்ஷன் வாங்கிக்கிட்டிருக்கேன்.''

- சா. இரா. மணி

திருஞானம்.

''அப்ப எனக்குன்னு ஒரு ஜாதி இல்லியா? எனக்குன்னு படை, ஆளு, அம்பு இல்லையா?'' என்றார். முகம் கோபத்தில் ஜிவு ஜிவுத்துப் போக, உட்கார்ந்து இருந்த நாற்காலியைப் பின்தள்ளி எழுந்தார்.

''உட்கார்ந்து பேசய்யா. முணுக்குன்னா கோவம் வந்து டங்குன்னு எந்திரிச்சு நின்னுக்கறே. இத பாரு பன்னீரு. உனக்குன்னு ஒரு பலம் இல்லைன்னு நான் சொல்லலை. இருக்கு. ஒத்துக்கறேன். அத நம்ம பார்ட்டிக்காக யூஸ் பண்ணு. நாச்சிமுத்துவுக்காக வேண்டாம். எனக்காக - நம்ம கட்சியோட கட்டுப்பாட்டுக்காக வேலை செஞ்சி அவன ஜெயிக்க வெய்யி. உனக்கு சீட்டு இல்லேன்னா என்ன, வேற என்ன வேணும்? கேளு! பணமா? ஹாட் கேஷா தரேன். இல்ல பிளாட்டு, நிலம், காலேஜ் அட்மிஷன் அப்படீன்னு ஏதாவது வேணுமா? இல்லைன்னா பஞ்சாயத்து, கூட்டுறவுன்னு எதிலியாவது சேர்மனா இழுத்துப் போட்டுடலாம். ஆனா இந்த எலெக்ஷன்ல கட்சிக்காக வேல செய்யி. கட்சியை ஜெயிக்க வெய்யி. அதுதான் எனக்கு வேணும்.''

''தலைவரே! நீங்க கட்சி, கட்சின்னு அதோட கௌரவமும், உங்களோட கௌரவமும்தான் பெரிசுன்னு பேசறீங்களே தவிர, என்னைப் புரிஞ்சிக்க மாட்டேங்கறீங்க. எனக்குன்னும் ஒரு கௌரவம் இருக்கு தலைவரே! பெரியவரு கட்சி தொடங்கினப்ப இருந்து கூடவே இருக்கிறவன் நான். என்னை இன்னிக்கு ஓரம் கட்டிட்டு வேற ஒருத்தனை கேண்டிடேட்டா போடறீங்க. அதுவும் யாரை? நாச்சிமுத்துவ. அவன் நேத்து மொளச்ச காளாங்க. அவனுக்குக் கீழ என்னை வேல செய்யச் சொல்றீங்க. தலைவரே! கட்சி ஆரம்பிச்ச புதுசுல இதே தொகுதியில நம்ம கட்சிக்கு எவ்வளவு எதிர்ப்பு இருந்ததுன்னு உங்களுக்கே தெரியும். அதையும் மீறிக் கட்சியை வளர்த்தேன். கட்சி மொதமொத எலெக்ஷன்ல போட்டியிட்டப்ப, தெருத் தெருவா, கிராமம், கிராமமாப் போயி, ஓட்டுக் கேட்டு, ஜெயிச்சி, இந்த தொகுதிய நம்ம கட்சிக்குக் கோட்டையாச் செஞ்சது யாரு? நானா? இல்ல அந்த நாச்சிமுத்துவா? அப்படியெல்லாம் பாடுபட்டுக் கட்சியை வளத்த என்னை இன்னிக்குச் சக்கையாட்டம் ஒதுக்கித் தள்ளறீங்க. வேணாம் தலைவரே வேணாம்'' என்றவர், இரு கைகளையும் தூக்கி முகத்திற்கு நேராகப் பட்டென்று கும்பிட்டார். ''உங்க கட்சியே வேணாம். நா இன்டிபென்டன்டாவே நிக்கறேன். ஜெயிக்கறேன். என் பலம் என்னன்னு காட்டறேன். அதுக்குப் பின்னாடி நீங்க என்னைத் தெரிஞ்சிக்கிட்டாப் போவுது'' என்று சொல்லி விட்டு வெளியேற முயற்சி செய்தார்.

''இரு பன்னீர் செல்வம், நீ தனியா நின்னாக் கட்சி ஓட்டு பிரியும். வெற்றி வாய்ப்பு பாதிக்கும்'' என்றார் அவசரமாக.

''அதப் பத்தி எனக்குக் கவலையில்லை. நான் இப்ப நேரடியாப் பெரியவர்கிட்டப் போயி பேசப் போறேன். அவரும் நீங்க சொல்றதுதான் சரின்னு சொன்னா, நா சுயேட்சையா நிக்கறது நிச்சயம்'' என்றார் பன்னீர் செல்வம் உறுதியாக.

ஒரு நிமிடம் அவரை ஆழமாகப் பார்த்த திருஞானம், ''அப்ப சரி பன்னீர் செல்வம். உன்னையவே இந்த எலெக்ஷன்ல நிக்க வெக்கறேன். உன்ன மாதிரி மூத்த உறுப்பினர்களையெல்லாம் இழக்க நான் விரும்பல. நாச்சிமுத்துவ நான் சமாதானப்படுத்திக்கறேன். எதுக்கும் நீ நாளைக்கு இங்க வா. பெரியவர்கிட்டயும் ஒரு வார்த்தை சொல்லிட்டு, ஒரு பிரஸ் மீட் வெச்சு, கேண்டிடேட் பேரை டிக்ளேர் பண்ணிடலாம்'' என்றார்.

''சரிங்க தலைவரே! கட்சில எப்பவும் மூத்த உறுப்பினர்களுக்கு மதிப்பு இருக்கும்னு எனக்குத் தெரியும் தலைவரே!'' என்றார் பன்னீர் செல்வம் மிக உற்சாகமாக.

மறுநாள் பன்னீர் செல்வம் வந்த கார் மீது லாரி ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், பன்னீர் செல்வம் ஸ்தலத்திலேயே மரணமடைந்தார்.

திருஞானம் இடுப்பில் வெறும் லுங்கி மட்டுமிருக்க, வெறும் உடம்போடு கூடை நாற்காலியில் அமர்ந்திருந்தார். எதிரில் இருந்த டீபாயில் விஸ்கியும், வறுத்த, சூடான முந்திரிப் பருப்பும், சிக்கனும்

இருந்தன.

''சார்'' என்ற பி.ஏ.வின் குரலில் கலைந்து ''என்னய்யா?'' என்றார் எரிச்சலுடன்.

''சார் இரங்கல் அறிக்கையையும், கேண்டிடேட் பேரையும் பிரஸ்கக்குக் குடுக்கணும். நீங்க ஒரு தடவை பார்த்துச் சரின்னுட்டாக் குடுத்துடலாம்.''

''குடு'' என்று வாங்கியவர் படித்தார்.

''கட்சியின் தூணே பன்னீர் - இனி
காயாது எங்களின் கண்ணீர்.''

''யார்யா எழுதினது இதை?'' என்றார் ஆச்சரியமுடன்.

''நாந்தாங்க' என்று பி.ஏ. சொல்ல, ''பரவால்லையே!'' என்றவர் மீண்டும் படித்தார்.

கட்சியின் தூணே பன்னீர் - இனி
காயாது எங்களின் கண்ணீர்.

''ச்ச்ச். எத்தனை எடுத்துச் சொன்னேன். சீட்டு இல்லைன்னா என்ன, பணம் வேணுமா இல்ல வேற வசதி ஏதாவது வேணுமான்னு எவ்வளவு எடுத்துச் சொன்னேன். கேட்டானா?'' என்றவர், ''சரி, பிரஸ்கக்குக் கொடுத்திடு'' என்றார்.

வாங்கிக் கொண்ட பி.ஏ. லேசாகத் தயங்கி, ''சார், என்ன இருந்தாலும் இது அநியாயமில்லையா. உங்களையும், கட்சியையும் நம்புன அவர் நம்பிக்கைக்கு இது துரோகமில்லையா?'' என்றான்.

அவனை நன்றாக நிமிர்ந்து பார்த்த திருஞானம், ''நம்பிக்கைத் துரோகமா? ஓட்டுப் போட வர்றாங்களே சாதாரணப் பொதுமக்கள், அவங்களோட பாஷைல இதுக்குப் பேரு நம்பிக்கைத் துரோகம். ஆனா என்னை மாதிரி அரசியல்வாதிகளோட பாஷைல இதுக்குப் பேருதான் ராஜதந்திரம்!'' என்றார் சிரித்துக்கொண்டே.

●



இரும்புப் பூக்கள்

கிருஷ்ணா

வாசலில் தயங்கி நின்றான் சேகர்.

வெறுப்புடன் பார்வையை வீசும் அம்மாவின் விழிகளை மீறி அவனால் உள்ளே அடியெடுத்து வைக்க முடிய வில்லை.

வனஜா எந்த உணர்ச்சியையும் காட்டா மல் பூவைத் தொடுத்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா....''

''யாரு?'' என்றாள் கிண்டலாகப் பார்வதி.

''நான்தான்ம்மா சேகர். உன் பிள்ளை.''

''பிள்ளையா? அவன் செத்துப் போய் மூணு வருஷமாச்சே. இப்ப எனக்குன்னு இருக்கறது என் பொண்ணு வனஜா மட்டும் தான்.

''வனஜா உன் பொண்ணா? உன் மருமகள். என் மனைவி.''

''அந்த சொந்தமெல்லாம் கூட உனக்கு ஞாபகமிருக்கா? பேஷ்! அதெல்லாம் அறுந்து போய்த்தான் நாளாச்சே.''

''அம்மா....''

''அப்படிக் கூப்பிட உனக்கு அருகதை இல்லை. எதுக்கு இங்கே வந்தே? வெளி யில போயிடு.''

''என்னம்மா இப்படிப் பேசறே?''

மௌனமாய் இருந்தாள் பார்வதி.

''வனஜா நீ கூடவா?''

''என்னடா பேர் வைச்சவன் மாதிரி ஒருமையிலே கூப்பிடறே. அந்த உரிமை யெல்லாம் நீ என்னிக்கோ இழந்துட்டே. மரியாதையாய்க் கூப்பிடு'' என்ற அம்மாவை வியப்புடன் நோக்கினாள் வனஜா.

இதே அம்மாதான் அதாவது மாமி யார் தான் ஒரு முறை, தான் புருஷன் பெயரைச் சொன்னதற்கு எப்படி கோபித்துக் கொண்டாள்...!

வனஜா திருமணமாகி வந்த புதிதி லேயே பார்வதி சொல்லி விட்டாள்.

''இதோ பாரு வனஜா. நீ படிச்சவ. நான் சொல்றதைப் புரிஞ்சுப்பேன்னு நினைக்கிறேன். நாலு எழுத்துப் படிக்கட் டோம்ற கர்வத்துல இந்தக் காலத்துப் பொண்ணுங்க பண்ற கண்றாவிகளைப் பார்த்துப் பொருமிக்கிட்டு இருக்கறவ நான். எனக்குக் குடும்பம் நடத்தற பொண்ணு தான் தேவை'' என்று கண்டிப் பாய் உத்தரவிட்டு விட்டாள்.

ஆசாரமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பார்வதிக்கு அந்தக் கலாசாரம் தான் வேதம்.

''பெண்கள் சுதந்திரம்னா அழகான தலைமுடியை வெட்டிண்டு, உதட்டுல சாயம் பூசிண்டு, தொப்புள் தெரியற மாதிரி புடைவை உடுத்திண்டு, உடம்பு தெரியற மாதிரி ஜாக்கெட் போட்டுண்டு திரியறது இல்லை. நடமாடும் எக்ஸிபிஷனா இருக்கக் கூடாது. குத்து விளக்குக்குத்தான் மரியாதையும், மதிப்பும் அதிகம். ஆண்கள் மனசு சஞ்சல முள்ளது. நாம அடக்கமா நடந்துண்டோம்னா தள்ளி நிற்பா. தளுக்கி, மினுக்கினா ஆபத்துத்தான். இது புரியாம இந்த காலத்துப் பொண்ணுங்க திரியுது. படிச்சு முன்னேற வேண்டாம்னு சொல் லலே. ஆனால் அதுக்கு விலையா பண்பை யும் நம்ம கௌரவத்தையும் கொடுத்துடக் கூடாது'' என்று பெரிய லெக்சரே அடித்து விட்டாள்.

முதலில் மாமியாரைக் கண்டு மிரண் டாலும் போகப் போக மாமியாரின் நல்ல சுபாவம் புரிய வனஜாவும் அவளோடு ஒட்டிக் கொண்டாள்.

''கப்பலுக்கு ஒரு தலைவன் இருந்தால் தான் குழப்பமில்லாமல் பயணம் தொட ரும். அதே மாதிரி இந்த வீட்டுக்கும் ஒரு தலைவன்தான் இருக்கணும். உன் புருஷன் சம்பாதிக்கறான். அதனால் அவனுக்கு அந்த கௌரவத்தைக் கொடுத்து மதிப்போமே'' என்று இதே போல நடுநடுவே அறிவுரை போல இல்லாமல் நாசூக்காய்த் தொடுவாள்.

அதனால் குடும்பத்தில் விட்டுக் கொடுத்தலும், நேசமும் வளர்ந்தது கண்டு வனஜாவும் மாமியாரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டாள்.

யார் கண்பட்டதோ தெரியவில்லை, திடீரெனச் சூறாவளி வீசியது.

சேகரின் புத்தி தடுமாறியதோ, இல்லை பெண்ணின் சாகசத்தில் சிக்குண்டானோ, திடீரென ஒரு நாள் புயல் தாக்கியது.

வனஜாவும், மாமியார் பார்வதியும் மார்க்கெட்டுக்குச் சென்றனர். அன்று வெயில் தாளாமல் ஜூஸ் கடைக்குள் நுழைந்த போதுதான் பார்த்தனர், சேகர், ஒரு பெண்ணோடு தோளோடு தோள் இடித்தபடி அமர்ந்து ஜூஸ் பருகிக் கொண் டிருந்ததை.

வெயிலின் வெப்பத்தையும் விட



அதிகமான வெப்பம் மனத்தில் ஏற, வனஜா அங்கேயே மயக்கமடைந்தாள். ஓர் ஆட்டோவைப் பிடித்து வீடு வந்து சேர்ந்தனர்.

வாழ்வே சூனியமாகி விட்டது போல ஆகி விட்டது வனஜாவுக்கு. தன் கணவன் சேகரா இப்படி? என்று மருகினாள்.

மனைவி இருக்கும்போதே பிற பெண்ணிடம் மயங்கிய கணவன்மார்களால், அந்த மனைவி படும் அவமானங்களையும், வேதனைகளையும் கண்டும், கேட்டுமிருந்த அவள் மனம் ஊஞ்சலாடியது. பழமையில் ஊறிய தன் மாமியார் எதுவும் பேசாமல் மௌனமாய் இருந்தது வேறு அவளைப் பயமுறுத்தியது. இந்த வயதில் அவரும் என்ன செய்வார் பாவம்....! என்று நினைத்துக் கொண்டாள் வனஜா. பொருளாதாரச் சூழ்நிலையில் தன் கணவனையே நம்பியிருக்கும் தானும், தன் மாமியாரும் எப்படி கணவனை அதட்டித் திருத்த முடியும் என்று மலைத்தாள். பிறந்த வீட்டு நிலையும் தனக்குச் சாதகமாக இல்லையே என்று வருந்தினாள்.

பிற பெண்ணைத் தொட்ட கணவனுடன் வாழ வெறுத்தது மனம். வாழா வெட்டியாய்ப் பிறந்தகம் செல்லவும் பயம்.

முடிவெடுத்தாள்.

''வனஜா...'' நிலைமையின் விபரீதம் உணர்ந்து ஓடிவந்தாள் பார்வதி.

''என்ன காரியம்மா செய்யத் துணிஞ்சிட்டே? தற்கொலைதான் பிரச்னைக்கு முடிவுன்னா உலகத்துல யாருமே வாழ முடியாது'' என்று சத்தம் போட்டாள்.

''வேற நான் என்னம்மா செய்ய முடியும்?''

''தப்புச் செஞ்சவன் சுகமாயிருக்க, தவறே செய்யாத நீ ஏன் வனஜா தண்டனை அனுபவிக்கணும்?''

''என்ன அத்தை சொல்றீங்க?''

''கப்பல்ல, தங்களைக் காப்பாற்றுவான்ற நம்பிக்கை இருக்கற வரைக்கும்தான் தலைவனை மதிப்பாங்க. அந்த நம்பிக்கை போச்சுன்னா அவனை யாரும் மதிக்க மாட்டாங்க. நம்ம வீட்டுல அந்த நம்பிக்கை மோசம் போயிடுச்சு. அதனால அவனை உதறிடுவோம்.''

''அத்தை....!''

''பெண்களைப் பூக்களுக்கு ஒப்பிடுவாங்க. ஆமாம் நாம் எல்லாம் இரும்புப் பூக்கள். மனசுல தன்னம்பிக்கை உள்ள இரும்புப் பூக்களா இருக்கணும். பயம் என்ற துரு நம்ம மனசுல பிடிக்க விடக்கூடாது. துருப்பிடிச்சிட்டா நம்மை அரிக்க, மிதிக்க, அடக்கிடுவாங்க'' என்ற மாமியாரை வியப்புடன் பார்த்தாள் வனஜா.

''நான் பழமையிலே ஊறினவதான். ஆனால் நம்ம கலாசாரமும், பண்பும் நம்மிடம் அன்பு செலுத்தற கணவனைத்தான் தெய்வமா பூஜிக்கச் சொல்லுது. முதல்ல நீ கண்ணைத் துடை'' என்று அருகில் வந்து ஆதரவாய்க் கையைப் பிடித்தாள்.



காண்ஸ்டபிள் : நீங்கதானே, பத்திரி கையிலே, 'போலீஸ்காரங்க மாமூல் வாங்குவதா' ஜோக் எழுதுவது...?

எழுத்தாளர் : ஆமாம்... ஏன்...?

கான்ஸ்டபிள் : இன்ஸ்பெக்டர் ஐயா, 'சன்மானத்தில்' 'மாமூல்' வாங்கிக்கிட்டு வரச் சொன்னார்...!

- ஆர் வசந்தகுமார்



❑ பெண்கள் முகத்தில் பௌடர் போடு வதற்கு முன் பன்னீரை முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவ வேண்டும். பன்னீர் சிறிது காய்ந்த பிறகு பௌடர் போட்டுக் கொண்டால் பௌடர் கலையாமல் முகத்தில் பொலிவோடு இருக்கும்.

முகத்தில் பருக்கள் வராமலிருக்கவும் இந்தப் பன்னீர் பவுடர் முறை உதவும்.

- ஆர். ஆர். பூபதி



❑ மிகக் குறைந்த காலத்தில் சுதந்திரமடைந்த நாடு பங்களாதேஷ். மக்கள் அதற்காகப் போராடியது ஒன்பது மாதங்கள் மட்டுமே. வரலாற்றில் இவ்வளவு குறுகிய காலத்தில் சுதந்திரமடைந்த நாடு வேறு எதுவும் இல்லை.

- ஆர். ஆர். பூபதி

''இப்ப என்ன அத்தை பண்றது?''

''இது சரியான கேள்வி. இது என் புருஷன் எனக்கு விட்டுட்டுப் போன வீடு. இனிமே இது நம்ம வீடு. அவனுக்கு இதுலே இனிமே இடம் கிடையாது. இனிமே நான் உனக்கு மாமியார் இல்லை, அம்மா. தங்கறதுக்கு இடம் இருக்கு. சாப் பாட்டுக்கா வழி கிடைக்காது? கவலைப் படாதே'' என்று தைரியம் சொன்னாள்.

''அம்மா'' என்று மனம் நெகிழ்ந்து கட்டிக் கொண்டாள் வனஜா.

பெண்கள் சுதந்திரம் என்பது இஷ்டப் படி உடை உடுத்துவதிலும், வெளியில் சுற்றுவதிலும் இல்லை என்பதும் பெண் மைக்கு அகௌரவம் நேரும்போது - அலட்சியப் படுத்தப்படும் போது அதைக் கண்டு துவளாமல் எழுந்து, நிமிர்ந்து நிற்பதே என்பதையும் புரிந்து கொண்டாள் வனஜா. மாமியாரின் உண்மையான விசுவ ரூபத்தை எண்ணிச் சிலிர்த்தாள்.

அதற்குப் பிறகு வனஜாவுக்குத் தெரிந்த தையல் மூலமும், பார்வதிக்குக் கைவந்த அப்பளம், வடகம் மூலமும் சாப்பாட் டுக்குக் கஷ்டமின்றிக் குடும்பம் ஓடியது.

நடுவில் சேகருக்கும், அந்த பெண் ணுக்கும் ஒத்து வராமல் சண்டையில் முடிந் ததையும், சேகர் அவள் சந்தோஷத்திற்கு வாங்கித்தந்த ஆடம்பரப் பொருட்கள் மூலம் கடன் மென்னியை முறிப்பதையும் யாரோ சொல்லி விஷயம் தெரிந்தது.

இதோ இப்போது வீடு தேடி வந்து விட்டான்.

''அம்மா என்னை மன்னிக்க மாட் டாயா?'' என்று கெஞ்சியவனைக் கூர்ந்து நோக்கினாள்.

''இதோ பாருடா. சரியான மடிசஞ் சின்னு என்னை எவ்வளவோ தரம் நீ கிண்டல் பண்ணியிருக்கே. அதே பார்வதி தான் இன்னமும் நான்.''

''என்னம்மா சொல்றே?''

''நம்ம கலாசாரத்துல உள்ள சமூகக் கட்டுப்பாட்டை ஒரு தடவை மீறிட்டாலும் திரும்பி உள்ளே வர அனுமதி கிடையாது பெண்களுக்கு. அதே சட்டம்தான் ஆண்க ளுக்கும் இருக்கணும்னு நான் விரும்ப றேன். அதனால நீ போகலாம்'' என்று சொல்லிக் கதவை அறைந்து சாத்தினாள் பார்வதி. திரும்பி வனஜாவைப் பார்த்தாள்.

''வனஜா, உனக்கு என்னோட முடிவுல சம்மதம் தானே?''

''இப்பத்தாம்மா எனக்கு நிம்மதியா இருக்கு. எங்கே பிள்ளைப் பாசத்துல தடு மாறிடுவீங்களோன்னு பயந்துட்டேன்,'' என்றவளைப் பரிவுடன் அணைத்துக் கொண்டது பெண்மையைப் போற்றும் அந்தத் தாய்மை.

டிப்ஸ்... டிப்ஸ்... டிப்ஸ்...

சாதா உப்புக்கு எத்தனை உபயோகங்கள்!

1. காஸ் ஸ்டவ் மீது குழம்பு, ரஸம் விழுந்து கறையாகி விட்டால் உப்புத் தூளைப் போட்டுத் துடைக்கவும்.

2. தோசைக் கல்லில் ஒட்டிக் கொண்டு எடுக்க வராவிட்டால் உப்புத் தூளைக் கல்லில் தூவித் தேய்த்து விட்டு வார்த்தால் நன்றாக வரும்.

3. எண்ணெய்ச் சிக்குப்பிடித்த துணிகளை, உப்புக் கலந்த நீரில் ஊறவைத்து சோப்புப் போட்டுத் துவைக்கவும்.

4. உடம்பில் அரிப்பு ஏற்பட்டால் தேங்காய் எண்ணையுடன் உப்புத் தூள் கலந்து உடம்பில் தடவி ஊறவிட்டுக் குளித்தால் அரிப்பு போய் விடும்.

5. கால் பாதம் வலித்தால் வெது வெதுப்பான நீரில் உப்பைப் போட்டு காலை அதில் வைத்துப் பத்து நிமிடம் இருந்தால் வலி போகும்.

6. புடைவைகள், கலர் துணிகளை முதலில் நனைக்கும் போது நீரில் ஒரு பிடி உப்புப் போட்டு நனைத்தால் சாயம் போகாமலிருக்கும்.

7. ஊறுகாய் ஜாடிகளில் எண்ணெய்ப் பிசுக்குப் போக உப்பைத் தேய்த்து வைத்து விட்டுப் பிறகு தேய்த்துச் சுத்தம் செய்யவும்.

8. பாத்திரங்களில் வெங்காய வாடை போக உப்பைப் போட்டுக் கொதி நீரை விடவும்.

9. வெண்ணெய் கெட்டுப் போகாமலிருக்க சிறிது உப்புக் கலந்து வைக்கவும்.

10. கடுகு எண்ணெயில் உப்புச் சேர்த்துப் பல் தேய்த்தால் பயோரியா, மற்றும் மஞ்சள் கறை போகும்.

– எஸ். சகுந்தலா, சென்னை – 91.





விலையுயர்ந்த டேப் ரிகார்டரைப் பாதுகாக்க....

1. விலை குறைவாகக் கிடைக்கிறது என்பதால் மலிவு காஸெட்டுகளை உபயோகிக்காதீர்கள். அந்த டேப்புகள் செலுலோஸ் ஆசிடேட்டினால் செய்யப்பட்டவை. மட்டமானவை. டேப்பில் பூசப்படும் காந்தப் பூச்சும் ஒரே சீராக இல்லாமல் சொரசொரப்பாக இருக்கும். இவை விலையுயர்ந்த ஹெட்டுகளை சீக்கிரம் கெடுத்து விடும்.

2. சில விலையுயர்ந்த டேப் ரிக்கார்டர்களில் எல்லா காஸெட்டுகளும் சரியாகப் பொருந்துவதில்லை. அதனால் உங்கள் ரிக்கார்டர் பழுது என்று சங்கடப்படாமல் பொருத்தமான காஸெட்டுகளை உபயோகியுங்கள்.

3. பட்டன்களைக் கையாளும் போது அவசரம் வேண்டாம். ஸ்டாப் பட்டனை அழுத்தி டேப்பை நிறுத்தாமலே மற்ற பட்டன்களை அழுத்தாதீர்கள்.

4. காஸெட்டைப் பாதுகாக்கும் டோர் உடைந்து விட்டால் உடனே புதியது பொருத்தி விடுங்கள். திறந்தபடியே வைத்து இயக்குவது பாகங்களில் தூசு படிய ஏதுவாகும்.

5. டேப் ரிக்கார்டருக்குப் பொருத்தமான தோல் உறையைக் கட்டாயம் உபயோகியுங்கள். அது உங்கள் ரிக்கார்டரைப் பல வழிகளில் பாதுகாக்கும்.

- எஸ். ரெங்கநாதன், சென்னை – 53.

ஏ.எம்.ராஜா இசை அமைப்பாளர் ஆன கதை



ஏ.எம். ராஜா

திரும்பிப் பார்க்கிறேன் - 5

ரஷ்யன் கோணம் என்பது என்ன? அதை முதலில் விளக்குகிறேன்.

கல்யாணப் பரிசு படத்தில் 'அக்கா ளுக்கு வளைகாப்பு' பாடல் இடம்பெற்றது நினைவிருக்குமே? படத்தைத் தெலுங்கில் மீண்டும் எடுத்த போது, இந்தக் காட்சியில் தான் ரஷ்யன் கோணத்தைக் கையாண் டேன்.

காமிராவை ஸ்டாண்டில் வைத்துப் படம் பிடிப்பது, டிராலியில் வைத்து எடுப் பது, கிரேனில் வைத்து எடுப்பது எல்லாம் உங்களுக்குத் தெரியும். அதே நேரத்தில் காமிராவை வலதுபுறமாகவோ இடதுபுற மாகவோ சாய்த்து வைத்துப் படம் பிடித் தால் திரையில் படம் ஒரு பக்கம் உயர்ந்தும் மறுபக்கம் தாழ்ந்தும் தெரியும். இதுதான் ரஷ்யன் கோணம். பாடல் காட்சிகளிலும் கிளைமாக்ஸ் போன்ற முக்கியமான காட்சி களிலும் இதைத் தேவையான போது உப யோகிக்க வேண்டும்.

ஸ்டுடியோவின் பெரிய பெரிய விளக் குகளைப் பொருத்துவதற்காக பிளாட் ஃபாரம் கட்டப்பட்டிருக்கும். அதற்கு 'கோடா' என்று பெயர்.

நான் கோடாவில் டிராலி வைத்து சாய் வான கோணத்தில் அதாவது ரஷ்யன் கோணத்தில் கீழே நடனமாடும் பெண் களைப் படம் எடுத்தேன். அபாரமான புதுமை செய்து விட்டதாக என் மனசுக்குள் பெருமிதம்!

''இதுவரை ஒரு பயலும் இந்த மாதிரி கோணத்தில் ஷாட் அமைத்ததேயில்லை சார், நீங்க எதைச் செய்தாலும் அதில் புதுமை இருக்கு'' என்று செட்டில் பலர் என்னிடம் சொன்னார்கள். நான் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டேன்.

வாகினி ஸ்டுடியோவில் ஒலிப்பதி வாளர் கிருஷ்ணய்யர். ரொம்ப ஸீனியர் டெக்னீஷியன். தெலுங்குப் படம் ரிலீஸ் ஆவதற்குச் சில தினங்கள் முன்பு நானும் அவரும் அருகருகே அமர்ந்து படம் பார்த்துக் கொண்டிருந்தோம். மேலே குறிப் பிட்ட பாடல் காட்சி முடிந்ததும் அவர் சொன்னார் :

''ஸ்ரீதர் நீ புதுமை டைரக்டர்தான் - பல அம்சங்களில் புதுமை செய்யறே சரி. ஆனா ஒன்றை மட்டும் மறக்காதே. என்னைப் போன்ற ரசிகர்கள் படம் பார்க்கும் போது சிரமப்படாமல் பார்க்கவே விரும்பு கிறோம். நீ அத்தனை உயரத்திலிருந்து காமி ராவை அப்படிச் சாய்த்து, இப்படிச் சாய்த்து, கஷ்டப்பட்டுப் படம் எடுக்கிறாய் என்றால், படம் பார்க்கிறவர்களையும் அதே கோணத்திலிருந்துதான் நிகழ்ச்சி களைப் பார்க்கச் செய்கிறாய். ஆக, நீ பட்ட கஷ்டத்தை ரசிகர்களும் அனுபவித்தாக வேண்டும். நிஜமாகவே இல்லாவிட்டா

டைரக்டர் ஸ்ரீதர்

லும், அந்தக் கஷ்ட உணர்ச்சி உள்ளத்தில் உண்டாகத்தான் செய்யும். ஏன் எங்கள் கழுத்துக்களை நோக அடிக்கிறாய்?''

பிறர் சொன்னதற்கும் இவர் பேச்சுக்கும் எவ்வளவு வித்தியாசம்! கிருஷ்ணய்யர் கருத்து எனக்கு ஒரு பாடமாக அமைந்தது.

ரஷ்யன் கோணம் மட்டுமின்றி வேறு பலவித கோணங்களும் ஒருவனுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் எப்படி, எதை, எந்தச் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தினால் பொருத்தமாயிருக்கும் என்பதும் தெரிந்திருக்க வேண்டும். தேவையற்ற சமயத்தில் பயன்படுத்தினால் இப்படித்தான் விமர்சனம் வரும் என்பதைப் புரிந்து கொண்டேன்.

உங்களுக்குத் தெரியும் ஏ. எம். ராஜா தான் கல்யாணப் பரிசு படத்துக்கு மியூசிக் டைரக்டர். அதன் வெற்றியில் பெரும்பங்கு அவருக்கு உண்டு. அதுதான் ராஜா இசை அமைத்த முதல் படம் என்பதைக் குறிப்பிட வேண்டும். அந்தக் காலகட்டத்தில் விசுவநாதன் - ராமமூர்த்தி, ஜி. ராமநாதன் போன்ற ஜாம்பவான்கள் இருந்தார்கள். அவர்களையெல்லாம் விட்டு விட்டு நான் ஏ. எம். ராஜாவைத் தேர்ந்தெடுப்பானேன்? அது ஒரு கதை!

நான் மாடர்ன் தியேட்டர்ஸில் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம், நானும் ராஜாவும் ஒன்றாக ரயிலில் சேலம் சென்று வருவோம். அப்போது நான் வெறும் கதை வசனகர்த்தா. ராஜா வெறும் பின்னணிப் பாடகர்.

ரயில் பயணத்தின் போது ஒரு சமயம், ''ஸ்ரீதர்! உனக்கு நல்ல திறமை இருக்கு. நீ ஒருநாள் நிச்சயம் டைரக்டராயிடுவே'' என்றார் ராஜா.

''நீ மட்டும் என்னவாம், பிரமாதமாப் பாடறே; சங்கீத ஞானம் நிறைய இருக்கு; சீக்கிரமே மியூஸிக் டைரக்டராயிடுவே'' என்றேன்.

''அப்படின்னா ஒண்ணு செய்! நீ முதன் முதலில் டைரக்ட் செய்யற படத்தில் என்னை மியூஸிக் டைரக்டரா போடறதாச் சொல்லு!''

''நிச்சயமா! நான் டைரக்ட் பண்ணற துங்கற கனவு நனவானா அப்ப நீதான் மியூசிக் டைரக்டர்!''

''இப்ப இப்படித்தான் சொல்வே. நிஜமாவே வாய்ப்புக் கிடைக்கும்போது மறந்துடுவே!''

இப்படி தமாஷாகவும் சீரியஸாகவும் ராஜாவும் நானும் பேசிக் கொண்டிருப்போம். உண்மையாகவே டைரக்ஷன் வாய்ப்பு எனக்குக் கிடைத்த போது மறப்

போனா? அதிலும் ராஜா ரொம்ப சென்ஸிடிவ் டைப் என்பது எனக்குத் தெரியும்.

எப்படித் தெரியும்? அமரதீபம் படத் தயாரிப்பின் போது அது தெரியவந்தது. 'தேன் உண்ணும் வண்டு' என்ற பாடல் பதிவாக வேண்டிய தினம். பாடலை ராஜாவும் லீலாவும் இணைந்து பாடுவதாக இருந்தது.

திடீரென்று லீலாவின் அப்பா, ரிகார்டிஸ்ட் கிருஷ்ணய்யரிடம், ''என் பெண் ராஜாவுடன் ஒரே மைக்கில் பாட மாட்டாள். அவளுக்கென்று தனி மைக் வையுங்கள்'' என்றார். அதுவரை அப்படி பழக்கமில்லை என்றாலும் கிருஷ்ணய்யர் லீலாவின் அப்பாவின் சொல்லுக்கு மதிப்புத் தந்து செயல்பட்டார்.

ஆனால் இது ராஜாவை ரொம்பக் கலக்கி விட்டது. ''எதுக்கு தனி மைக் வைக்கச் சொல்றாங்க? நான் கெட்டவனா? என் மேல் நம்பிக்கை இல்லையா? இத்தனை நாள் என்னோடு ஒரே மைக்கில் பாடினவங்க, இப்போ மட்டும் தனி மைக் கேட்டால் என்ன அர்த்தம்? திடீர்னு என் மேல் ஏன் சந்தேகம்?'' என்று ஆரம்பித்து விட்டார்.

அது மட்டுமல்ல. ''தனி மைக் வைச்சாத்தான் பாடுவேன்னு அவங்க கண்டிஷன் போட்டா, தனி மைக் வைச்சா பாட மாட்டேன்னு நான் ஏன் கண்டிஷன் போடக் கூடாது?'' என்றும் கேட்டார்.

ரிகார்டிங் கான்ஸல் ஆகி விட்டது. ராஜாவின் மனம் எவ்வளவு புண்பட்டு விட்டது என்பது தெரிந்து நான் ஆறுதல் சொன்னேன். சமாதானப்படுத்த முயற்சி செய்தேன். நடக்கவில்லை.

''ஸ்ரீதர்! நீங்க எப்படியும் பாட்டை ரிகார்ட் பண்ணத்தான் போறீங்க. யார் பாடப் போறாங்க? லீலாவா, நானா? தீர்மானிச்சுக்குங்க! ரெண்டு பேரில் ஒருத்தர்தான் பாட முடியும்'' என்று கூறி விட்டார்.

ராஜா எவ்வளவு சென்ஸிடிவ் மனிதர் என்பது அப்போதுதான் எனக்குப் புரிய வந்தது. அதனால்தான் மறக்காமல் - கொடுத்த வாக்குறுதி மீறாமல் - அவரை கல்யாணப் பரிசு படத்துக்கு மியூஸிக் டைரக்டராக இருக்குமாறு அழைத்தேன். அவரும் படத்தின் வெற்றிக்குத் துணை நின்றார்.

அது சரி, ஆனால் அமரதீபம் படம் விஷயம் என்ன? அதில் பாடியது ராஜாவா, லீலாவா? நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. சொல்கிறேன் அடுத்த வாரம்!

எது புத்திசாலித்தனம்?

□ சாக்ரடீஸின் சிஷ்யன் ஒருவன், ''ஐயனே! அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வேறுபாடு?'' என்று கேட்டான்.

உடனே சாக்ரடீஸ், ''அதோ இருக்கிறாரே ஒரு கிழவர், அவரிடம் சென்று இங்கிருந்து கிராமத்திற்குப் போய்ச் சேர எவ்வளவு நேரமாகும் என்று கேட்டு வா!'' என்றார்.

சிஷ்யனும் கிழவரிடம் சென்று கேட்டான்.

அவர் பதிலேதும் கூறவில்லை. திரும்பத் திரும்பக் கேட்டும் பதிலேதும் கூறாததால், ஒருவேளை கிழவருக்குப் புத்திசுவாதீனம் இல்லையோ என்று நினைத்து வந்த வழியே திரும்பிச் சில அடிகள் எடுத்து வைத்தான்.



உடனே கிழவர், அவனை அழைத்து, ''நீ ஐந்து நிமிடங்களில் கிராமத்தை அடையலாம்!'' என்றார்.

''நீங்கள் ஏன் இந்தப் பதிலை நான் கேட்டதும் உடனே கூறியிருக்கக் கூடாது?''

''நீ எவ்வளவு வேகமாய் நடக்கிறாய் என்பதைப் பார்க்காமல் எப்படியப்பா நீ கிராமத்தை எவ்வளவு நேரத்தில் அடைவாய் என்பதைக் கூற முடியும்?''

சிஷ்யன் வியப்பும் மரியாதையுமாக சாக்ரடீஸிடம் வந்து நடந்ததைக் கூறியதும், சாக்ரடீஸ், ''அதற்குப் பெயர்தான் புத்திசாலித்தனம்'' என்றார்.

- 'நினைவில் நிறுத்துங்கள்' நூலிலிருந்து : சைதை ஆர். முரளி.

அன்புள்ள அம்மு அக்காவுக்கு...



நீ எழுதியபடியே முஸ்தீபுகளைத் தொடங்கிவிட்டேன். மாலுக் குட்டி சிந்திக்கும் பெண்ணாக வளர வேண்டும் என்பதற்காக, நீ எழுதிய கடிதத்தை அவளுக்கு உரக்கப் படித்துக் காட்டினேன். கால்களை உதைத்துக் கொண்டு ஜொள்ளு வழிய பொக்கைச் சிரிப்புச் சிரித்தாள்!

இன்று காலை வனிதா வந்திருந்தாள் - கை, காது, கழுத்து எல்லாம் மூளியாக... ''என்ன இது என்றேன்....?'' அவ்வளவுதான்! ஊசிப்பட்டாசு கணக்காக வெடித்தாள்.

வனிதா : ''நீங்களும் ஆரம்பிச்சுட்டீங்களா அண்ணி! நம்ம பண்பாடு, கலாசாரம்.. பெண்ணா லட்சணமா இரு.... நம்ம பாரம்பரியத்தைக் காப்பாத்தணும். ரொம்ப வாஸ்தவம். ஆனால் அதுல ஆண்களுக்குப் பங்கே கிடையாதா...? அலங்காரம், ஆசாரம், நியமங்கள் எல்லாம் நமக்குத்தானா.''

நான் : ''அதுக்காக....?''

வனிதா : "I am protesting. என் அதிருப்தியை இப்படித் தெரிவிக்கறேன். என் அண்ணனும் தம்பியும் ஜீன்ஸை மாட்டிக்கிட்டு வெளியே போய்டறாங்க. பெட்டிக் கடையில் சிகரெட் கூடப் பிடிக்கறாங்க... சாப்பாட்டு நேரத்துக்குத்தான் திரும்பி வராங்க... நான் மட்டும் அம்மாவுக்கு அனுசரணையா புடைவையை இழுத்துச் செருகிண்டு தீபாவளி பட்சணம் செய்ய உதவணும். சாயங்காலம் ஆனா முகம் அலம்பி, பூ வைச்சுக்கணும். கால் நீட்டி உக்காந்து 'புக்' படிக்கக் கூடாது. எனக்கு ஜீன்ஸ் வேணும்னு கேட்கக் கூடாது....''

நான் : ''நீ இந்த முறையில - நகை போட்டுக்காம எதிர்ப்புத் தெரிவிச்சா அவங்க உடனே மாறி பட்சணம் பண்ண உதவ வருவாங்கன்னு நினைக்கறியா....?''

வனிதா : ''உடனே அவங்க வந்து தேங்குழல் பிழியணும்னு நான் சொல்லலை. அவங்களுக்கு இந்த விஷயங்கள்ல சராசரி ஈடுபாடு கூட இருக்கறதில்லைன்னுதான் வேதனைப்படறேன். எண்ணெய் அட்வர்டைஸ்மெண்ட்ல வர்ற மாதிரி ''இதெல்லாம் பொம்பளைங்க சமாசாரம்னு'' ஒதுங்கிடறாங்க. இதை இங்கிலீஷ்ல sex stereotypingனு சொல்றது... பெண்களுக்குன்னு சில லட்சணங்கள், வேலைகள், ஆண்களுக்குன்னு சில லட்சணங்கள் வேலைகள் அப்படின்னு சுவர் எழுப்பின மாதிரி பிரிச்சுடறது..... இதனால் அனுசரணையே இல்லாம போயிடுது.... தீபாவளிக்குப் பட்சணம் செய்யறது நம்ம பொறுப்புன்னா, - அந்த நேரத்தில் வாசல் மணிக்கும், டெலிபோனுக்கும் பதில் சொல்லி, மழை வந்தா துணிகளை எடுத்துப் போட்டு..... இன்னும் எத்தனையோ சின்னச் சின்ன வேலைகளைச் செய்யக் கூடாதா....? வாசல் வராந்தாவில் அம்மா கோலம் போட்டால், அப்பா அதன் மேல் ஈஸி சேரை இழுத்துப் போட்டு உட்கார்றார்! இதையெல்லாம் ஆட்சேபிக்கத் தான் நகை போட்டுக்கறதை விட்டுட்டேன். இதைப் பார்த்தாவது வீட்டிலே யோசிப்பாங்க இல்லையா....''

வனிதா வீட்டில் யோசிக்க ஆரம்பித்தார்களோ என்னவோ.... தெரியாது. நான் யோசித்தேன். சாயங்காலம் ஆனந்திடம் நடந்ததையெல்லாம் சொல்லி... '''ஒரு changeக்கு நாளைக்கு நீங்க காலைல காப்பி போட்டு என்னை எழுப்புங்களேன்....'' என்றேன்.

''ஓ! அதுக்கென்ன, கண்டிப்பாச் செய்யறேன். ஆனா அந்தக் காப்பியைக் குடிக்கணும்னு மட்டும் என்னைக் கட்டாயப்படுத்தக் கூடாது'' என்றார் என் அருமைக் கணவர்!

அன்புடன்,

- அம்மு

✦ டாக்டர் பட்டம்!



'ஜெ'க்கு டாக்டர் பட்டம் தர பல்கலைக்கழகங்கள் போட்டிபோடுகின்றனவே?

● இரா. குமார், புதுச்சேரி.

? ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்தவர் களும் ஆலயங்களில் அர்ச்சகராக வரும் விதத்தில்தான் தமிழ்நாட்டில் புதிதாக வேதசாஸ்திர கல்லூரி தொடங்கப்படுவதாக ஜெயலலிதா கூறியுள்ளது பற்றி?

! ஆலயங்களில் அர்ச்சகர் நியமன விஷயத்திலும் இட ஒதுக்கீடு என்று கொண்டு வராமல் அந்த ஓர் இடத்திலேனும் தகுதி அடிப்படையில் நியமனம் நடந்தால் சரி.

● பி. கண்ணன், புதுக்கோட்டை.

? சார்ஜா கோப்பை பற்றி...?

! அடுத்தடுத்து மூன்று ஆட்டங்களில் வெற்றி கண்டு மெய்சிலிர்க்க வைத்து விட்ட நம் கண்மணிகள் கோப்பையுடன் திரும்பி வர வாழ்த்துவோம்.

● சீனிவாசன், செம்போடை.

? தங்க மங்கை பி. டி. உஷா மீண்டும் ஓட்டப்பந்தயங்களில் கலந்து கொள்ளப் போகிறாராமே?

! வெள்ளியாகி விட வாய்ப்பு அதிகம்.

● ஜி. சத்யமூர்த்தி, கும்பகோணம்.

? ஜெயலலிதாவுக்கு டாக்டர் பட்டம் கொடுக்க பல்கலைக் கழகங்கள் போட்டி போடுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! இத்தகைய அபத்தங்களுக்கு 'ஜெ' முடிவு கட்ட வேண்டும் என்று நினைக்கிறேன்.

● மு. மதிவாணன், அரூர்.

? 'பள்ளிக்கூடத்துக்குத் தினமும் தவறாமல் வரும் மாணவர்களுக்குத் தினம் ஒரு ரூபாய் வழங்கப்படும்' என்று கர்நாடக அரசு அறிவித்திருக்கிறதே?

! 'வராமல் இருந்தால் எங்களால் எட்டோ பத்தோ சம்பாதிக்க முடியுமே' என்று அவர்கள் திருப்பிக் கேட்கக்கூடும்.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'மின் கட்டண உயர்வு, பஸ் கட்டண உயர்வு போன்ற தமிழக அரசின் சமீபத்திய முடிவுகள் மக்கள் நலனுக்கு எதிரானவை என்றாலும் அவற்றுக்கு எதிராக காங்கிரஸ் போராட்டங்களை நடத்தப் போவதில்லை' என்று வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருக்கிறாரே?

! 'நல்ல, திறமையான எதிர்க்கட்சி என்றால் ஆளும் கட்சியோடு எல்லாவற்றிலும் ஒத்துப் போவதுதான்' என்று புதிய அரசியல் தத்துவம் உருவாக்குகிறார்.



✦ கூடுதல் ஜால்ரா ஒலி



✦ மீண்டும் ஓட்ட...

● தா. சிந்துகுமார், திருவட்டார்.

? சமீபத்தில் உங்களைக் கோபப்பட வைத்த நிகழ்ச்சி?

! கோபப்படாமலே கண் சிவக்க வைத்த வைரஸ் கிருமி மீது கோபம் கோபமாய் வரத்தான் செய்தது!

● ஜெமால், செங்குன்றம்.

? 'அரசியலில் ஈடுபட்டதற்காக நான் 'என்றைக்குமே வருத்தப்படவில்லை' என

✦ பிள்ளையார் சுழி



✦ வருந்தவில்லை...



நீங்கள் கேட்டவை - தராசு

என்.டி.ஆர். கூறியிருக்கிறாரே?

! இவர் வருத்தப்படுகிறாரா இல்லையா என்பதா முக்கியம்? இவர் அரசியலில் புகுந்ததற்காகப் பிறர் (குறிப்பாக மக்கள்) வருந்துகிறார்களா இல்லையா என்பதல்லவா முக்கியம்!

● ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர் - 1.

? காவிரி பிரச்னைக்காகப் பாதயாத்திரை மேற்கொண்ட சுப்பிரமணிய சுவாமி பற்றி?

! ஆபரேஷன் வெற்றி; நோயாளிதான் குண மடையவில்லை.

● வாசுதேவன், கல்கத்தா.

? சமீபத்தில் படித்து மகிழ்ந்த செய்தி பற்றி?

! மகிழும்படியான செய்தி கூட நாளிதழில் வருகிறதா என்ன!

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? கீழ்த் தஞ்சை காயிதே மில்லத் ஆக பெயர் மாறி விட்டதால் இனி மயிலாடுதுறை துபாய் ஆக உருமாறித் தொடை தட்டுமா?

! எண்ணெய் வளம் நிறைந்த நரி மணம் பகுதி அங்கு இருந்தும் கூட அவ்வாறு நடக்க முடியாததற்குக் காரணம், மாநிலங்களுக்கு சுயாட்சி உரிமைகள் குறைவாக இருப்பதும் மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிந்திருப்பதும்தான்.

● எல். மாறன், மேல்பட்டி.

? ஹராரேயில் இந்தியப் பிரதமரும் பாக். பிரதமரும் சந்தித்து மிக நெருக்கமாக அளவளாவியிருப்பது பற்றி?

! 'பிரச்னைகளைத் தீர்த்து வைக்க மூன்றாவது மனிதர் மத்தியஸ்தம் தேவையில்லை, நாங்களே பேசித் தீர்த்துக் கொள்வோம்' என்று கூறிய அளவில் பிள்ளையார் சுழி போடப்பட்டிருப்பதாகக் கருதலாம். சரித்திரம் இனிமேல்தான் எழுதப்பட வேண்டும்.

● லீலா இராம், தக்கலை.

? மாவட்டங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போனால்...?

! பியூன் முதல் கலெக்டர் வரை, மேஜை - நாற்காலி முதல் கார் - கட்டடங்கள் வரை எல்லாம் இரட்டிப்பாகும். நிர்வாகச் செலவுகள் பன்மடங்காகும். 'சிறிய மாவட்டமாக இருந்தால் திறமையாக நிர்வாகம் பண்ணலாம்' என்பது மாயை. மாவட்ட ஆட்சியாளர்களின் திறமையைக் குறைத்து மதிப்பிடுவதாகும். தேசத்தின் இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் இதுபோன்ற வீண் செலவு வளர்க்கும் காரியங்கள் தவிர்க்கப்பட வேண்டியவை.



✦ புது அரசியல் தத்துவம்



✦ ஆபரேஷன் வெற்றி...

● எஸ். நாரம்புநாதன், சுரண்டை.

? தமது கட்சி எம். எல். ஏ. என்றும் பாராமல் அதிகாரியைத் தாக்கியதற்காக மதுராந்தகம் தொகுதி எம். எல். ஏ.வைக் கைது செய்ய உத்தரவிட்ட ஜெயலலிதாவைப் பாராட்டுவீர்களா?

! ஆட்சியில் இருப்பவர்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்காகப் பாராட்டுக்களைப் பெற முடியாது. கடமைகளுக்கும் மேம்பட்டுத் திறமைகள் காட்டும் போதுதான் பாராட்டுப் பெற முடியும்.

● டி. தியாகராஜன், சென்னை.

? இந்த ஆண்டின் சிறந்த அரசியல் ஜால்ராவாக யாரைக் கூறலாம்?

! வாழப்பாடியாருக்கும் ராமராஜனுக்கும் கடும் போட்டி. இந்தக் கணத்தில் ராமராஜன் ஜால்ரா ஒலி கூடுதலாகக் கேட்கிறது!

● டி. சந்திரன், ஈரோடு. ❑

? இரண்டாயிரம் அரசு பணி இடங்களுக்கு ஐந்து லட்சம் பேர் தேர்வு எழுதுகிறார்களே?

! இதுதான் நமது கல்வித் திட்டத்தில் உள்ள மிகப் பெரிய குறை. அரசு ஊழியத்தில், மேஜை, நாற்காலி அல்லது குறைந்தபட்சம் ஒரு ஸ்டூல் எதிர்பார்க்காமல், சுயமாகச் சம்பாதிக்கக் கற்றுத் தராத கல்வி, நமது நாட்டைக் குட்டிச்சுவராக்கிக் கொண்டிருக்கிறது.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
டி. சந்திரன்,
15, ஈசுவரன் கோயில் தெரு,
ஈரோடு - 638 001

வட்டமேஜை

மற்ற மாநிலங்களை விட பஸ் கட்டணம் அதிகம்!

◆ அண்மையில் தமிழக முதல்வர் தஞ்சைக்கு விஜயம் செய்தார். அவர் செல்லும் வழியெங்கும் பல நூறு கிலோ மீட்டர் நீளத்துக்குச் சாலையின் இருபுறமும் சவுக்கு மரங்களால் தடுப்பு வேலி அமைக் கப்பட்டிருந்தது. பத்து அல்லது பதினைந்து வீடுகளைக் கொண்ட சாலை ஓர குக்கிரா மங்களில் கூட மரத்தடுப்பு வேலி அமைக்க காண்ட்ராக்ட் விடப்பட்டதால், காலியான கஜானாவின் கையிருப்பு பல லட்சங்கள் குறைந்திருக்கும். ஒருநாள் கூத்துக்காக நான்கு நாட்கள் போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டது. பேருந்துகள் அனைத்தும் நகருக்கு வெளியே நிறுத்தப்பட்டு விட்டன. இதனால் எல்லாம் மக்களுக்கு எத்தனை கஷ்ட நஷ்டங்கள்!

தஞ்சை, வளர்மதி ஆசைத்தம்பி.

◆ நாளுக்கு நாள் தீவிரமாகி வரும் பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டிய அவசர அவசியத்தையும், அதற்கான சாத்தியக் கூறுகளையும், கிளிப் பிள்ளைக்குச் சொல்வது போல், இவ்வார தலையங்கத்தின் மூலம் எடுத்துரைத்திருக்கிறீர்கள். தலையங்கத்தின் ஒவ்வொரு வரியும் அனைவரின் எண்ணத்தையும் ஒட்டுமொத்தமாகப் பிரதிபலித்திருந்தது.

தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

◆ பஸ் கட்டண உயர்வை எதிர்த்து சமீபத்தில் சென்னையில் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம் நடத்தி ஏராள பஸ்களைத் தாக்கி உடைத்துள்ளார்கள். நம் நாட்டில் ஏதாவதொரு பிரச்னை என்றால் முதலில் தாக்கப்படுவது பஸ்கள்தாம். இதனால் போக்குவரத்துத் துறைக்குப் பெரு நஷ்டம் ஏற்படுகிறது. இறுதியில் நஷ்டத்தைத் தாங்க வேண்டியவர்களும் பொது மக்கள். எனவே எதிர்ப்பைப் பல்வேறு அமைதியான முறைகளில் வெளிப்படுத்த நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

திருவெண்ணெய்நல்லூர்,

எஸ். வைத்தியநாதன்.

◆ பெனிட்டோகுமாரின் ''பிடிமானங்கள்'' பெண்ணை மட்டும் பெற்றவர்களின், அந்தரத்தில் தொங்கும் அந்திமத்தைக் காட்டியது! ஜனவியின் ''மகள் வீட்டுப் படிகள்'' போற்றி வளர்த்த மகன் துரத்தி விடத் துடிக்க, மகளோ தாயின் வரவை எண்ணிப் பூரித்து மகிழ்கிறாள். ஒரே பிரச்னையை இரண்டு கோணங்களில் அணுகியிருந்த இரு கதைகளும் ஒரே இதழில் இடம்பெற்றிருந்தது தனிச்சிறப்பாக இருந்தது.

மகிழஞ்சேரி, கி. ரவிச்சந்திரன்.

◆ சேமியா, கார்பன் பேப்பர் போன்றவற்றுக்கெல்லாம் கூட ஐ. எஸ். ஐ. முத்திரை உண்டு என்பதைக் கல்கியில், அதுவும் இந்த தீபாவளி சமயத்தில் படித்த போது எனக்கொரு சந்தேகம் வந்தது. பட்டாசுகள், மத்தாப்புகள் போன்ற வாணவெடிகளுக்கெல்லாம் இந்த ஐ. எஸ். ஐ. முத்திரை இடையாதா? நான் சென்ற வருடம் வாங்கிய ஒரு பட்டாசுக் கட்டில் ஒரு வெடி கூட வெடிக்கவில்லை. கம்பி மத்தாப்புகளோ, எத்தனை தடவை கொளுத்தினாலும் அணைந்து அணைந்து போனது.

மங்கைநல்லூர், ஆர். சுகன்யா.

◆ தரமான தயாரிப்புகளில் தன் முத்திரையைப் பதிக்கும் டன்லப் நிறுவனம் ஸ்போர்ட்ஸ் கருவிகள் தயாரிப்பிலும் தன் முத்திரையைப் பதித்து, உலகத் தரத்திற்கு நிகராகத் தயாரிக்கிறது என்ற செய்தி மனத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

செம்போடை, வீ. சோழன்.

◆ ஜெயலலிதாவின் நூறு நாட்கள் ஆட்சி பற்றித் தமிழக அரசு வெளியிட்ட விளம்பரங்கள் மிக அதிகம். இந்த விளம்பரங்களை நிறுத்தியிருந்தாலே தமிழக பட்ஜெட்டில் துண்டு விழுவதைப் பல இலட்சங்கள் குறைத்து இருக்கும். பற்றாக்குறை பட்ஜெட்டில் இப்படிப்பட்ட விளம்பரங்கள் வேறு கொடுத்து மக்களின் வரிப் பணத்தைச் சீரழிக்கும் பழக்கத்தை ஆட்சியாளர்கள் நிறுத்த வேண்டும். இன்றைய தினத்தில் மக்களின் ஒவ்வொரு ரூபாயும் மக்களின் நலனுக்காகச் செலவழித்தால்தான் இந்தியா முன்னேறும்.

கோவில்பட்டி, கு. அ. ஈசாக் சுந்தரம்.


◆ தமிழக அரசு பஸ் கட்டணத்தை உயர்த்தி விட்டு, தன் செயலை நியாயப்படுத்த 8 கி.மீ.க்குத் தமிழ்நாட்டில் டவுன் பஸ்களுக்கு உள்ள புதிய கட்டணத்தையும் (ரூ.1.20) மற்ற மாநிலங்களில் உள்ள கட்டணத்தையும் ஒப்பிட்டுப் பத்திரிகைகள் மூலம் விளம்பரப் படுத்தியுள்ளது. இது கண்துடைப்பாகும். ஏனெனில் தமிழ் நாட்டில் நடைமுறையில், பேருந்து புறப்படும் இடத்திலிருந்து 8 கி.மீ. வரை உள்ள பல்வேறு இடங்களுக்கு ரூ. 1.20க்குப் பதில் ரூ. 1.40 முதல் ரூ.1.60 வரை வசூலாகும். தற்போது உள்ள ஸ்டேஜ்கள் அவ்வாறு அமைந்துள்ளன.

இவ்வாறு பார்க்கும் போது தமிழ்நாட்டில் டவுன் பஸ்களுக்கு உள்ள கட்டணம் மற்ற மாநிலங்களை விட அதிகமாகும்.

தூத்துக்குடி, ஸி. எஸ். குமார்.

உங்கள் செல்வம் :

நிதியைப் பெருக்க நூதனத் திட்டங்கள்



பி. வி. நரசிம்மராவ் ஆட்சி அமைந்த பிறகு, கட்டுப்பாடுகள், தொழில் துறையில் நீக்கப்பட்டதுடன் பொருளாதாரத்திலும் தளர்த்தப்பட்டுள்ளன. சர்வதேச நிதி நிறுவனத்தின் நிபந்தனைகளை அனுசரித்து, ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டது. இதனாலும் இதர பல நடவடிக்கைகள் காரணமாகவும் அயல்நாடுகளிலிருந்து மூலதனம் இந்தியாவுக்குள் வர வழி ஏற்பட்டிருக்கிறது.

நோயுற்றிருந்த பொருளாதாரம் நிமிர்ந்து உட்கார்ந்திருக்கிறது. சர்வதேச நிதி நிறுவனமும், இந்தியாவுக்கு உதவும் நாடுகளின் அமைப்பும் (AID INDIA CONSORTIUM) சேர்ந்து, ஆறு பில்லியன் டாலர் இந்தியாவுக்கு உதவுவதாக வாக்களித்துள்ளன. (ஒரு பில்லியன் என் பது ஆயிரம் மில்லியன் ஆகும்.) தென் மேற்குப் பருவ மழை பொய்க்காததால் இந்த ஆண்டு நல்ல விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது. இவையெல்லாம் சேர்ந்து இந்தியப் பொருளாதாரத்தில் மீண்டும் நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளன. தங்கள் நிறுவனங்களின் மூலதனத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று விரும்பிய பலர், இதற்காகவே காத்திருந்தது போல், இப்போதைய புதிய சூழலைப் பயன் படுத்திக் கொள்ள மூலதன மார்க்கெட்டில் நுழைந்துள்ளனர். சமீபத்தில் பல பிரபல மான பெரிய நிறுவனங்கள் பங்குகளை விநியோகிக்க, அவர்கள் கோரியதை விட அதிகமாகவே மூலதனம் திரண்டது.

கடந்த ஆகஸ்டு மாதத்தில் மட்டும் 71 கோடி மூலதனம் கோரி, பதினோரு நிறுவனங்கள் பங்கு மார்க்கெட்டுக்கு வந்தன. அத்தனை நிறுவனங்களுக்கும் தேவைக்கதிகமாகவே நிதி திரண்டது. அடுத்த ஆறு மாதங்களுக்குள் மேலும் 500 நிறுவனங்கள், 6000 கோடி நிதிகோரி பிரதான பங்கு மார்க்கெட்டுக்கு வரும் என்று ஒரு கணிப்பு.

இவற்றில் ஏற்கெனவே மிகவும் பிரபலமான நிறுவனங்கள் பலவும் உள்ளன; ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரி, பாம்பே டையிங், செஞ்சுரி டெக்ஸ்டைல்ஸ், ஐஸிஐஸிஐ, குஜராத் அம்புஜா, ஸ்பிக், ஹீரோஹோண்டா போன்றவை. வேறு சில நிறுவனங்கள் தாங்கள் திரட்டப் போகும் மூலதனம் பற்றிய விவரங்களை தந்துள்ளன :

அதுல் பிராடக்ட்ஸ்	- 35 கோடி
கிர்லோஸ்கர் எலக்டிரிக்	- 7 கோடி
நிக்கொலஸ் லாபரெட்டரி	- 31 கோடி

இவை தவிர, நிதி நிறுவனங்களே பங்குகள் விநியோகித்து பிரதான மார்க்கெட்டில் மூலதனம் திரட்ட உள்ளன. IDBI என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்திய தொழில் அபிவிருத்தி வங்கி, மூன்று விதமான புதுமையான திட்டங்களுடன் மக்களை அணுகுகிறது.

முதலாவது திட்டம் :

மிகுதியாகத் தள்ளுபடி செய்யப்பட்ட பத்திரங்கள். Deep Discount Bonds :

இதன்படி நீங்கள் ரூ 2700 கொடுத்து ஒரு D D B பெறலாம். இது 25 ஆண்டுகளுக்குப் பிறகு உங்களுக்கு ஒரு லட்ச ரூபாய் பெற்றுத் தரும். இடையில் ஓர் அவசரத்துக்குப் பத்திரங்களைக் காசாக்க விரும்பினால் செய்யலாம். அப்போது அதன் மதிப்பு பின்வருமாறு இருக்கும் :

5 ஆண்டுகளுக்குப் பிறகு	ரூ	5700
10 ஆண்டுகளுக்குப் பிறகு	ரூ	12000



தயாரிப்பாளர் : "அமைச்சரோட கார்ல வச்சிருக்கிற குண்டை கதா நாயகன் எப்படி வெடிக்காம எடுக் கிறார்ங்கறதை, புதுமையாச் செய்ய, இருபது பேர் உட்கார்ந்து டிஸ்கஸ் செஞ் சோம்."

நண்பர் : . "என்ன முடிவு பண்ணி னீங்க?"

தயாரிப்பாளர் : ஒண்ணும் தோணலை. குண்டு வெடிக்கறதா முடிவு பண்ணிட்டோம்.

- ராஜு.

15 ஆண்டுகளுக்குப் பிறகு	ரூ	25,000
20 ஆண்டுகளுக்குப் பிறகு	ரூ	50,000
25 ஆண்டுகளுக்குப் பிறகு	ரூ	1,00,000

இரண்டாவது திட்டம் :

ஒவ்வொன்றும் ரூ 5000 மதிப்புள்ள பத்திரங்கள் வழங்கப்படும். இதற்கு வட்டி 15 சதம். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு பத்திரம் காலாவதியாகிப் பணம் கைக்கு வரும். இந்தப் பத்திரங்களை இரண்டு பகுதிகளாக விநியோகிக்கின்றனர் :

பகுதி 1 அசல் ரூ 5000/-

பகுதி 2 வட்டியும் போனஸூம் சேர்த்து ரூ 16,500/-

இந்த இரு வேறு மதிப்புள்ள பத்திரங் களையும் ஓர் அவசரத் தேவைக்கு பங்கு மார்க்கெட்டில் விற்கலாம். அன்றைய அதன் மார்க்கெட் மதிப்புப்படி பணம் பெற லாம்.

மூன்றாவது திட்டம் :

இது கடன் பத்திரங்கள் போன்றது. பத்து வருஷங்களில் பணம் திரும்பி வரும். வட்டி 15 சதம். ஒவ்வொரு பத்திரமும் ரூ 5000 மதிப்புடையது. என்றாலும் பணம் திருப்பித் தரப்படும் போது 5 சதம் கூடுத லாகக் கிடைக்கும். அதாவது ரூ 5000க்கு பதில் ரூ 5250 கிடைக்கும். வட்டி, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தரப்படும்.

இந்த மூன்று திட்டங்களுக்கும் மக்க ளிடையே நல்ல வரவேற்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றாலும் முதல் திட்டமே அனைத்திலும் வெற்றிகரமாகச் செயல்படும் என்று கருதப்படுகிறது!

- வி. கோபாலன்

சிக்ஸர்!



ஷார்ஜாவில் நமது கிரிக்கெட் அணி சக்கைப் போடு போடுகிற இந்தச் சமயத்தில் உங்கள் உள்ளத்தில் கிரிக்கெட் நினைவுகள் அலைமோதிக் கொண்டிருக்குமே! நீங்கள் (எந்த வயதிலும்) ஆடிய அல்லது பார்த்த கிரிக்கெட் பற்றி ரசமான நிகழ்ச்சியைத் தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள். சிக்ஸர் அடிப்பது போல் சுவாரஸ்யமாக எழுதப்பட்ட சிறந்த அனுபவத்துக்கு பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகை பரிசு. பிரசுரமாகும் இதர துணுக்குகளுக்குச் சன்மானம். "சிக்ஸர்" என்று தலைப்பிட்டு, "கல்கி, சென்னை - 600 032" என்ற விலாசத்துக்கு மட்டுமே அனுப்ப கடைசி தேதி : 11.11.91

50 கல்கி

பாலு ஜுவல்லர்ஸ்

பொன் விழா ஆண்டு :

தங்க நகைப் பரிசுத் திட்டம் - 8

கேள்வி சீரியஸ்; பதில் ஹ்யூமரஸ்!

மாணவர்கள் அரசு பஸ்களைத் தாக்குவதேன்?



படம் :

பேராசிரியர் பெரியார்தாசன் :

கார், லாரிகளைத் தாக்கினால் சொந்தக்காரர்கள் சண்டைக்கு வந்து விடுவார்களே! அதனால்தான் மாணவர்கள் அரசுக்குச் சொந்தமான பஸ்களைத் தாக்குகிறார்கள்! சரி, ரயிலைத் தாக்கலாமே என்றால், அது கல்லூரிகளுக்கு வெகு அருகில் ஓடுவதாக இல்லையே! ஆக, கல்லூரி வாயிலுக்கு வந்தவுடனேயே, 'என்னைத் தாக்கு!' என்னை தாக்கு!' என்று தானாகவே வந்து நிற்பது பஸ்தான். மேலும், ஏறியவுடன் 'முன்னே போ முன்னே போ'; 'படியில் நிற்காதே' என்று கண்டக்டர்கள் விரட்டுவது மாணவர்களுக்கு மகா எரிச்சலைத் தராதா? நமக்கென்ன வாழ்க்கையில் முன்னேறத் தெரியாதா? முதல் படியிலேயே நின்று விடுவோமா?' என்று வெறுப்படைய மாட்டார்களா? 'மாணவிகளிடம் விஷமம் செய்வோம் என்று தானே கண்டக்டர் நம்மை முன்னே போகச் சொல்கிறார்' என்று கருதிச் சாதுவாக இருக்க விரும்பும் மாணவர்கள் கூட அதில் கோபம் அடைகிறார்கள்.

எனவேதான் மாணவர்கள் இந்த எரிச்சல், கோபம் இவற்றை வெளிக்காட்ட பஸ்களையே பயன்படுத்துகிறார்கள். இன்

இப்போது ஏன் தேர்தலுக்கு நிற்பதில்லை?

எஸ். வி. சேகர் :

தேர்தல் பிரசாரத்துக்குப் போனா, கொழந்தைங்களுக்குப் பேரு வைக்கச் சொல்றாங்க. ஒரு நாலு வயசுக் கொழந்தையக் கொண்டு வந்து 'இதுக்குப் பேரு வைங்க!'ங்கறாங்க. 'ஏய்யா, இத்தனை வருஷமா பேரே இல்லாமயா கூப்பிட்டுக்கிட்டு இருந்தீங்க?'ன்னு கேட்டேன். 'இல்லீங்க. தேர்தல் பிரசாரத்துக்கு இங்க யார் வந்தாலும் பேரு வைக்கச் சொல்றது வழக்கங்க... இத்தோட அம்பது பேரு ஆயிருச்சுங்க!'ன்னு சர்வசாதாரணமாச் சொல்றாங்க. அலுத்துப் போச்சு எனக்கு.

என்னோட சின்னம் பானையா இருந்ததால பானைல தண்ணி வைக்க முடியாம, 'பூத்'ல இருந்த எல்லாரும் தண்ணியே குடிக்க முடியாம கஷ்டப்பட்டாங்க. அந்தப் பாவம் வேற நமக்கு எதுக்குங்க?

இன்னொண்ணு : நம்ம ஜனங்க மத்தியில, சுயேச்சையா நின்னு ஜெயிக்கறது அவ்வளவு சுலபமில்லே. ஏன்னா, ஏற்கெனவே ஒரு கட்சியிலேர்ந்து தகராறு பண்ணித் துரத்தப்பட்டவங்கதான் வேற வழி இல்லாம சுயேச்சையா நிக்கறாங்கன்னு அவங்களுக்கு ஒரு எண்ணம்!

வீட்டுல சாதாரணமா வேலைக்கு யாரை யாவது வைக்கணும்னாக் கூட நல்லா விசாரிச்சுட்டுத்தான் வைக்கறோம். தேர்தல்ல நின்னு ஓட்டுக் கேட்கப் போனா, நாம யார், என்ன, ஏதுன்னு தெரிஞ்சுக்கறதுக்கு முன்னாடியே ஆரத்தி எடுக்கறதென்ன, பொட்டு வைக்கற

னொரு காரணமும் இருக்கிறது. பல பஸ்கள் தற்போது ஓட்டை உடைசலாக இருப்பதால் பஸ்களின் உள்ளேயும் மழை பெய்கிறது. அதை அரசும் மாற்றுகிற வழியாய் இல்லையென்பதால், இப்படி பயங்கர சேதம் விளைவித்தாலாவது அந்த வழித்தடத்தில் புது பஸ்களை விட மாட்டார்களா என்கிற பொதுநல மனப்பான்மை மாணவர்களுக்கு மட்டும் இருக்கக் கூடாதா, என்ன?

எல்லாவற்றிற்கும் மேலாகத் தங்கள் கோரிக்கைகளை - குமுறல்களை - அரசுக்குத் தெரிவிக்கவே பஸ்களைப் பயன்படுத்துகிறார்கள் மாணவர்கள். அதாவது பஸ்கள் என்பன அவர்களைப் பொறுத்தமட்டில், ஆராய்ச்சி மணி. அதனால்தான் (கல்லால்) அடிக்கிறார்கள்.

குறைகளை வெளியிட வேறு வழிகள் உள்ளன என்பதும், பஸ்ஸை நொறுக்குவது பண்பாடு அல்ல என்பதும், நொறுக்கப்படுகின்ற பஸ் அவர்களுக்கே சொந்தமான பஸ் என்பதும் மாணவர்களுக்குத் தெரியாதா என்ன? அப்படி தெரியவில்லை என்றால் அது யார் குற்றம்? கல்வித் திட்டம் வகுத்தவர்களின் குற்றம்தானேயொழிய, மாணவர்களைக் குறை கூறலாமா?

எனவே இந்த விழிப்புணர்ச்சியை கல்வியாளரிடம் ஏற்படுத்தும் மாணவர்களை வாழ்த்தத்தானே வேண்டும்!

தென்ன, கால்ல விழுந்து கும்பிடறதென்ன... எனக்குச் சுத்தமாப் பிடிக்கல்லே இது.

நம்மோட ஜனநாயக அமைப்புல, பணம் அதிகமாச் செலவழிக்காம இப்பல்லாம் தேர்தல்ல ஜெயிக்கறது கஷ்டம். பணம் செலவழிக்கறதுன்னா, ஓட்டுப் போடறவங்களுக்கு 'ஏதானும்' குடுக்கறதையும் சேர்த்துத்தான் சொல்றேன். நம்ம ஜனங்க லஞ்சம் கொடுத்துத்தான் பழகியிருக்காங்க. வாங்கவும் பழக்கணுமா?

இப்பச் சொல்லுங்க, இனிமே நான் எதுக்கு எலக்ஷன்ல நிக்கணும்?





நாடகத்தில் ஹீரோ— சினிமாவில் ஏன் ஸீரோ?

'காத்தாடி' ராமமூர்த்தி :

சினிமாவுல நான் கொடிகட்டிப் பறக்க ஆரம்பிச்சா, இன்னிக்கு 'ஓகோ'ன்னு இருக்கற கமல், ரஜினிக்கெல்லாம் சான்ஸ் மட்டுமில்லே, மார்க்கெட்டே போயிடும். ரகுமான், ரகுவரன் எல்லாரும், 'நாடகத்தோட இருந்துட்டுப் போறதுதானே, ஏன் எங்க பொழைப்பைக் கெடுக்கணும்?'னு சண்டைக்கு வருவாங்க. எனக்குச் சண்டையே பிடிக்காது.

மரம், செடி-கொடி, புல்பூண்டு எல்லாத்தையும் சுத்தி ஹீரோயினைத் துரத்தி ஓடணும். ஹீரோயினைத் தூக்கித் தட்டாமாலை சுத்தணும். நான் என்ன எஸ்.பி.பி.யா? இடுப்புப் பிடிச்சுட்டா, மேற்கொண்டு ஷூட்டிங் கான்சல் ஆகி, தயாரிப்பாளருக்குத்தானே ந ஷ் ட ம்? எதுக்கு சார் வம்பு?

அது இருக்கட்டும். சின்னத் திரை - ஐ மீன் டீவி - உங்களுக்கு சினிமாவை விட இன்னிக்கு பவர்ஃபுல்லா இருக்குன்னு தெரியாதா? அதிலே நிறைய ஹீரோ ரோல்லதானே வரேன்? என் கூட அதிலே சினிமா ஹீரோ யாரும் போட்டிக்கு வராத போது, நான் மட்டும் அவங்க கூட மோதறது எப்படி சார் நியாயம்?

இனிமே டிஷ் ஆன்டென்னா டீவி, கேபிள் டீவி, நம்ம ஒரிஜனல் தூர்தர்ஷன் எல்லாத்திலேயும் ஸ்க்ரீன்ல 'காத்தாடி' ஓசர ஓசரப் பறக்கற போது, சினிமா ஹீரோ எல்லாம் ரொம்ப வருத்தப்படப் போறாங்க பாருங்க!

இன்னொரு முக்கியமான விஷயம் : சினிமா ஹீரோன்னா கொஞ்சம் அழகா இருக்கணும், முகவெட்டு இருக்கணும். எனக்கு ஷேவ் பண்ணிக்கும் போதுதான் முகவெட்டே வரது! முகவெட்டு, முகவெட்டுன்னு வெட்டிக் கொண்டே இருந்தா மூஞ்சியே இல்லாம போயிடுமே!



"ஹலோ, ஹலோ... தீயணைக்கும் படையா? இங்க எங்க ஜவுளிக் கடையில், ஏழெட்டுப் பெண்கள், புடைவைக் குவியலுக்குள் சிக்கிக் கிட்டாங்க சார்... பிளீஸ் சீக்கிரம் வந்து காப்பாத்துங்க சார்...!"

- சுரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

● ● ● ● ● ● ● ●

புரட்சித் தலைவிக்கு நோபல் பரிசு!

இந்த ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட போது, அவர் சிறையில் இருந்தார். இன்னமும் சிறையில்தான் இருக்கிறார். அவர்தாம் ஜனநாயக உரிமைகளுக்காக, அகிம்சை முறையில் போராடிய பர்மா நாட்டு எதிர்க்கட்சித் தலைவி அங் ஸான் ஸூ க்யி.

அப்பா முன்னாள் சுதந்திரப் போராட்ட வீரர் அங்ஸான். தில்லியில் கல்லூரிப் படிப்பை முடித்த க்யி முதலில் அரசியலையே வெறுத்தாலும், நோயுற்ற அன்னையைக் கவனித்துக் கொள்ள 88-ல் மையன்மார் (பர்மா) திரும்பிய போது மனம் மாறினார்.



1962-லிருந்து தொடர்ந்து வரும் ராணுவ ஆட்சியிலும் மையன்மாரின் பல பகுதிகளையும் ஒருங்கிணைத்து, பல இனத்தவரையும் ஒன்று சேர்த்து, முறையான எதிர்க்கட்சி அரசியல் உருவாகக் காரணமாக இருந்தவர் க்யிதான். அதனாலேயே 89-ல் சிறைப்படுத்தப்பட்டார்.

கணவர் மைக்கேல் ஆரிஸ் ஹார்வர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர். இங்கிலாந்துக்காரர். இரண்டு பையன்கள். ''அவளை 89 டிசம்பர் கிறிஸ்துமஸின் போது பார்த்ததுதான். அதற்கப்புறம் ஏதும் தொடர்பே இல்லை!'' என்று அங்கலாய்த்திருக்கிறார். ''பெருமையும் சந்தோஷமும் தரும் செய்தி அல்லவா இது!'' என்று அவர் இந்தப் பரிசு பற்றி மகிழ்ந்து போய்ச் சொன்னாலும், மனைவியைப் பிரிந்து வாழும் சோகம் தெரிந்தது அந்தச் சந்தோஷத்தில்.

'ஆசியாவில், அசாதாரணமான முறையில் ஜனநாயக உரிமைகள் பெறப் போராடியவர்களில், சமீப கால சரித்திரத்திலேயே மிக முக்கியமானவர்' என்றும் 'அரசியல் சாதுர்யமும், நிர்வாகத் திறனும் ஒருங்கே பெற்றவர் க்யி' என்றும் நோபல் பரிசுக் குழு பாராட்டியிருக்கிறது இந்த 46 வயதுப் பெண்மணியை.

— எஸ். வி. என்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.



DIPR/2248/MS/91/FAME(2)

திருமண முறை எதுவானாலும்...
திருமணப் புடவை கோ-ஆப்டெக்ஸ்

● தூய பட்டு ● அசல் சரிகை

20%
தள்ளுபடி



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ சென்னை: தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, 350, பாந்தியன் சாலை, எழும்பூர் ★ சேலம்: பட்டு மாளிகை, 57, தேரடி ★ ஈரோடு: பவனம், 147, நேதாஜி சாலை. ★ கோவைப்புதூர்: தாமரை பட்டு மாளிகை, 314, 315, ராஜ வீதி. ★ மதுரை: பட்டு மாளிகை, 36, வெங்கலக் கடைத் தெரு ★ திருநெல்வேலி: பட்டு மாளிகை, 59, 59-A வடக்கு ரத வீதி ★ திருச்சி: அமுதசுரபி, 12, 14, தேரடிக் கடைத்தெரு ★ தஞ்சாவூர்: பட்டு மாளிகை, 182, ராஜராஜ சோழன் வணிக மையம் ★ பெங்களூர்: ரேஷ்ம் தாரா, சபீனா பிளாஸா, முதல் மாடி, 84,85, இன்பன்ட்ரி சாலை. ★ ஹைதராபாத்: 16,17, புது மார்க்கெட், திலக் சாலை, அபிட்ஸ்.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

இதயத்திற்கு இதமானது

திருமதி ஷீலா பால், BSc., D.N.D.,
உணவியல் வல்லுநர் கூறுகிறார்.

"நல்லெண்ணெய் இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கின்றது ஆகவே தான் நமது முன்னோர்கள் அதை "நல்ல எண்ணெய்" (தமிழ்) "மஞ்ச்சி நூனெ" (தெலுங்கு) என்று அழைத்தனர். இது உடல் ஆரோக்கியத்திற்கு பாதுகாப்பானது என்பதால்தான் தென்னிந்தியர்கள் சமையல் எண்ணெய்யாகப் பயன்படுத்துகின்றனர்."

Sheila Paul



Mrs. Sheila Paul B.Sc.,
Diploma in Nutrition & Dietetic
Senior Dietition
Madras



இதயம் நல்லெண்ணெய் தயாரிப்பில் தரத்தில் சிறந்த எள் மட்டுமே உபயோகிக்கப்படுகின்றது. பிஞ்சு எள் மற்றும் பொக்கு முழுவதுமாக நீக்கப்படுகின்றது. ஆகவே இதயம் நல்லெண்ணெய் பொங்குவதில்லை. பூரி, வடை, பஜ்ஜி எது வேண்டுமானாலும் தயார் செய்யலாம்.



இதயம் சுகமாக்கும் எதையும் சுவையாக்கும்

இதய
நல்லெண்ணெ